# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 | கதிர் 88 | மாசி 10ஆம் நாள் | வியாழக்கிழமை | 22 பெப்ரவரி 2018 | வள்ளுவர் ஆண்டு 2049


கற்பனைக்கு எட்டாத உறைபனி



விரிவு பக்கம் 14

அரசியல் கருத்தொற்றுமைக்கு வருமாறு கேட்ட

# ரெலோவின் அழைப்பை நிராகரித்தது முன்னணி

## தேர்தல் முடிவால் சிறிகாந்தாவுக்கு பதற்றம் என்றும் விமர்சனம்

யாழ்ப்பாணம், பெப். 22
கட்சி அரசியலுக்கு அப்பால் - சிங்களப் பேரினவாதத்துக்கு எதிராக அரசியல் கருத்தொருமைப்பாட்டுக்கு வருமாறு அனைத்துத் தமிழ்க் கட்சிகளுக்கும் ரெலோ அமைப்பு விடுத்த அழைப்பை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸை உள்ளடக்கிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நிராகரித்து ள்ளது.
உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பெற்ற வெற்றியைப் பார்த்ததில் ஏற்பட்ட பதற்றத்தில் ரெலோ செயலர் ந. சிறிகாந்தா இந்த அழைப்பு » 06

லெபனான் சென்ற இலங்கை

## இராணுவ அதிகாரியை இடைநிறுத்தியது ஐ.நா.

மனித உரிமை மீறல் தொடர்பில் மீளாய்வு செய்யப்படுவதால்

கொழும்பு, பெப். 22
லெபனானில் ஐ.நா. அமைதிப்படை நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவிருந்த லெப். கேணல் ஹேவகே என்ற இராணுவ உயர் அதிகாரியை ஐ.நா. தடுத்து நிறுத்தியுள்ளது. » 06

## மாணவியை வன்புணர்ந்த அதிபருக்கு கடூழியச் சிறை

யாழ். மேல் நீதிமன்றம் விதித்தது

யாழ்ப்பாணம், பெப்.22
பாடசாலையில் வைத்து 9 வயதுச் சிறுமியை வன்புணர்வுக்குட்படுத்திய அதிபருக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்தது » 06

## நேர்முகத் தேர்வை தடுத்து நிறுத்திய ஊழியர் சங்கம்

யாழ். பல்கலையில் நேற்றுப் பதற்றம்

யாழ்ப்பாணம், பெப் .22
யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் ஊழியர்கள் உள்வாங்கல் முறையில் சீரான தீர்மானம் எடுக்காமல் நேர்முகத் தேர்வு நடத்தப்படுகின்றது » 06

## சிங்கள அரசை காக்கவே சம்பந்தன் தமிழீழ உரை

விமர்சிக்கிறார் முன்னாள் எம்.பி. கஜேந்திரன்

யாழ்ப்பாணம், பெப். 22
சிங்கள அரசைக் காப்பாற்ற கூட்டமைப்பினர் சிங்கள வர்களின் முகவர்க ளாகவே செயற்பட்டு வருகின்றார்கள் என் » 06

## ஈ.பி.டி.பியோடு கூட்டில்லை; ஆதரவு தந்தால் பார்க்கலாம்

சபைகளின் ஆட்சி விடயத்தில் இப்படிச் சொல்கிறது முன்னணி

யாழ்ப்பாணம் பெப் 22
வடக்கில் உள்ளூராட்சி சபைகளில் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஈ.பி.டி.பி. கட்சியினருடன் கூட்டு வைக்கமாட்டோம்; ஆனால் அவர்களாகவே ஆதரவு தந்தால் அப்போது » 06

## விடாது தொடர்கின்றது ரூ.2 கோடிப் பிரச்சினை

சபையில் சிறப்புரிமை பிரச்சினை எழுப்பினார் சரா எம்.பி.

கொழும்பு, பெப். 22
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் 15 பேர் வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களிக்க 2 கோடி ரூபா இலஞ்சம் வாங்கினர் என்று தேர்தல் காலத்துப் பொய் தொடர்பில், நாடாளுமன்றத்தில் நேற்றுச் சிறப்புரிமை பிரச்சினை எழுப்பப்பட்டுள்ளது.
தேர்தல் முடிந்த » 24



போர் முடிந்து 9 ஆண்டுகளின் பின்னர்

# பயணிகள் பஸ்ஸில் குண்டு வெடிப்பு

## யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற போது சம்பவம்

19 பேருக்குக் காயம்; இருவரின் நிலமை மோசம்

கொழும்பு, பெப்ரவரி 22
போர் முடிந்து 9 ஆண்டுகளின் பின்னர் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று நேற்றுத் தென்னிலங்கையில் நடந்துள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து விடுமுறையில் சென்ற இராணுவத்தினர், வான் படையினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் பயணித்த தனியார் பேருந்திலேயே குண்டு வெடித்துள்ளது. » 06

3ஆவது ஆசனத்தில் வெடித்தது! » 24

சிப்பாயின் கைக்குண்டே காரணம் » 06



பயங்கரவாத செயல் அல்ல » 23

பயணியின் கைக்குண்டே வெடித்தது » 23

## அரசியல் கட்சி ஆரம்பித்தார் கமல்

சென்னை, பெப். 22
தமிழ் திரையுலக முன்னணி நடிகரான கமல், நேற்று உத்தியோக பூர்வமாக அரசியலில் களமிறங்கினார். தனது கட்சிக்கு » 24

## பாதுகாப்பு அச்சுறுத்தல்

மகிந்த அணி தெரிவிப்பு

கொழும்பு, பெப். 22
முன்னாள் அரச தலைவர் மகிந்த » 24







சைட்டம் மாணவர்கள்

## பாதுகாப்பு பல்கலைக்கழக மருத்துவபீடத்துடன் இணைப்பு

கொழும்பு, பெப். 22
மாலபே, சைட்டம் தனியார் மருத்துக் கல்லூரி மாணவர்களை கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்கு இணைத்துக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுப் பிற்பகல் அரச தலைவர் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
சட்டமா அதிபர், >> 25

# கூட்டு அரசு தொடர்கிறது

## நாடாளுமன்றில் நேற்று அதிகாரபூர்வ அறிவிப்பு

கொழும்பு, பெப்ரவரி 22

ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் இணைந்து உருவாக்கிய கூட்டு அரசு இன்னமும் நடைமுறையில் இருப்பதாகவும், அது தொடரும் என்றும் நாடாளுமன்றத்தில் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.
தலைமை அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் >> 25



## கூட்டு அரசு முடிவுக்கு எதிர்கட்சித் தலைமை எமக்கு தரவேண்டும்

### மகிந்த மீண்டும் வலியுறுத்து

கொழும்பு, பெப். 22
கூட்டு அரசின் புரிந்துணர்வு ஒப்பந்த காலம் நிறைவடைந்துள்ளமை மிகத் தெளிவாகிறது. அது தொடர்பில் சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டும். எதிர்க்கட்சித் தலைமை எமக்கு வேண்டும். இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார். >> 25

## தமிழில் அறிக்கை தரவில்லை; சுமந்திரனின் குற்றச்சாட்டு ரணிலைப் பாதுகாப்பதற்கே

### இப்படிச் சொல்கிறார் கஜேந்திரன்

யாழ்ப்பாணம், பெப். 22
ஐக்கிய தேசியக் கட்சியின் எடுபிடியாக செயற்படும் கூட்டமைப் பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தலைமை அமைச்சர் ரணிலை பிணைமுறி விவாதத்தில் இருந்து காப்பற்ற வேண்டும் என்ற நோக்கிலேயே பிணைமுறி அறிக்கை தமிழில் தரப்படவில்லை என்பதைச் சாட்டாக முன்வைத்துள் ளார். இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலர் செ.கஜேந்திரன் குற்றம்சாட்டினார்.
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது.
மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பான அறிக்கை நாடாளுமன்றில் வழங்கப்பட்டபோது அங்கு தமிழ் மொழி >> 25

## மோசடி அறிக்கைகள் மீதான விவாதத்தை தடுக்க வேண்டிய அவசியம் எமக்கில்லை

### சுமந்திரன் எம்.பி.பதிலடி

கொழும்பு, பெப். 22
பிணைமுறி அறிக்கை குறித்து சபையில் முன்வைக்கவிருந்த காரணிகளை தடுக்க ஆளும் தரப்பும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து செயற்பட்டன. இது திட்டமிட்ட சதியென மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயகார குற்றம் சுமத்தினர். எனினும் நான் முன்வைத்த கோரிக்கை நியாயமானது, சட்ட விதிமுறைக்கு ஏற்றதாகவே அமைந்துள்ளது என்று குறிப்பிட்ட எம்.ஏ.சுமந்திரன், வாசுதேவ நாணயக்காரவின் குற்றச்சாட்டை நிராகரித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்ததாவது,
மத்திய வங்கி பிணைமுறி ஆணைக்குழு அறிக்கை மற்றும் பெரிய நிதி மோசடி குறித்த >> 24

## நாடாளுமன்றில்



## கூட்டு அரசு தொடரும் உடன்படிக்கை சபையில் சமர்பித்தேயாகவேண்டும்

### மகிந்த அணி விடாப்பிடி

கொழும்பு, பெப். 22
கூட்டு அரசு தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமாயின் அது குறித்த இரண்டு கட்சிகளினதும் புரிந்துணர்வு உடன்படிக்கையை சபையில் சமர்ப்பித்து நாடாளுமன்ற அனுமதியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று மகிந்த அணி நாடாளுமன்றக்குழுத் தலைவர் தினேஸ் குண >> 25

## வாய் வார்த்தைகளில் கூட்டை நீடிக்க முடியாது

### மக்கள் விடுதலை முன்னணி தெரிவிப்பு

கொழும்பு, பெப். 22
கூட்டு அரசு தொடர வேண்டும் என்றால் மீண்டும் நாடாளுமன்றத்தின் அனுமதியினைப் பெறவேண்டும். வாய் வார்த்தைகளின் மூலம் கூட்டு அரசை நீடிக்காது உடன்படிக்கை என்னவென்பது வெளிப்படுத்தப்பட வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திசாநாயக தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி கருத்துத் தெரி >> 25

## இனி நான் எதுவும் செய்ய முடியாது

### கைவிரித்தார் கரு

கொழும்பு, பெப். 22
கூட்டு அரசில் அங்கம் வகிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்க சுதந்திரக் கட்சியும் தொடர்ந்து பயணிப்பதாக இணக்கம் தெரிவித்துள்ள நிலையில் இதற்கு அப்பால் என்னால் எதுவும் செய்ய முடியாது. எனினும் இது தொடர்பில் காணப்படும் முரண்பாடுகள் குறித்து நான் >> 25

## கூட்டு அரசு 2 ஆண்டுகளுக்கு என்று எங்கும் சொல்லவில்லை

### அஜித் பீ பெரேரா வாதம்

கொழும்பு, பெப். 22
நாடாளுமன்றத்தில் 2015 ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட பிரேரணையில் கூட்டு அரசு இரண்டு ஆண்டுகள் தான் இருக்கும் என்று எந்தவொரு இடத்திலும் கூறப்படவில்லை என்று மின்வலு மற்றும் மீள்புத்தாக்க சக்தி பிரதி அமைச்சர் அஜித் பீ பெரேரா சபையில் தெரிவித்தார். >> 25

## புதிய அரசமைப்பை தோற்கடிப்பதே எங்களின் பிரதான இலக்கு

### மகிந்த அணி சூளுரை

கொழும்பு, பெப். 22
பொதுத் தேர்தல் நடைபெற்று புதிய அரசு தெரிவாகும் வரையில் கூட்டு எதிர்க்கட்சி 'அரசில் அங்கம் வகிக்கப்போவதில்லை. புதிய அரசமைப்பைத் தோற்கடிப்பது மற்றும் தேசிய சொத்துக்களை விற்பனை செய்யும் நடவடிக்கைகளைத் தடுப்பதற்காகவே எதிர்க்கட்சியில் அங்கம் வகித்துக்கொண்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசுக்கு ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்துள்ளோம்.
இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொகுகே தெரிவித்தார்.
மகிந்த அணியின் செய்தியாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசுக்கு கூட்டு எதிர்க்கட்சி தாமாக முன்வந்து ஆதரவு தெரிவிப்பதாக குறிப்பிட >> 25

## அரசியல் சுனாமி முடிவுக்கு வந்தது

### அமைச்சர் ராஜித தெரிவிப்பு

கொழும்பு, பெப். 22
அரசியல் சுனாமி முடிவடைந்து விட்டது. ஆனால் அவ்வளவு பெரிய சுனாமியல்ல. ஊடகங்கள்தான் அதனை பெரிய அரசியல் சுனாமி எனக் காட்டிக் கொண்டிருந்தன. ஆனால் அப்படி ஒன்றும் இல்லை. எல்லாம் வழமையாக நடக்கின்றது. இவ்வாறு அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித தெரிவித்தார்.
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று இடம் பெற்றது. அந்தச் சந்திப்பில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
**கேள்வி:** தேர்தல்களுக்குப் பின் தொடர்ந்த முரண்பாடுகள் தீர்ந்துவிட்டனவா?
**பதில்:** மிகப்பெரிய இரண்டு >> 25

# போரை விடவும் தற்போது விபத்தால் அதிக இறப்புகள்

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், பெப்.22**

**போர் நடந்தபோது உயிரிழந்தவர்களை விடவும் தற்போது வீதி விபத்துக்களால் அதிகமானவர்கள் உயிரிழக்கின்றனர்.**

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாகாண பிரதிப் பிரதம செயலர் அலுவகலகத்தின் வழிகாட்டலில் (ஆளணியும் பயிற்சியும்) போக்குவரத்து ஒழுங்குகள் மற்றும் வீதி விபத்துக்கள் தொடர்பான திணைக்கள சாரதிகள் மற்றும் சாரதி பயிற்சி பாடசாலைகளின் அலுவலகர்களுக்கான கருத்தரங்கு யாழ்ப்பாண பொது நூலகத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அதி வேகமான வாழ்க்கையிலே வேகமாக பயணிக்க வேண்டியவர்களாக நாம் உள்ளோம். அதைப்போன்று வாகனத்தையும் நாம் வேகமாக செலுத்துகின்றோம். நோயால் வயது வந்தவர்கள் இறப்பது இயற்கை. அதிக வேக வாகனம் செலுத்துவதால் இளைஞர்கள், குழந்தைகள் இறப்பதுக்கு நாமே காரணமாகின்றோம். ஒரு விபத்தின் போது குடுப்பத்தின் தலைவர் இறந்துவிட்டால் அந்த குடும்பத்தின் நிலை என்னவாகும்?. அன்று போர் காலத்தில் இறந்தனர். அதை விட இப்போது வீதி விபத்தால் அநேகர் இறக்கின்றனர். அதற்கு காரணம் எமது வேகம். வாழ்க்கையின் வேகத்துக்கு நாம் ஓட வேண்டும். ஆனால் வாகனத்தை வேகமாக ஓடக் கூடாது. என்றார்.

நிகழ்வில் பொலிஸ் அதிகாரிகள், பிரதம செயலக உத்தியோகத்தர்கள், சாரதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-ரி)



## கைக்குண்டுகள் மீட்பு

வவுனியா.பெப்.22

வவுனியாவில் இராணுவத்தினரின் பயன்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட தனியார் காணியிலிருந்து கைக்குண்டுகள் மீகப்பட் டது. நேற்று 15க்கும் மேற்பட்ட கைக்குண்டுகளை பூவரசன்குளப் பொலிஸார் மீட்டனர். வவுனியா பம்பைமடுப்பகுதியில் இராணுவத்தினரின் சோதனை நிலையமாகப் பயன்படுத்தப்பட்ட தனியார் காணியில் கைக்குண்டுகள் உள்ளன எனக் கிடைத்த தகவலையத்தே அந்தப்பகுதிக்குச் சென்ற பூவரசன்குளப் பொலிஸார் கைக் குண்டுகளை மீட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ற-ரி5)


## காணாமல்போனவர் சடலமாக மீட்பு

கொஸ்கம கழுஹக்கலப் பகுதியை ஊடறுத்துச்செல்லும் களனி கங்கையில் நீராடிக்கொண்டிருந்த நிலையில் நீரில் மூழ்கிக் காணாமல் போன இரு இளைஞர்களில் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

21 வயதுடைய கஹபிட்டிப் பகுதியில் வசிக்கும் இளைஞரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

காணாமல் போயுள்ள 19 வயதுடைய மற்றொரு இளைஞர் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கப்பெறாத நிலையில் அவரை தேடும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மீட்கப்பட்ட இளைஞரின் சடலம் உடற்கூற்று பரிசோதனைக்களுக்காக மருத்தவமனையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)



யாழ்ப்பாணம், பிரதேச செயலகத்தின் வருடாந்த குருதிக் கொடை முகாம் நேற்று நடைபெற்றது. செயலக வளாகத்தில் நடத்தப்பட்ட முகாமில் செயலக்தில் பணியாற்றும் பலர் குருதிக் கொடை வழங்கினர். (ற–ரி)

## உருக்குலைந்த நிலையில் காட்டுக்குள் சடலம் மீட்பு

நுவரெலியா, பெப்.22

அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போபத்தலாவ காட்டுப்பகுதியில் முதியவரின் சடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்டது.

உருக்குலைந்து எலும்புக்கூடான நிலையிலேயே சடலம் மீட்கப்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் போபத்தலாவப் பகுதியைச் சேர்ந்த ஆர்.எம்.ரம்பன்டா (வயது - 80) என உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர் தனது வீட்டிலிருந்து கடந்த ஜூலை மாதம் காணாமல் போயிருந்தார். உறவினர்கள் இது தொடர்பில் அக்கரப்பத்தனைப் பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்திருந்தனர்.

இந்தச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை அக்கரப்பத்தனைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

## கொட்டகையுள் இருந்து பெண்ணின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு, பெப்.22

ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள வந்தாறுமூலை கணேச வித்தியாலய வீதியை அண்டிய பகுதியின் கொட்டகை ஒன்றிலிருந்து பெண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

அதே பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய சண்முக ரத்தினம் பிரதீபா எனப் பெற்றோர் அடையாளம் காட்டியுள்ளனர்.

இந்தச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ற-ரி5)

## "பச்சை இலங்கை" என்பதே இல்ல அலங்கரிப்பின் பொருள்

நெல்லியடி, பெப்.21



நெல்லியடி மத்திய கல்லூரி மெய்வன்மைப் போட்டியில் அமைக்கப்பட்ட இல்ல அலங்கரிப்பு "பச்சை இலங்கை" என்ற தொனிப்பொருளில் அமைக்கப்பட்டது என்று பாடசாலைத் தரப்பினர் தெரிவித்தனர்.

நாட்டில் வாழப்போகும் எமது சந்ததிகளினதும் இந்தக் காலத்தில் உள்ள எமது சகோதர சகோதரிகளினதும் நலன்களைக் கருத்தில் கொண்டு நீடித்து நிலைத்திருக்கும் வகையில் இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதோடு இயற்கை நலம் செறிந்த, மாசுபடாத, இலங்கைத் திருநாட்டை அவர்களின் கரங்களில் சமர்ப்பிப்பதற்காக சூழல் நேயமான சக்திப் பயன்பாடுகளையும் சுழலியல் பொறுப்புணர்வு வாய்ந்த வளப் பயன்பாட்டையும் வலியுறுத்தும் வகையில் கட்டமைக்கப்பட்ட கருத்துருவாக்கத்தின் மர்திரியுருவாகவே இல்ல அலங்கரிப்புச் செய்யப்பட்டது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

விசாரணைகள் மேற்கொள்ளப்படும் அளவுக்கு இல்ல அலங்கரிப்பில் எதுவும் இருக்கவில்லை என்றும், விசாரணைகள் நடைபெறவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ற)




ஜி.சீ.ஈ. உயர் தரப் பரீட்சையில் மன்னார் மாவட்டத்தில் உயிரியல் பிரிவில் சித்தி பெற்று முதலாம் இடத்தைப் பெற்ற மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை மாணவி மேரிநிதுஸா சோசையை மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்று' பாடசாலையில் இடம் பெற்றது. அதிபர் அருட் சகோதரி கில்டா சிங்கராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மன்னார் மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர் சுகந்தி செபாஸ்டியன் . உதவிக் கல்விப் பணிப்பாளர் பி.ஞானராஜ் .செபஸ்தியார் ஆலயத்தின் பங்குத் தந்தை அருட் தந்தை பீட்டர் மனோகரன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர். (ற.ரி5.56)

## உணவு நஞ்சாகியதில் எழுவர் மருத்துவமனையில்

மட்டக்களப்பு.பெப்.22

வீட்டில் சமைத்த உணவு நஞ்சாகியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த எழுவர் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இந்தச் சம்பவம் மட்டக்களப்பு காத்தான்குடிப் பகுதியில் இடம்பெற்றது. புதிய காத்தான்குடியில் வசிக்கும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தமது இரவு உணவை உட்கொண்டபோது மயக்கமுற்றறர். இதையடுத்து ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். இவர்கள் சமைத்த உணவில் மீனின் பாகங்களைக் கொண்ட கறி உட்பட ஏனைய உணவுகளும் பரிசோதனை செய்யப்படுவதாக சுகாதார அலுவலர்கள் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக் கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ற.ரி2,46)

# மன்னாரில் கடும் வறட்சி விவசாயிகள் பாதிப்பு

மன்னார்,பெப்.22

மன்னார் மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள கடும் வறட்சியின் காரணமாக முருங்கன் கட்டுக்கரைக் குளத்தில் நீர் வற்றியதால் விவசாய செய்கைக்கு நீர் இன்றி பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்தனர்.உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.



அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

நடப்பு வருடத்துக்கான(2017-2018) காலபோக விவசாய நெற்செய்கையில் குளத்தின் கீழாக 30 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பகுதி விவசாயிகள் கட்டுக்கரைக்குளத்தை நம்பி விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். தொடர்ச்சியாக மழை பெய்யாத நிலையில், தற்போது ஏற்பட்டுள்ள கடும் வறட்சியின் காரணமாக கட்டுக்கரை குளத்தில் நீர் வற்றிய நிலையில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள நீர் இன்மையினால் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றோம்.

விவசாயத்துக்காக விவசாயக் காணிகளில் அமைக்கப்பட்டுள்ள குழாய்க்கிணறுகளில்கூட நீர் வரத்து குறைந்து காணப்படுகின்றது.

அதிகளவான நெற்பயிர்கள் கதிர் விட்டுள்ளன. இந்தச் சந்தர்ப்பத்தில் நீர் இல்லாமை பயிர்களை அழிவடையச் செய்யும் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

எமது பாதிப்புக் குறித்து விவசாயத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் திணைக்கள அதிகாரிகள் யாரும் வந்து உரிய முடிவுகளை மேற்கொள்ளவில்லை.

நகைகளை ஈடு வைத்தும், கால்நடைகளை விற்றும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். தற்போது கால் நடைகளுக்கும் குடி தண்ணீர் இல்லை. விவசாயச் செய்கைக்கும் தண்ணீர் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலை தொடருமாக இருந்தால் மன்னார் மாவட்ட விவசாயிகள் பட்டினிச்சாவை எதிர்கொள்ளும் நிலை ஏற்படும். எனவே உரிய அதிகாரிகள் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு விவசாய செய்கைக்கு தேவையான நீரை பெற்றுக்கொடுக்க உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றனர். (எ-56)

## விவசாயிகள் மதிப்பளிப்பு நிகழ்வு



முல்லைத்தீவு,பெப்.22

முல்லைத்தீவு மாவட்டத்தின் சிறந்த விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்கள் மதிப்பளிப்பு நிகழ்வு சிலாவத்தை பாடசாலை மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் மாவட்டத்தில் கடந்த ஆண்டு சிறப்பாகச்செயற்பட்ட விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்கள் 225 பேர் மதிப்பளிக்கப்பட்டனர்.

வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவனேசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் வடக்கு மாகாண பிரதி அவைத்தலைவர் வ.கமலேஸ்வரன், வடக்கு மாகாணசபை உறுப்பினர் து. ரவிகரன், மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விலங்கியல் துறை விஞ்ஞான பீட மூத்த விரிவுரையாளர் கலாநிதி இராஜேந்திரமணி ஞானேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறந்த விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசில்களை வழங்கி மதிப்பளித்தனர்.

## கருத்துப் பரிமாறல் களம்

யாழ்ப்பாணம், பெப். 22

தமிழக மனித உரிமைச் செயற்பாட்டாளர் அ.மார்க்ஸ் உடனான கருத்துப் பரிமாறல் களம் எ.நடராஜா தலைமையில் ஸ்ரான்லி வீதியில் உள்ள சி.டி.பி வங்கிக் கட்டடத்தின் 2ஆம் மாடி மண்டபத்தில் நாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

'தெற்காசிய சமூகங்கள் எதிர்நோக்கும் மனித உரிமைப் பிரச்சினைகளும் தீர்வுக்கான செயற்பாட்டுக் களங்களும் என்னும் தலைப்பிலான கருத்துப் பரிமாறலில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## பாதை அனுமதிக்கான கட்டணத்தை இரண்டு தவணையில் செலுத்தலாம்

### இணையம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 22

யாழ்ப்பாண மாவட்ட தனியார் பேருந்துகளின் வருடாந்த பாதை அனுமதிக்கான புதிய கட்டணம் முதல் 6 மாத காலத்துக்குள் 4 ஆயிரம் ரூபா செலுத்தவும் அடுத்த 3 மாத காலத்துக்குள் 3 ஆயிரத்து 500 ரூபாவைச் செலுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண முதலமைச்சரின் கடிதத்துக்கு அமைவாக இந்த முடிவு எடுக்கப்பட்டது.

பேருந்து உரிமையாளர்கள் அதனை ஏற்றுக் கொண்டுள்ளனர் என்று யாழ்ப்பாணப்பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பேருந்து நிறுவனங்களின் இணையம் தெரிவித்தது.

வருடாந்த அறவீட்டு தொகையாக 7 ஆயிரத்து 500 ரூபாவும், மாதாந்த சம்பவ தாளுக்கான தொகை 750 ரூபாவாகவும் அறவிடப்படவுள்ளதாக அதிகார சபையால் தெரிவிக்கப்பட்டது. இந்தத் தொகை வெளிமாவட்டத்துக்கான சேவையில் ஈடுபடும் பேருந்துகளுக்கே சாதகமானது. இது தொடர்பில் உரிய தீர்வினை பெற்று தரவேண்டும் என்று முதலமைச்சரிடம் கோரப்பட்டது. இதனையடுத்தே மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது. 6 மாதங்களுக்குள் கோரிக்கை மீள் பரிசீலினை செய்யப்படும் என்றும் முதலமைச்சரால் தெரிவிக்கப்பட்டது. அந்த முடிவை பேருந்து உரிமையாளர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். என்று இணையம் மேலும் தெரிவித்தது (4-ரி)



லிபரா உயிரிழை நிறுவனத்தினர் போரால் பாதிக்கப்பட்டு பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைத்தனர். மாங்குளத்தில் உள்ள அலுவலகத்தில் வைத்து கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (எ-9)

## மூதாட்டியைக் கட்டி பற்றைக்குள் வீசிவிட்டு கொள்ளையர் கைவரிசை

யாழ்ப்பாணம், பெப். 22

தனியே வசித்த மூதாட்டியின் வீட்டுக்குச் சென்ற கொள்ளையர் மூதாட்டியைத் தாக்கி, வாய், கைகளைக் கட்டிவிட்டு வீட்டின் பின்புறம் பற்றைக்குள் வீசிவிட்டு நகைகளையும் பணமும் கொள்ளையிட்டுச்சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் மல்லாவி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உயிலங்குளத்தில் நேற்றுமுன்தினம் அதிகாலை இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த சிறீஸ்கந்தராசா பரமேஸ்வரி (வயது - 63) என்பவரே படுகாயமடைந்தார். அவர் நேற்றுமுன்தினம் காலை அயலவர்களால் மீட்கப்பட்டு மல்லாவி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அது தொடர்பபில் விசாரணை நடத்துவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (4)

## சார்ப் நிறுவனத்தால் 15 மாத காலப்பகுதிக்குள் 2,864 அபாயகரமான வெடிபொருள்கள் மீட்பு

கிளிநொச்சி, பெப். 22

பதினைந்து மாத காலப்பகுதிக்குள் இரண்டாயிரத்து 864 அபாயகர்மான வெடிபொருள்கள் அகற்றப்பட்டுள்ளன என்று சார்ப் நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி தெரிவித்தார்.

கிளிநொச்சியில் ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் இயங்கிவரும் சார்ப் மனிதாபிமானக் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தால் பதினைந்து மாத காலப்பகுதியில் இரண்டாயிரத்து எண்ணூற்று அறுபத்து நான்கு அபாயகரமான வெடிபொருள்கள் அகற்றப்பட்டுள்ளன என்று சார்ப் நிறுவன முகாமையாளார் ஒய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்துள்ளார்.

அண்மையில் சார்ப் நிறுவனத்துக்கு நிதி உதவி வழங்கும் ஜப்பான் நாட்டின் இலங்கைப் பிரதிநிதி நிறோசா வெல்கம உத்தியோகபூர்வ வருகை ஒன்றை மேற்கொண்டு சார்ப் நிறுவனத்தின் பளை அவலுலகம் மற்றும் கண்ணி வெடி அகற்றும் பகுதிகளை பார்வையிட்டார். இதன்போது நிறுவனத்தின் தற்போதைய நிலைமைகள் மற்றும் முடிவடைந்த வேலைத்திட்டங்கள் தொடர்பாக தெளிவுபடுத்தும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நிறுவனமானது கடந்த பதினைந்து மாத காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் பகுதியிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலையிலும் 3 இலட்சத்து 9ஆயிரத்து இருநூற்று 60 சதுரமீற்றர் பரப்பளவில் (309,260 ளுஙஅ ) இருந்து இரண்டாயிரத்து எண்ணூற்று அறுபத்து நான்கு(2864) அபாயகரமான வெடிபொருள்களை அகற்றியுள்ளது. தொடர்ந்தும் முகமாலை கிளாலிப்பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளோம் - என்றார்.

ஜப்பான் அரசு மற்றும் ஜப்பான் நாட்டு மக்களிடமிருந்து பெறப்பட்ட 9.8 பில்லியன் பணம் நிதியுதவியூடாக குறித்த பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் மேற்கொள்ளபட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஜப்பான் அரசின் உதவியுடன் செயற்படும் டாஸ் நிறுவனம் 2010ஆம் ஆண்டு முதல் இதுவரை 2500 ஏக்கர் நிலத்தில் கண்ணிவெடி அகற்றியது என நிறுவனத்தின் பிரதிநிதிகள் அண்மையில் பச்சிலைப்பள்ளியில் வைத்து தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (எ-6,35)

# அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

வடமராட்சி.பெப்.22

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது என வலயக் கல்வி பணிப்பாளர் எஸ். நந்தகுமார் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் சென். தோமஸ் றோ.க.பெ.பாடசாலை- தரம் II யாழ்ப்பாணம் உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்தியாலயம்- தரம் III ஆகிய பாடசாலைகளுக்கே அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

தரம் II பாடசாலைக்கு விண்ணப்பிப்போர் இலங்கை அதிபர் சேவையில் தரம் II மேற்பட்ட தரமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

தரம் III பாடசாலைகளுக்கு விண்ணப்பிப்போர் இலங்கை அதிபர் சேவையில் தரம் III அல்லது அதற்கு மேற்பட்ட தரமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

தரம் II பாடசாலைக்கு உரிய தரத்தையுடையவர்களின் விண்ண்ப்பங்கள் கிடைக்கப்பெறாத பட்சத்தில் தரம் III அதிபர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

அதிபர் தரத்துக்கு பொருத்தமற்ற பாடசாலைகளில் கடமையாற்றுபவர்களும், இலங்கை அதிபர் சேவையில் இருந்து அதிபர் கடமையாற்றாதவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

வடமராட்சி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் நிரந்தரமாக சேவையாற்றுபவர்களாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி தற்போது கடமையாற்றும் பாடசாலையில் ஆகக்குறைந்தது மூன்று வருடங்கள் தொடர்ச்சியான சேவையினை ஆற்றியிருத்தல் வேண்டும். (கடமையிலுள்ள அதிபர்களுக்கு மட்டும் இந்த நிபந்தனை பொருந்தும்) விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது மூன்று வருடங்களுக்கு கடமையாற்றக் கூடிய வயதெல்லையை உடையவராக இருத்தல் வேண்டும்.

யாழ்ப்பாணம் சென். தோமஸ் றோ.க.பெ.பாடசாலைக்கு பெண் அதிபர்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி எதிர்வரும் 4ஆம் திகதி ஆகும். விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்வுக்கு தோற்றுதல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை வலயக்கல்வி அலுவலகத்தின் கல்வி நிர்வாகப் பிரிவில் பெற்றுக் கொள்ளமுடியும். (எ)

# பேடன் பவல் நினைவு தினம்

யாழ்ப்பாணம். பெப்.22

பருத்தித்துறை சாரண மாவட்டத்தினரால், சாரண நிறுவுநர் பேடன் பவலின் நினைவுதின நிகழ்வு வல்வை சிவகுரு வித்தியாலய மண்டபத்தில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சாரணர் மாவட்ட உப தலைவர் எஸ்.திரவியராஜா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர் ஆர்.யே.இன்பராஜ் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக வல்வை சிவகுருநாதர் வித்தியாலய அதிபர் எஸ். ஜெயானந்தகுமார் மற்றும் தலைமைக்காரியாலய சாரண ஆணையாளர் பி.அஜித்குமார் ஆகியோர் கலந்துகொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# வேலையற்றுள்ளவர்களை பதிவு செய்யக்கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 22

வடக்கு கிழக்கில் வேலையற்றோர் வீதத்தைக் குறைக்கும் நோக்கில் இளைஞர் முயற்சியாண்மை அபிவிருத்தித் திட்டம் ஊடாக வேலை வாய்ப்புக்களை வழங்கத் திட்டமிட்டுள்ளதாக சர்வோதய நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் ஜே.எம்.தஜ்மீல் தெரிவித்தார்.

வேலையற்ற இளைஞர்களின் திறன்களை விருத்தி செய்து சொந்த வியாபார நிறுவனங்களை உருவாக்குதலும் விரிவாக்கம் செய்தலும் என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மொனராகலை, ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் இதை நடை முறைப்படுத்தப்படவுள்ளதாக இணைப்பாளர் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தில் இணைந்து கொள்ள ஆர்வமுடைய 18-35 இடைப்பட்ட வயதுடைய இளைஞர் யுவதிகள் சர்வோதய மாவட்ட காரியாலயங்களில் அல்லது www.sarvoday.org, www.sarvodayafinance.lk எனும் இணையத்தளங்கள் ஊடாகவும் sarvodaya.srilanka எனும் முகநூல் பக்கத்தில் இருந்தும் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று மார்ச் 22 க்கு முன்னர் விண்ணப்பங்களை பூர்த்தி செய்து அனுப்புமாறும் கேட்டுட்டுள்ளார். (4)

# இரு நாடகங்கள் நாளை இலவசக் காட்சி

யாழ்ப்பாணம். பெப். 22

சிறுவர்களுக்கான இரு நாடகங்கள் யாழ்ப்பாண பொது நூலகத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு அரங்கேறவுள்ளன. குழந்தை ம.சண்முகலிங்கத்தின் "கூடி விளையாடு பாப்பா" தே.தேவானந்தின் "அலைமீதேறி ஆனந்தப் பயணம்" ஆகிய நாடகங்களே இலவசக் காட்சியாக அரங்கேறுகின்றன.

சிறுவர்களின் உளவிருத்திக்கான மகிழ்வூட்டலையும் அறிவூட்டலையும் அடிப்படையாகக் கொண்டவை இந்தச் சிறுவர் நாடகங்கள் செயல்திறன் அரங்க இயக்கத்தின் தயாரிப்பில் யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் அனுசரணையில் இவை மேடையேறுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

*சங்கானைப் பிரதேச சபைக்குட்பட்ட*

# மாதர் அபிவிருத்தி சங்கங்களுக்கு சுழற்சி முறைக்கடன் திட்டம்

வலிகாமம்.பெப்.22

வலி.மேற்கு சங்கானைப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் தெரிவுசெய்யப்பட்ட 5 மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களுக்கு சுழற்சி முறைக்கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

மகளிர் விவகார அமைச்சின் செயற்பாடுகளை கிராம மட்டத்தில் முன்னெடுப்பது குறித்து வலி.மேற்கு சங்கானை பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் செயற்பட்டுவரும் மாதர் கிராமிய அபிவிருத்தி சங்க நிர்வாகிகளுடன் வலிகாமம் மேற்கு சங்கானைப் பிரதேச சபைக்குச் சொந்தமான மண்டபத்தில் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் அண்மையில் கலந்துரையாடினார்.

அதன்படி 5 சங்கங்களுக்கு நிதி உதவி வழங்குவதாக அனந்தியால் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அவரது ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

திட்டத்தை ஏனைய பிரிவுகளைச் சேர்ந்த மாதர் கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகிகளுடனான கலந்துரையாடலுக்கு அமைய நடைமுறைப்படுத்த இருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. கலந்துரையாடலில் வலி.மேற்கு பகுதி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூகசேவைகள் திணைக்கள உத்தியோகத்தர், தொழிற்துறைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் மாதர் கிராம அபிவிருத்தி சங்க நிர்வாகிகள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

# பாய் நெசவு நிலையம் இன்று திறந்து வைப்பு

அச்சுவேலி.பெப்.22

யாழ்ப்பாணம், புத்தூர் வாதரவத்தை பெரிய பொக்கணையில் பாய் நெசவு நிலையம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

தொழில்திறன் அபிவிருத்தி பயிற்சி நிலையமான பாய் நெசவு நிலைய்த்தை வடக்கு மாகாண மகளிர் விவகார புனர்வாழ்வு சமூக அமைச்சர் அனந்தி சசிதரன் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு திறந்து வைக்கவுள்ளார்.

பல மில்லியன் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பாய் நெசவு நிலையம் பெண்களுக்கான தொழில் முயற்சியை, வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் செயற்படவுள்ளது. (எ-11)

# எழுத்தாளர் தேவகாந்தனின் உரைநிகழ்ச்சி

யாழ்ப்பாணம்.பெப்.22

யாழ்ப்பாணம் பொதுசன நூலக வாசகர் வட்டத்தின் மாதாந்த உரை நிகழ்ச்சி, நூலகக் குவிமாடக் கேட்போர்கூடத்தில் எதிர்வரும் ஞாயிறு மாலை மூன்று மணிக்கு நடைபெறும்.

கனடாவிலிருந்து வந்திருக்கும் எழுத்தாளர் தேவகாந்தன், 'சமகால தமிழ் நாவல் பரப்பில் புலம்பெயர்ந்தோர் நாவல்களின் வகிபாகம்' என்னும் தலைப்பில் உரையாற்றுவார். தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும். ஆர்வமுள்ளோர் யாரும் பங்குபற்றலாமென வாசகர் வட்டத்தினர் அறிவித்துள்ளனர். (எ-4)

# வித்தியா படுகொலை வழக்கு: நிரபராதியின் விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், பெப். 22

புங்குடுதீவு மாணவி கொலை வழக்கின் நிரபராதியின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

மாணவி கொலை வழக்கில் முதலாவது சந்தேக நபராக கைது செய்யப்பட்ட பூபாலசிங்கம் இந்திரகுமார் ஊர்காவற்துறை நீதிமன்ற வளாகத்தினுள் வைத்து ஊர்காவற்துறை பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவரின் பெயரைக் கூறி கொலை அச்சறுத்தல் விடுத்து இருந்தார்.

அது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஊர்காவற்துறை பொலிஸார் ஊர்காவற்துறை நீதிவான் மன்றில் வழக்கு தாக்கல் செய்தனர்.

குறித்த வழக்கு விசாரணை நீதிவான் ஏ.எம்.எம்.றியாழ் முன்னிலையில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கு விசாரணைகளைத் தொடர்ந்து எதிர்வரும் 7ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (எ-37)

# வைக்கோல்அள்ளியவரை தீண்டியது பாம்பு

சாவகச்சேரி, பெப். 22

வயலிலிருந்து கொண்டுவரப்பட்டு வளவுக்குள் பறிக்கப்பட்டிருந்த வைக்கோலை அள்ளிய இளைஞரை அதனுள் மறைந்திருந்த பாம்பு தீண்டியது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மட்டுவிலில் இடம்பெற்றுள்ளது.

கடியுண்ட இளைஞன் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது - (எ-9)

*ஊர்காவற்துறை கர்ப்பிணி படுகொலை வழக்கு*

# சந்தேக நபர்களின் விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், பெப். 22

யாழ்ப்பாணம் ஊர்காவற்துறைப் பிரதேசத்தில் கர்ப்பிணிப் பெண் படுகொலைக் குற்றசாட்டில் கைது செய்யப்பட்டு தடுப்பிலுள்ள சகோதரர்கள் இருவரினதும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்துறை நீதிவான் மன்றில் நீதிவான் ஏ.எம்.எம்.றியாழ் முன்னிலையில் குறித்த வழக்கு நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன் போது விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரு சந்தேக நபர்களும் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

குறித்த வழக்கின் விசாரணையைக் கடந்த மாதம் 24ஆம் திகதி குற்றப் புலனாய்வு பிரிவினருக்கு மாற்றுமாறு நீதிமன்று உத்தரவிட்டு இருந்தது. இதுவரையில் குற்றபுலனாய்வு பிரிவினர் விசாரணைகளை பொறுப்பெடுக்கவில்லை.

இந்த நிலையில் நேற்று மன்றில் முன்னிலையான குற்றப்புலனாய்வு பிரிவினர், இந்த வழக்கினை பாரமெடுக்குமாறு பொலிஸ் மா அதிபரிடம் இருந்து இதுவரையில் தமக்கு அறிவுறுத்தல் கிடைக்கப்பெறவில்லை எனத் தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து இரு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 7ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (எ-37)



மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி வித்தியாலய மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

அதிபர் சு.சிவானந்தன் தலைமையில் நடைபெற்ற போட்டியில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ( கல்வி முகாமைத்துவம் ) நா.கந்ததாசன் ஓய்வுநிலை அதிபர் வே.சுந்தரலிங்கம் ஓய்வுநிலை அசிரியை சா.சுந்தரலிங்கம் ஆகியோரும் மதிப்புறு விருந்தினர்களாக வித்தியாலத்தின் பிரான்ஸ் ஆசிரியர் மாணவர் சங்கப் பிரதிநிதி து.செந்தூரன் மீசாலை மக்கள் ஒன்றிய் கனடாக் கிளையின் பிரதிநிதி ச.விநாயகமூர்த்தி ஆகியோரும் கலந்து கொண்டனர். (9)

## இராணுவ...

2009ஆம் ஆண்டு இறுதிப் போரின் போது மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டார் என்று இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது என்று, அது தொடர்பில் விசாரணை இடம்பெறுகின்றது என்றும், அதனாலேயே அவர் ஐ.நாவால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.நா. அமைதிப்படை நடவடிக்கைகளில் பங்கேற்க லெபனானுக்கு அனுப்பப்படவிருந்த இராணுவத்தின் 150 பேர் கொண்ட அணிக்கு லெப்.கேணல் ரத்னபுலி வசந்தகுமார ஹேவகே என்ற அதிகாரி பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்தார்.

இவர் 2008ஆம் 2009ஆம் ஆண்டு காலப் பகுதியில் போர் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்தவர் என்றும், இவர் தொடர்பான மனித உரிமை ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் மனித உரிமை ஆர்வலர்கள் கரிசனை எழுப்பியிருந்தனர்.

இந்த நிலையில், இவரை லெபனானில் ஐ.நா அமைதிப்படை நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதை ஐ.நா. தடுத்துள்ளது.

இது குறித்து இன்னர் சிற்றி பிரஸ் ஊடகத்துக்கு கருத்து வெளியிட்டுள்ள ஐ.நா. பொதுச்செயலரின் பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக்,

லெபனானில் ஐ.நா. இடைக்காலப் படையில் நிறுத்தத் திட்டமிடப்பட்டிருந்த இராணுவ அதிகாரி, மீளாய்வு முடியும் வரை அங்கு அனுப்பப்படுவது இடைநிறுத்தப்பட்டுள்ளது. முழுமையான மீளாய்வுக்குப் பின்னரே, அவரை அங்கு நிறுத்துவதா என்பது குறித்து முடிவு செய்யப்படும்.

இந்த இராணுவ அதிகாரியின் பின்னணி தொடர்பாக நாம் இலங்கையின் வதிவிடப் பிரதிநிதியுடன் தொடர்பு கொண்டிருக்கிறோம். அவர்கள் எமது விசாரணைகளுக்கு முழுமையாக ஒத்துழைக்கிறார்கள். மனித உரிமை மீறல்கள் பற்றிய அறிக்கைகளை ஐ.நா. மிகத் தீவிரமாக எடுத்துக் கொள்ளும்.

கொள்கைகளின் அடிப்படையில், ஐ.நா. உடன் ப்ணியாற்றும் அனைத்து பணியாளர்களும் உயர்ந்த செயல்திறன், திறமை, நேர்மை ஆகியவற்றையும், மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பவர்களாகவும், அர்ப்பணிப்புள்ளவர்களாகவும் இருப்பதை உறுதிபடுத்த வேண்டியது எமது கடப்பாடாகும் - என்றார். (ற-5)

## பயணிகள்...

அதில் 19 பேர் காயமடைந்தனர். அவர்களில் இரு இராணுவத்தினர் மிகக் கவலைக்கிடமான நிலையில் மருத்துவனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்று அதிகாலை 5.25 மணியளவில் குண்டுவெடித்துள்ளது. காயமடைந்த 19 பேரில் 7 பேர் பொதுமக்கள், ஏனைய 12 பேரில் 7பேர் இராணுவத்தினர், 5 வான்படையினரும் உள்ளடங்குகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தியதலாவ நோக்கி விடுமுறையில் செல்லும் இராணுவ மற்றும் வான் படையினர் தனியார் பேருந்தில் பயணித்துள்ளனர். தனியார் பேருந்து பண்டாரவளையை அடைந்த போது, பயணிகள் பெருமளவில் இல்லாமை காரணமாக தியதலாவைக்கு பயணிக்காமல் அந்தப் பேருந்து நிறுத்தப்பட்டது.

அதிலிருந்த பயணிகள் (இராணுவ மற்றும் வான்படையினர்) பண்டாரவளை முதல் தியத்தலாவை ஊடாக பதுளை, மஹியங்கனை ஹிராதுருகோட்டை நோக்கி பயணிக்கும் மற்றொரு தனியார் பேருந்துக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

பேருந்து பயணத்தை ஆரம்பித்து சில நிமிடங்களில், பேருந்தின் சாரதி இருக்கை அமைந்துள்ள பக்கத்தில் மூன்றாவது ஆசன வரிசையில் திடீரென வெடிப்புச் சத்தம் கேட்டுள்ளது. தொடர்ந்து தீ பரவ ஆரம்பித்தது என்று ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தக் குண்டுவெடிப்பை அடுத்து பேருந்து முற்றாகத் தீக்கிரையானது. காயமடைந்த பெண் ஒருவர் உள்ளிட்ட 19 பேரும் தியதலாவ மருத்துவனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர். இராணுவத்தைச் சேர்ந்த ஒருவரின் கால் சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்பட்டது என்றும், மற்றொரு இராணுவச் சிப்பாய்க்கு சத்திர சிகிச்சையொன்று செய்யப்பட்டது என்றும் தியதாலவ ஆரம்ப வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் ரஞ்ஜித் அமரகோன் தெரிவித்தார்.

பேருந்தில் குண்டு வெடித்ததாக தகவல் பரவியதால் பிரதேசத்தில் அச்சமும் பதற்றமும் ஏற்பட்டிருந்தது. சம்பவ இடத்துக்கு பண்டாரவளை, தியதலாவை பொலிஸார், பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்றன.

"இது ஒரு திட்டமிட்ட செயற்பாடாகவோ, இராணுவத்தினரை இலக்கு வைத்த நடவடிக்கையாகவோ கருதப்பட முடியாது. ஏனெனில் பயங்கரவாத செயற்பாடகவோ அல்லது இராணுவத்தினரை இலக்கு வைத்த செயலாகவோ இருப்பின் இதனைவிட பன்மடங்கு சக்தி வாய்ந்த வெடிபொருள்கள் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும்." என்றுதியதலாவை இராணுவ முகாம் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ற-5.71)

## சிங்கள....

பதை வெளிப்படுத்துவதற்காகவுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர், எதிர்க் கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் அண்மையில் நாடாளுமன்றத்தில் உணர்ச்சி வசப்பட்டு தாமரை மொட்டிலிருந்துதான் தமிழீழம் மலரும் என்றார்.

இவ்வாறு சம்பந்தனது நாடாளுமன்ற உரையை விளாசித் தள்ளினார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செ.கஜேந்திரன்.

முன்னணியின் கட்சி அலுவலகத்தில் நேற்று ஊடகவியலாளர்களை அவர் சந்தித்தார். அவர் அங்கு இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

விடுதலைப் புலிகளின் போராட்டம் மௌனிக்கப் பட்ட பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்த் தேசியக் கொள்கையைக் கைவிட்டு சிங்கள அரசுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றது. போருக்குப் பின்னர் கூட்டமைப்பினர் சிங்களக் கொடியை ஏந்தினார்கள், கொழும்பு சிங்கள அமைச்சர்களை வடக்குக்கு அழைத்து வந்தார்கள். சுதந்திர தின நிகழ்வில் எல்லாவற்றையும் மறந்து கலந்துகொண்டார்கள். கூட்டு அரசில் புதிய அரசமைப்பு உருவாக்கம் என்ற பெயரில் தமிழ் மக்களை ஒற்றையாட்சிக்குள் தள்ள முயற்சித்து வருகிறார்கள். பௌத்தத்துக்கும் முன்னுரிமை வழங்கவும் இடமளித்துள்ளார்கள்.

தற்போது எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் நாடாளுமன்றத்தில் உணர்ச்சிவசப்பட்டுப் பேசியது தமிழ் மக்களுக்காக என்று தோன்றவில்லை. மாறாக சிங்கள அரசைக் காப்பாற்றவே அப்படிப் பேசினார் என்று தோன்றியது. அதாவது இந்த நாடு எந்தச் சந்தர்ப்பத்திலும் பிரியப் போவதில்லை, நாம் ஒற்றையாட்சிக்கு இணங்கி விட்டோம், பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்குவதில் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை, நாம் சிங்களவர்களின் முகவர்களாகவே செயற்பட்டு வருகின்றோம் என்பதை வெளிக்காட்டவே அவர் அப்படி உணர்ச்சி வசப்பட்டார்.

இதனைத் தவிர தமிழ் மக்களுக்காகவோ, கடந்த தேர்தலில் குறைந்த வாக்கை அதிகரிக்கவோ, எதிர்க்கட்சித் தலைவர் பதவியை தக்க வைக்கவோ அவர் உணர்ச்சி வசப்படவில்லை. மாறாக, ஒரு தமிழன் என்ற சிந்தனைக்கு அப்பால் சிங்களவர்களின் முகவராகச் செயற்பட்டு வருகின்றேன் என்பதைக் காட்டவே அவர் உணர்ச்சிவசப்பட்டார். சம்பந்தன் இந்தியாவின் கைக் கூலியாகவும் மேற்குலக நாடுகள் சிலவற்றின் கூலியாகவும் செயற்பட்டு வருகின்றார். என்றார் காட்டமாக. (உ-8)

## ரெலோவின்...

ஊடாக மக்களை முட்டாளாக்கப் பார்க்கிறார் என்றும் முன்னணி விமர்சித்தது.

ஊடகங்கள் ஊடாக அனைத்துத் தமிழ்க் கட்சிகளிடமும் இந்தக் கோரிக்கையை ரெலோவின் செயலர்நேற்றுமுன்தினம்முன்வைத்திருந்தார். நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் தெற்கில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச வெற்றி பெற்றிருக்கும் நிலையில், புதிய அரசமைப்பு முயற்சிகள் இடைநடுவில் நிற்கும் அபாயம் ஏற்பட்டிருக்கும் சூழலில் சிங்களப் பேரினவாதத்தை எதிர்கொள்வதற்காகத் தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தும் அரசியல் கருத்தொருமைப்பாட்டுக்கு வரவேண்டும் என்று அவர் பகிரங்க அழைப்பு விடுத்திருந்தார்.

அரசியல் கூட்டாகவோ கட்சிக் கூட்டணியாகவோ ஒன்றிணையாவிட்டாலும் தற்போதைய அரசியல் களச் சூழலில் அரசியல் கருத்தொற்றுமை தமிழ் அரசியல் கட்சிகளிடம் ஏற்படவேண்டும் என்று அவர் வலியுறுத்தியிருந்தார்.

அவரது அழைப்பை நேற்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நிராகரித்தது. "தமிழ்த் தேசியத்தை உதறிவிட்டு புதிய அரசமைப்பில் ஒற்றையாட்சிக்கு இணங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழரின் கொள்கைக்காக அனைவரையும் இணையக் கூப்பிடுவது மக்களை முட்டாளாக்கும் செயல்" என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலர் செ.கஜேந்திரன் தெரிவித்தார். செய்தியாளர்களிடம் நேற்றுப் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

"ரெலோ அமைப்பின் செயலர் சிறிகாந்தா உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நாம் பெற்ற வெற்றியை பார்த்துப் பதற்றத்தில் உள்ளார். தனது அரசியல் வாழ்க்கை முடிவுக்கு வரப்போகின்றது என்ற பயத்தில் உள்ளார். இந்த நிலையில் அவர் அனைவரையும் ஒன்றிணையுமாறு அழைப்பு விடுத்துள்ளார். இவ்வாறான நிலையிலேயே, தமிழ் மக்களை சவக் குழிக்குள் தள்ளுகின்ற வேலையை செய்யும் கூட்டமைப்பினர் எம்மையும் அந்தக் குழிக்குள் தள்ள அழைப்பு விடுக்கின்றனர்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (உ-8)

## நேர்முகத்...

என்று பல்கலைக் கழக ஊழியர் சங்கத்தினர் எதிர்ப்புத் தெரிவித்தனர். அதனால் நேற்று நடத்தப்பட்டவிருந்த நேர்முகத் தேர்வு கைவிடப்பட்டது. எதிர்வரும் 10 ஆம் திகதிக்குள் உரிய தீர்வைப் பல்கலைக்கழக நிர்வாகம் பெற்றுத்தர வேண்டும் எனவும் ஊழியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

"நூலக கவனிப்பாளர் தரம் II பதவிக்கு இதுவரைகாலமும் இருந்ததரநிலைகுறைக்கப்பட்டு அவர்களின் சம்பள அளவுத்திட்டமும் குறைக்கப்பட்டுள்ளது. தொழிலாளி பதவி இல்லாது ஒழிக்கப்பட்டதால் நூலகத்தில் இதுவரை காலமும் தொழிலாளிகள் ஆற்றிவந்த பணிகளையும் நூலக கவனிப்பாளரே ஆற்ற வேண்டியுள்ளது. இல்லாது ஒழிக்கப்பட்ட தொழிலாளர் ஆளணி மீள உருவாக்கப்படவேண்டும் என்பதே தொழிற் சங்கத்தின் நிலைப்பாடு ஆகும். முகாமைத்துவ உதவியாளர்கள் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஏற்றுக்கொண்டவாறு எழுது வினைஞர்கள், கணனிப் பிரயோக உதவியாளர்கள், தட்டெழுத்தாளர்கள், களஞ்சிய காப்பாளர்கள், சுருக்கெழுத்தாளர்கள், காசாளர்கள் ஆகியோர் முகாமைத்துவ உதவியாளர்களாக உள்வாங்கப்படவேண்டும். முகாமைத்துவ உதவியாளருக்கு உரிய கா.பொ.த. உயர்தரக் கல்வித் தகமை இல்லாதவர்களுக்கு சேவை காலத்தைக் கருத்தில் கொள்ள வேண்டும். சேவைக்கு உள்வாங்கல் முறையில் உரிய தீர்மானம் எடுக்கப்படாமல் புதிய ஆள் சேர்ப்பை மேற்கொள்ள இடமளிக்க முடியாது." என்று யாழ்ப்பான பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தெரிவித்தது.

அவர்கள் நேர்முகத் தேர்வை நடத்த விடாது தடுத்தனர். யாழ்ப்பாண பல்கலைக் கழகத்துக்குள் பொலிஸார் வரவழைக்கப்பட்டனர். யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தையும் அதனை அண்டிய சூழலிலும் பதற்ற நிலை காணப்பட்டது. யாழ்ப்பாண பல்கலைக் கழக துணைவேந்தர் மற்றும் பீடாதிபதிகளின் தலைமையில் இடம்பெற்ற பேச்சைத் தொடர்ந்து ஊழியர்களின் போராட்டம் கைவிடப்பட்டது. நேர்முகத் தேர்வும் இல்லாது செய்யப்பட்டது. ஊழியர்களின் உள்ளீர்ப்பு தொடர்பில் உரிய தீர்வை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்தறிய பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கு அழைப்பை எடுத்தபோதும் தொடர்பு கிடைக்கவில்லை. (ற-8)

## மாணவியை...

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்று.

யாழ்ப்பாணம், தீவகத்தில் உள்ள பாடசாலை 2009ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தரம் 4 மாணவி ஒருவர் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டார் என்று ஊர்காவற்றுறைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப் பட்டது. பாடசாலை அதிபர் மீது குற்றஞ் சாட்டப்பட்டது.

விசாரணைகள் மேற்கொண்ட பொலிஸார் பாடசாலை அதிபரைக் கைது செய்தனர். ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட அவர், பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

சிறுமியை வன்புணர்ந்த குற்றச்சாட்டை முன்வைத்து சந்தேகநபருக்கு எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் வழக்கு விசாரணைகள் நடைபெற்றன. தீர்ப்புக்காக வழக்கு நேற்றுத் திகதியிடப்பட்டது.

நேற்று வழக்கின் தீர்ப்பை அறிவித்தார் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன்.

'இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட சிறுமியின் சாட்சி முன்வைக்கப்பட்டது. சிறுமியின் தாயார் மற்றும் அவரது நண்பியின் சாட்சிகளும் சிறுமியால் கூறப்பட்ட கதையாக மன்றில் முன்வைக்கப்பட்டன. எனினும் சிறுமி நடத்தை கெட்டவள் என்று எதிரி தரப்பால் மன்றில் புதுக்கதை சோடிக்கப்பட்டது. 9 வயதுச் சிறுமி 2 இளைஞர்களுடன் பாலியல் தொடர்பை வைத்திருந்தாள் என அவளின் தாயார் கூறினார் என்று எதிரியும் அவரது மனைவியும் மன்றில் சாட்சியமளித்தனர்.

இந்த விடயம் இப்போதுதான் எதிரி தரப்பால் வெளிப்படுத்தப்படும் கதையாகும். எதிரி தரப்பால் மன்றில் முன்நிறுத்தப்பட்ட ஆசிரியர்கள், மாணவியின் நடத்தைக்கு நற்சான்றிதழ் வழங்கியுள்ளனர்.

சிறுமியால் கூறப்பட்ட சாட்சியத்தையும் மருத்துவ அறிக்கையையும் வைத்து இந்த மன்று எதிரியைக் குற்றவாளியாக அறிவிக்கின்றது.

குற்றவாளியான பாடசாலை அதிபரின் கட்டுப்பாட்டுக்குள்தான் பாடசாலை உள்ளது. அவரின் முழுக் கட்டுப்பாட்டுக்குள்தான் மாணவி உள்ளார். அரச அலுவலர் ஒருவர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி பெண்களையோ, சிறுவர்களையோ பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்துவது கடுமையான குற்றமாகும். அவர்களுக்கு கடுமையான தண்டனையை வழங்குவது கட்டாயமானதாகும்.

வேலியே பயிரை மேய்ந்த கதையாகிவிட்டது. பெற்றோர்கள் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவது கல்வி கற்பதற்காகவே. ஆனால் பாடசாலையைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் அதிபர், மாணவி ஒருவ்ரை வன்புணர்வுக்குட்படுத்துவது ஏற்றுக்கொள்ள முடியாதது.

இந்தக் குற்றவாளிக்கு வழங்கப்படும் தீர்ப்பு அனைத்து அதிபர்கள், ஆசிரியர்களுக்கு பாடமாக அமையவேண்டும் " என்று மேல் நீதிபதி தெரிவித்தார்.

"குற்றவாளிக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்படுகிறது. பாதிக்கப்பட்ட சிறுமிக்கு குற்றவாளி 10 இலட்சம் ரூபா இழப்பீட்டை வழங்க வேண்டும். அதை வழங்கத் தவறின் 2 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனையை அனுபவிக்கவேண்டும்.

தண்டமாக 5 ஆயிரம் ரூபா செலுத்தவேண்டும். தவறின் ஒரு மாதகால கடூழியச் சிறைத் தண்டனையை அனுபவிக்கவேண்டும்". என யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தண்டனைத் தீர்ப்பை வழங்கினார்.

வழக்குத் தொடுநர் சார்பில் அரச சட்டத்தரணி நாகரட்ணம் நிசாந்த் வழக்கை நெறிப்படுத்தினார். (ற-37)

## ஈ.பி.டி.பியோடு...

அதனைப் பார்க்கலாம் என நேற்றுத் தெரிவித்தார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலர் செ.கஜேந்திரன்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"வடக்கில் உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைக்க எமது கட்சிக்கும் ஈ.பி.டி.பி. கட்சிக்கும் இடையில் பேச்சு நடப்பதாகப் பரவலாகப் பேசப்படுகின்றது. அதில் எவ்வித உண்மையும் இல்லை. நாம் எந்தச் சந்தர்ப்பத்திலும் அவர்களுடன் கூட்டு வைக்கமாட்டோம்" என்றார் அவர்.

"ஈ.பி.டி.பியுடன் கூட்டுவைக்காவிட்டாலும் சபைகளில் அந்தக் கட்சி நீங்கள் ஆட்சி அமைக்க ஆதரவு தந்தால் ஏற்றுக்கொள்வீர்களா?" என்று உதயன் பத்திரிகை அவரிடம் வினவியது.

"அத்தகையதொரு நிலையில் உள்ளூராட்சி சபைகளில் உள்ளவர்களைக் கட்சியாகப் பார்ப்பதில்லை, தனிப்பட்ட உறுப்பினர்கள் என்றே பார்க்க வேண்டும்.'உதாரணத்துக்கு யாழ்ப்பாணம் மாநகர சபையில் கூட்டமைப்பினர் சார்பில் உள்ளவர்களில் கணிசமானவர்கள் ஆதரவு தந்தால் நாம் ஆட்சி அமைக்க முடியும். அதனை மீறி இக்கட்டான நிலை வந்தால் அந்தச் சமயத்தில் பார்ப்போம்"-என்றார். (உ-8)

## சிப்பாயின்...

கொழும்பு, பெப். 22

பேருந்தில் பயணித்த இராணுவச் சிப்பாயிடமிருந்த கைக்குண்டு வெடித்ததே இது வரையிலான விசாரணைகளில் உறுதியாகியுள்ளது என்று பொலிஸ் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து விடுமுறையில் சென்ற இராணுவச் சிப்பாயின் கைப்பையிலிருந்த கைக்குண்டே வெடித்தது என்று முதல் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அரச இரசாயன பகுப்பாய்வு நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன. மேலதிக விசாரணைகள் தொடர்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டார். (ற-5.71)

# பிரிட்டனில் சர்ச்சைக்குள்ளான பிரிகேடியர் திருப்பி அழைப்பு

கொழும்பு, பெப். 22

பிரிட்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் பிரிகேடியர் பிரியந்த பெர்னான்டோ, கொழும்புக்குத் திருப்பி அழைக்கப்பட்டுள்ளார்.



இலங்கையின் சுதந்திர தினத்தன்று லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கு வெளியே ஆர்ப்பாட்டம் நடத்திய புலம்பெயர் தமிழர்களை நோக்கி பிரிகேடியர் பிரியந்த பெர்னான்டோ கழுத்தை அறுத்து விடுவேன் என்பது போல சைகையில் எச்சரித்திருந்தார்.
இதற்குப் பல தரப்புக்களிடமிருந்தும் கடும் எதிர்ப்பு எழுந்ததை அடுத்து, பிரிகேடியர் பிரியந்த பெர்னான்டோவை பாதுகாப்பு ஆலோசகர் பதவியில் இருந்து உடனடியாக இடைநிறுத்துவதாக அயலுறவுத்துறை அமைச்சு அறிவித்தது. அவ்வாறு அறிவித்தல் வெளியாகி 24 மணி நேரத்தினுள்ளேயே அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உடனடியாக அவரது இடைநிறுத்தத்தை இல்லாமல் செய்ய உத்தரவிட்டிருந்தார்.
இந்த நிலையில், பிரிகேடியர் பிரியந்த பெர்னான்டோ கொழும்புக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.
'லண்டனில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் ஆராய்வதற்கு இராணுவத் தளபதி அவரை இலங்கைக்கு அழைத்துள்ளார். இது எமது அரச சேவையில் உள்ள சாதாரண நடவடிக்கையாகும்' என்று இராணுவ ஊடகப்பேச்சாளர் சுமித் அத்தபத்து தெரிவித்தார்.
பிரியந்த பெர்னான்டோவுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படக் கூடாது என்றும், அவர் மேற்கொண்ட நடவடிக்கை சரியானதே என்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தன தெரிவித்திருந்திருந்தார். இதேவேளை, இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்காவும், பிரியந்தவின் நடவடிக்கையை நியாயப்படுத்தி கருத்து வெளியிட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (5)

*உள்ளூராட்சி சபைகளில்*

## பெண் பிரதிநிதித்துவம் புறக்கணிக்கப்பட்டால் கடும் விளைவை எதிர்கொள்ளவேண்டியிருக்கும்

*மார்ச் 12 அமைப்பு எச்சரிக்கை*

உள்ளூராட்சி சபைகளில் 25 சதவீதப் பெண் பிரதிநிதித்து வத்தைப் புறந்தள்ளிச் செயற்படமுற்பட்டால் கடுமையான விளைவுகளை எதிர்நோக்க நேரிடும். இவ்வாறு மார்ச் 12 அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.
கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில், மார்ச் 12 அமைப்பின் பேச்சாளர் மஞ்சுல கஜநாயக்க மேலும் தெரிவித்ததாவது:
இந்தத் தேர்தலின் பிரதான அம்சம் பெண்களுக்கான அரசியல் உரிமையைப் பெற்றுக் கொடுத்தலாகும். 25 வீத பெண் பிரதிநிதிகள் உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்படுதல் கட்டாயப்படுத்தப்பட்டது. ஆனால் பெண் பிரதிநிதிகள் தொடர்பில் கவனம் செலுத்துவதில் கட்சிகள் தவறிழைத்துள்ளன. சட்டத்தின் அடிப்படையில் பெண்களுக்கு அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக் கொடுத்தல் மட்டுமன்றி உள்ளூராட்சிமன்றத் தலைமைத்துவத்தை ஏற்கும் உரிமைகளும் பெண் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் சகல கட்சிகளும் கவனத்தைச் செலுத்துதல் வேண்டும் - என்றார்.
இந்த ஊடகச் சந்திப்பில் கலந்து கொண்ட பவ்ரல் அமைப்பின் தலைவர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்ததாவது:
மாநகர சபை, நகர சபை மற்றும் பிரதேச சபை ஆகியவற்றுக்கான விகிதாசாரப் பட்டியல் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படும் போது பொறுப்பு வாய்ந்த மக்களுக்கு சேவையாற்றக் கூடிய உறுப்பினர்களை தெரிவு செய்வதில் கட்சிகள் அனைத்தும் மிக அவதானத்துடன் செயற்படவேண்டும் - என்றார். (5,31)

மகரகமவில் வெற்றியீட்டிய

## சுயேச்சைக் குழுவுக்கு மகிந்த அணி மிரட்டல்

குற்றம் சுமத்துகிறார் சட்டத்தரணி நாமல்

கொழும்பு, பெப். 22
உள்ளூராட்சித் தேர்தலின் போது மகரகம நகர சபையில் வெற்றி பெற்ற சுயேச்சைக் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் பதவி விலகி புதியவர்களுக்கு இடமளிக்கவேண்டும் என்று மகிந்த அணியினர் அழுத்தம் கொடுப்பதாக சட்டத் தரணி நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.
இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.
மகரகம நகர சபைக்கு, மகிந்த அணியான சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி தாக்கல் செய்த வேட்பு மனு நிராகரிக்கப்பட்டது. இதன் பின்னர் அந்தச் சபையில் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடுவதற்கு கட்டுப் பணம் செலுத்தியிருந்த இரண்டாம் இலக்க சுயேச்சைக் குழுவை மகிந்த அணியினர் ஆதரித்திருந்தனர். நகர சபைத் தேர்தலில் சுயேச்சைக் குழுவினர் 25 ஆசனங்களைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்றியுள்ளனர்.
இவ்வாறானதொரு நிலையிலேயே, சுயேச்சைக் குழுவின் உறுப்பினர்களைப் பதவி விலகுமாறு மகிந்த அணியினர் அழுத்தம் கொடுத்து வருவதாக சட்டத்தரணி நாமல் குற்றம் சுமத்தியுள்ளார். (5)

## பெண் பிரதிநிதித்துவத்தால் நாடாளுமன்றிலும் சர்ச்சை

கொழும்பு, பெப். 22
உள்ளூராட்சிமன்றங்களில் பெண் பிரதிநிதித்துவத்தை கட்டாயமாக்குவதில் எழுந்துள்ள சர்ச்சை குறித்து நாடாளுமன்றத்தில் ஆளும் மற்றும் எதிர் தரப்பினரிடையே கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.
நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம், மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும சிறப்புக் கூற்றை முன்வைத்து உரையாற்றினார்.
'உள்ளூராட்சித் தேர்தலில் பெண் பிரதிநிதித்துவத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட போதிலும் இப்போது பெண் பிரதிநிதித்துவத்தைக் கருத்தில் கொள்ளாது சபைகளை அமைக்க கட்சித் தலைவர் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளிவந்துள்ளன. தேர்தலில் பெண்களின் பெயர்கள் எண்ணிக்கை அளவில் குறைவாக உள்ளது எனவும், பெயர்கள் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டு சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் மூன்று வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.
தேர்தலின் போது பெண்களின் பிரதிநிதித்துவத்தை உள்ளடக்க வேண்டும் என்ற காரணத்தால் எமது மூத்த உறுப்பினர்கள் முக்கிய நபர்களைக் கூட விகிதாசாரப் பட்டியலில் உள்ளடக்க முடியவில்லை. இந்தத் தேர்தலின்போது பெண்களின் பிரதிநிதித்துவம் உள்ளடக்கப்பட்டுள்ளமை பெரிய வெற்றி என்ற பரப்புரையை அரசு முன்னெடுத்திருந்தது. இப்போது பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பான சட்டத்தை மாற்றியமைக்க கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாதது' என்று டலஸ் குறிப்பிட்டார்.
இதன்போது கருத்து வெளியிட்ட சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல, பெண்களின் பிரதிநிதித்துவத்தை நிராகரிக்க நாம் ஒருபோதும் தீர்மானம் எடுக்கவில்லை. எனினும் சில சபைகளில் 25 சதவீத பெண் பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. அவற்றைக் கருத்தில் கொண்டு தேர்தல் சட்டத்தில் திருத்தங்களை கொண்டுவர நாம் தீர்மானம் எடுத்தோம், என்று குறிப்பிட்டார்.
'பெண்களின் பிரதிநிதித்துவம்' தொடர்பில் எந்தவித திருத்தமும் முன்னெடுக்கப்படாது. மாறாக பெண் பிரதிநிதித்துவம் இல்லாத சபைகளை கவனத்தில் கொண்டு திருத்தங்களை முன்னெடுத்தல் என்ற தீர்மானம் மட்டுமே எடுக்கப்பட்டுள்ளது' என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.
இதன்போது கருத்து தெரிவித்த சபாநாயகர் கருஜெயசூரிய, தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் மற்றும் செயலர், கட்சித் தலைவர்கள் நாடாளுமன்றத்தில் சந்திப்பை முன்னெடுத்து கலந்துரையாடினோம். இந்தச் சந்திப்பின்போது பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியுமாக இருந்தது. பெண் பிரதிநிதித்துவம் இல்லாத சபைகளில் எவ்வாறு சபைகளை அமைப்பது என்பது குறித்து உள்ளூராட்சி மன்ற அமைச்சருக்கும் நாம் ஆலோசனை வழங்கியுள்ளோம் - என்றார். (5,61)



லசந்த கொலை:

## 2 1/2 மணிநேரம் ஹேமந்த இரகசிய சாட்சியம்

கொழும்பு, பெப். 22
சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சாட்சிகளை மறைத்தமை, பொய்யான சாட்சிகளை உருவாக்கியமை தொடர்பில் அறிந்த அனைத்து விடயங்களையும் இரகசிய வாக்கு மூலமாக, சம்பவம் இடம்பெறும் போது கல்கிசை பகுதிக்குப் பொறுப்பாக இருந்த மூத்த பொலிஸ் அத்தியட்சர் ஹேமந்த நேற்று வாக்கு மூலம் வழங்கினார்.
கல்கிசை பிரதான நீதிவான் மொஹம்மட் மிஹால் முன்னிலையில், நீதிவானின் உத்தியோகபூர்வ அறையில் வைத்து அவர் இந்த வாக்கு மூலத்தை சுமார் இரண்டரை மணி நேரம் வழங்கினார்.
நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக வாக்கு மூலம் வழங்க, நண்பகல் 12.15 மணிக்கு நீதிமன்றுக்கு வருகை தந்த முன்னாள் மூத்த பொலிஸ் அத்தியட்சர் ஹேமந்த, பிற்பகல் 1.15 மணி முதல் வாக்கு மூலம் பெறும் நடவடிக்கைகள் ஆரம்பமாகின. பிற்பகல் 3.45 மணிவரை நீதிவானினால் வாக்குமூலம் பெறப்பட்டது. அதன்பின்னர் மூத்த பொலிஸ் அத்தியட்சர் ஹேமந்த அங்கிருந்து வெளியேறிச் சென்றார். (5,71)

# கட்சி தாவினால் பதவி பிடுங்கப்படும்

## உள்ளூராட்சி அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, பெப். 22
உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்கள் கட்சி மாறினால் அவர்களின் பதவி பறிக்கப்படும் என்று உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு எச்சரித்துள்ளது.

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சால் விடுக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் கட்சி மாறினால் அவர்களின் பதவியைப் பறிக்கும் அதிகாரம் கட்சிகளின் செயலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
உள்ளூராட்சி சபைகள் தேர்தல் சட்டத்தின் 10 (அ) பிரிவில் எந்தவொரு கட்சியின் செயலரும் தமது கட்சி சார்பில் தெரிவான உறுப்பினர்களின் கட்சி உறுப்புரிமை இல்லாமல் செய்வதாக மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிக்கு எழுத்து மூலம் அறிவிக்கலாம். அந்தக் கோரிக்கையில் நியாயம் இருப்பதாக மாவட்டத் தெரிவத்தாட்சி அதிகாரி கருதும் பட்சத்தில் குறித்த உறுப்பினரின் பதவியை இல்லாமல்செய்து, கட்சி செயலர் பரிந்துரைக்கும் வேறொரு நபருக்கு அந்தப் பதவியை வழங்க முடியும். இதன் காரணமாக கட்சி மாறும் நபர்கள் தங்கள் பதவிகளை இழக்க நேரிடும் - என்றுள்ளது. (5)

## பாசப் போராட்டம்

கொழும்பு, பெப். 22
உயிரிழந்த தனது 10 வயது மகனின் உடலுக்கு அஞ்சலி செலுத்த முதல் மனைவி இடமளிக்காதமைக்கு எதிர்ப்பு தெரிவித்து 47 வயதான நபர் வீட்டுக்கு அருகில் உள்ள மரத்தில் ஏறி எதிர்ப்புப் போராட்டத்தில் நேற்று ஈடுபட்டுள்ளார்.
அநுராதபுரம் பிரதேசத்தில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.
ருவான்வெல்ல பிரதேசத்தில் வசித்து வரும் 47 வயதான துசார ஆரியசிங்க என்பவரே தனது மகனின் உடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக இவ்வாறனதொரு செயலில் ஈடுபட்டுள்ளார்.
முதல் மனைவிக்கு பிறந்த மகன் காய்ச்சல் காரணமாக ஆபத்தான நிலையில், அநுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார். சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளான்.
சம்பவம் குறித்து கேள்விப்பட்ட தந்தை, பிள்ளையின் உடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு வீட்டுக்குச் சென்றுள்ளார். மகனின் உடலுக்கு அஞ்சலி செலுத்த மனைவி இடமளிக்காத காரணத்தால், மரத்தில் ஏறி எதிர்ப்பில் ஈடுபட்டுள்ளார். பொலிஸார் தலையிட்டு, அவரை அஞ்சலி செலுத்த பின்னர் அனுமதியளித்துள்ளனர். (5)



## சாட்சி கூண்டில் தடுமாறிய விமல்

கொழும்பு, பெப். 22
காலாவதியான கடவுச்சீட்டில் வெளிநாடு செல்ல முயற்சித்தமை தொடர்பில் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவுக்கு எதிராக நடைபெறும் வழக்கு விசாரணையில், நின்று கொண்டு சாட்சியமளிக்க தடுமாறிய விமல் வீரவன்சவுக்கு கதிரை வழங்கிய சம்பவம் நீர் கொழும்பு நீதிமன்றில் இரண்டு நாள்களுக்கு முன்னர் நடைபெற்றுள்ளது.
வழக்கின் போது விமல் வீரவன்சசாட்சிக்கூண்டில் நிற்கத் தடுமாறியுள்ளார். வழக்கு விசாரணை நிறைவடையும் வரை நாற்காலியில் அமர்ந்திருப்பதற்கு சட்டத்தரணிகளின் ஊடாக அனுமதி கோரப்பட்டது.
அதற்கமைய அங்கு அமர்ந்திருந்து சாட்சியளிப்பதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. சாட்சியாளர் கூண்டில் விமல் வீரவன்சவுக்கு அமர்ந்திருப்பதற்கு நாற்காலி ஒன்று வழங்கப்பட்டுள்ளது. அதிலிருந்தே அவர் சாட்சியமளித்துள்ளார். (5)

## கட்டணத்தை உயர்த்த அனுமதியுங்கள் முச்சக்கரவண்டிச் சாரதிகள் கோரிக்கை

கொழும்பு, பெப். 22
முச்சக்கர வண்டிகளுக்கான கட்டணத்தை உயர்த்த அனுமதிக்குமாறு இலங்கை முச்சக்கர வண்டி சாரதிகள் சங்கம் அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.
சங்கத்தின் தலைவர் சுனில் ஜயவர்த்தன இது தொடர்பில் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
முச்சக்கர வண்டிகளின் உதிரிப்பாகங்களுக்கான விலை கடந்த சில மாதங்களுக்குள் 150 மடங்கு அதிகரித்து விட்டது. உதிரிப்பாகங்கள் பொருத்துதல், பராமரிப்பு செலவுகள் என்பன கடுமையாக அதிகரித்துள்ளது. அரசு தலையிட்டு உதிரிப்பாகங்களின் விலைகளைக் குறைத்து முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்கு உதவிகளை வழங்க முன்வர வேண்டும்.
இல்லாவிட்டால் வேறு வழியின்றி எதிர் வரும் மார்ச் மாத இறுதியிலிருந்து முச்சக்கர வண்டிகளுக்கான கட்டணத்தை உயர்த்த நேரிடும்.
தற்போது முதலாவது கிலோ மீட்டருக்கு 50 ரூபா அறவிடும் முச்சக்கர வண்டி சாரதிகள், அதற்கடுத்த கிலோ மீட்டர்களுக்கு ஒரு கிலோமீட்டருக்கு 40 ரூபா வீதம் அறவிடுகின்றனர். கட்டணம் அதிகரிக்கப்பட்டால் ஆரம்பம் முதல் பயண முடிவு வரை கிலோ மீட்டர் ஒன்றுக்கு 50 ரூபா வீதம் அறவிடப்படும் என்றுள்ளது. (5)

## ஒரேயொரு வெற்றிடத்துக்கு 12,000 பேர் விண்ணப்பம்

கொழும்பு, பெப். 22
உயர் நீதிமன்றத்தின் பிரதான அலுவலக உதவியாளர் பதவிக்கு சுமார் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் தங்கள் விண்ணப்பங்களை அனுப்பியுள்ளனர்.
உயர் நீதிமன்றத்தின் பிரதான அலுவலக உதவியாளராக பதவி வகித்தவர் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளதால் அந்தப் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது.
சுமார் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் விண்ணப்பித்துள்ளனர். இவர்களில் 2 ஆயிரத்து 500 பேர் வரையானோர் நாளாந்தம் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இதனால் கடந்த சில நாள்களாக உயர் நீதிமன்ற வாசலில் நீண்ட வரிசையில் இளையோர் நேர்முகத்தேர்வுக்காகக் காத்திருக்கின்றார்கள். (5)

## நடவடிக்கை பணியகம் நிறுவும் இராணுவம்

ஐ.நா. அமைதிப்படை நடவடிக்கைகளில் இராணுவத்தை அதிகளவில் ஈடுபடுத்துவதை ஊக்குவிக்கும் வகையில், இராணுவம் தனியான நடவடிக்கைப் பணியகம் ஒன்றை உருவாக்கவுள்ளது.
குலேகங்கவில் உள்ள இராணுவத்தின் அமைதி, ஆதரவு நடவடிக்கைப் பயிற்சி மையத்துக்குச் சென்றிருந்த இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்க, அங்குள்ள அதிகாரிகளைச் சந்தித்த போது இந்தத் தகவலை வெளியிட்டார்.
இராணுவத்தில் வெளிநாட்டு நடவடிக்கைகளுக்கான தனியான பணியகம் ஒன்றை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இராணுவத் தலைமையகம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.
வெளிநாடுகளில் ஐ.நா படைகளில் படையினரை அதிகளவில் ஈடுபடுத்துவதை ஊக்குவிக்கும் நோக்கிலேயே இந்தப் பணியகம் அமைக்கப்படவுள்ளது. என்றும் அவர் தெரிவித்துள்ளார். (5)



## மட்டக்களப்பு மாநகர மேயராக சரவணபவன்

மட்டக்களப்பு, பெப். 22
மட்டக்களப்பு மாநகர சபை மேயராக தியாகராசா சரவணபவனை நியமிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.
மட்டக்களப்பு மாநகர சபையில் அதிகளவு ஆசனங்களில் வெற்றி பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அங்கு ஆட்சியமைப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.
மாநகர மேயரைத் தெரிவு செய்வது தொடர்பாக, தமிழ் அரசுக் கட்சியின் செயலர் துரைராஜசிங்கம் தலைமையில் நடந்த கூட்டத்தில் ஆராயப்பட்டது.
இதன்போதே, மட்டக்களப்பு மாநகர முதல்வர் பதவிக்கு தியாகராசா சரவணபவனை முன்மொழிவது என்று தீர்மானிக்கப்பட்டது.
இவர், கல்லடி 13ஆவது வட்டாரத்தில் இருந்து மட்டக்களப்பு மாநகரசபைக்குத் தெரிவு செய்யப்பட்டார்.
48 வயதுடைய தியாகராசா சரவணபவன், 1971ஆம் ஆண்டு தொடக்கம், 1973 ஆம் ஆண்டு வரை மட்டக்களப்பு மாநகர மேயராகப் பதவி வகித்த கந்தையா தியாகராசாவின் மகனாவார்.
அதேவேளை, பிரதி முதல்வர் பதவிக்கு ரெலோவைச் சேர்ந்த ஒருவருக்கு வழங்குவதெனவும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (5)

## புலி உறுப்பினர்கள் மீதான பிடியாணையை கூட்டு அரசு இல்லாமல் செய்துள்ளதாம்

கொழும்பு, பெப். 22
தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு எதிரான பன்னாட்டுச் சிவப்பு அறிக்கையுடனான 150 பிடியாணைகள் கூட்டு அரசால் இல்லாமல் செய்யப்பட்டுள்ளதாக, ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்க குற்றம் சுமத்தியுள்ளார்.
ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்கவை பன்னாட்டுச் சிவப்பு அறிக்கை பிடியாணை அடிப்படையில் கைது செய்து டுபாயிலிருந்து இலங்கை கொண்டு வர அரசு முயற்சி செய்தது. முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. அவருக்கு எதிராக பன்னாட்டுப் பொலிஸாரின் சிவப்பு அறிக்கை வெளியிடப்பட்டிருக்கவில்லை என்று டுபாய் பொலிஸார் கைவிரித்து விட்டனர்.
தற்போது அவருக்கு எதிராக சிவப்பு அறிக்கையொன்றை பெற்றுக் கொள்ள நிதி மோசடிப் பிரிவு பொலிஸார் நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.
இதற்கிடையே நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட தனக்கு எதிராக சிவப்பு அறிக்கை பெற்றுக் கொள்ள முனையும் கூட்டு அரசு தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு எதிரான சுமார் 150 சிவப்பு அறிக்கைகளை இல்லாமல் செய்துள்ளதாக உதயங்க வீரதுங்க குற்றஞ் சாட்டியுள்ளார்.
தீவிரவாதச் செயல்களுடன் தொடர்புடைய விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு எதிரான சிவப்பு அறிக்கைகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அழுத்தம் காரணமாகவே இல்லாமல் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (5)



## மயானத்தை அபகரிக்கவேண்டாமென முல்லைச் செயலகம் முன் போராட்டம்





முல்லைத்தீவு, பெப். 22
முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் முன்பாகப் போராட்டம் ஒன்று நேற்று இடம்பெற்றது. முல்லைத்தீவு வட்டுவால் கிராம மக்களுக்கும் செல்வபுரம் கிராம மக்களுக்கும் இடையிலுள்ள பொது மயானத்தை செல்வபுரம் மக்கள் குடியேற்றத்துக்காக அபகரிக்கப்படுவதாகவும் அதனைத் தடுத்துநிறுத்துமாறும்கோரி போராட்டம் இடம்பெற்றது.
மயானத்துக்கு ஒதுக்கப்பட்ட 5 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டது. அதனைப் பாதுகாக்க வேண்டும். அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். குறித்த பிரச்சினை தீர்க்கப்படாது இழுத்தடிக்கப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. பிரச்சினையை விரைவில் தீர்த்து வைக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கையில் தெரிவித்தனர். தமது கோரிக்கை மனுவை மாவட்ட செயலர் ரூபவதி கேதீஸ்வரனிடம் கையளித்தனர். அது தொடர்பில் பரிசீலிப்பதாக மாவட்டச் செயலர் கூறினார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.
(4)

# கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கான நேர்முகத்தேர்வை நிறுத்தவும்

## ஆளுநர், முதல்வர் உள்ளிட்டோரிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம், பெப். 22
வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான தெரிவு முறை தொடர்பில் விளக்கம் கேட்கச் சென்றபோது மாகாண கூட்டுறவு அமைச்சின் செயலாளர் தகாத வார்த்தைகளால் திட்டினார் என பாதிக்கப்பட்டதாகக் கூறும் நபர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். அரசிதழில் வெளியிட்ட தெரிவு முறைக்கு மாறாக தெரிவு முறை இடம்பெறுவதால் உடனடியாக நேர்முகத் தேர்வை நிறுத்தக் கோரி வடக்கு மாகாண ஆளுநர், முதல்வர், முதன்மைச் செயலளார், மற்றும் மனித உரிமை ஆணைக்குழு ஆகியோருக்கு முறைப்பாடு பதிவு செய்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:
'வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கான பரீட்சைகள் நடத்தப்பட்டு அதன் பெறுபேறுகளும் வெளியாகியுள்ளன. குறித்த பதவிக்கான தெரிவு முறை தொடர்பில் வெளியிடப்பட்ட அரசிதழில் புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலையில் உள்ளவர்களுக்கு நியமனம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இப்போது அதற்கு மாறாக மாவட்ட ரீதியாக தெரிவு முறை இடம்பெற்று எதிர்வரும் 28ஆம் திகதி நேர்முகத் தேர்வுக்கு சிலருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதில் அதிக புள்ளிகளை பெற்றவர்கள் புறக்கணிக்கப்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக மாகாண அமைச்சின் செயலாளரை நேரில் சந்தித்து விளக்கம் கேட்ட போது, அவர் எம்மை தகாத வார்த்தைகளால் திட்டினார். "நாம் தெரிவு செய்கின்ற முறையில்தான் நேர்முகத் தேர்வு நடக்கும் உங்களால் என்ன செய்ய முடியுமோ செய்யுங்கள் என்பது உட்பட பல வார்த்தைகளால் திட்டினார்" என்று பாதிக்கப்பட்டவர்கள் குற்றஞ்சாட்டினர்.
இந்த சம்பவம் தொடர்பில் வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சின் செயலாளரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது,
வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் மாவட்ட ரீதியாக வேலை வாய்ப்பு வழங்கப்படவேண்டும் என்ற பொதுக் கொள்கை இருக்கின்றது. அதிக புள்ளிகளை பெற்றவர்களுக்குத்தான் நாம் வேலை கொடுக்க வேண்டும் என்றால் அதிகளவில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களே தெரிவு செய்யப்படுவார்கள். ஏனெனில் வடக்கில் யாழ்ப்பாணம் தான் கல்வியில் முன்னிலையில் உள்ளது.
போரால் பாதிக்கப்பட்ட எமது மாகாணத்தில் அனைத்து மாவட்டத்தினருக்கும் வேலைவாய்ப்புச் கிடைக்க வேண்டும் என்பதேஎமதுநோக்கம். அதனையேநான் அவர்களுக்கு விளங்கப்படுத்தினேன். ஆனால் அவர்கள் எனது விளக்கத்தை பொறுமையாக கேட்பதாக இல்லை. தெரிவு முறை தொடர்பில் நான் முழு விளக்கத்தை அளித்தேனே தவிர தகாத வார்த்தைகள் எதனையும் நான் பிரயோகிக்கவில்லை- என்றார்.
(எ-8)

## சுய தொழில் முயற்சியாளர்களும் ஈ.ரி.எப் இல் இணைக்கப்படுகின்றனர்

யாழ்:ப்பாணம்,பெப்.22
சுயதொழில் முயற்சியாளர்கள் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச்சபையில் உறுப்பினர்களாக இணைத்துக் கொள்ளப்படுகின்றனர். ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிச்சபையில் இணைந்து கொள்ள விரும்பும் சுயதொழில் முயற்சியாளர்கள்; பிராந்திய அலுவலகங்களில் அதற்கான விண்ணப்பப்படிவத்தை பெற்று முழுமைப்படுத்தி அதற்கான மாதாந்த சந்தாப்பணத்தை செலுத்தி இணைந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:
சுயதொழில் முயற்சியாளர்களின் நலன்களைக் கருத்தில்கொண்டு அவர்களை ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச்சபையில் இணைத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையில் இணைந்துகொள்ளும் சுயதொழில்முயற்சியாளருக்கு ஆயுள்காப்புறுதி நன்மை, நிரந்தர இயலாமைக்கான காப்புறுதி இழப்பீடு, இருதய சத்திரசிகிச்சைக்கான நிதி உதவி, கண்வில்லை பொறுத்துவதற்கான நிதி உதவி, சிறுநீரக சிகிச்சைக்கான நிதி உதவி, பிள்ளைகளின் தரம் 5 புலமைப்பரிசில் வெகுமதி, வியாபார வீட்டுக்கடன், மருத்துவமனையில் தங்கி இருந்து சிகிச்சை பெறுவதற்கான நிதிஉதவி போன்ற உதவிகள் வழங்கப்படும் அத்துடன் அவர்கள் மாதாந்தம் செலுத்தும் பணத்துக்கான பங்குலாபம் மற்றும் வட்டியும் வழங்கப்படும் என்று ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
(எ-11)

# வட்டி, கடன் திட்டங்களை எதிர்த்து செவ்வாயன்று கண்டனப் பேரணி

## யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவாளர்கள் நடத்தவுள்ளனர்

யாழ்ப்பாணம், பெப். 22
கிராமிய உழைப்பைச் சுரண்டும் கொடிய வட்டி, கடன் திட்டங்களை எதிர்த்து கண்டனப்பேரணி நடத்தப்படவுள்ளது. எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டப முன்றலில் ஆரம்பித்து யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் வரை இது நடைபெறும் என்று யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவாளர்கள் தெரிவித்துள்ளனர்.
இது தொடர்பில் அவர்கள் அனுப்பியுள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,
கிராமிய கடன்கள் சரியான முறையில் நெறிப்படுத்தப்பட்டு வழங்கும் நடைமுறை இன்மையால் அவை பயனாளிகளை மீளமுடியாத கடனாளியாக்கி ஓர் இடர் நிலையையே தோற்றுவித்துள்ளது.
அதிகரித்த வட்டியாக கிராமிய மக்களின் உழைப்பு உறிஞ்சப்பட்டு நிதி நிறுவனங்களை நோக்கிச் செல்வதால்கிராமியமட்டத்தில் பணப்புளக்கம் குறைக்கப்பட்டு வறுமைநிலை தொடர்கிறது.
கடனைக் கொடுத்துவிட்டு பாலியல் லஞ்சம் கோரும் நிலை, கணவனுக்கு தெரியாது கடனைப்பெற்ற மனைவியால் ஏற்படும் குடும்பத் தகராறு, கடன்தொல்லை தாங்க முடியாது தற்கொலை வரைசெல்லும் பரிதாபங்கள் என்றவாறு துன்பங்கள் தொடர்கின்றன.
தேவையற்று அதிகரித்த நுகர்வுப் பழக்கம், அதிக ஆடம்பரமாக வாழவேண்டும் என்ற ஆசை கடன்களைப்பெற்று வருமானம் ஈட்டும் வழிகளில் முதலிடாமை போன்றவையும் இத்தகைய துன்பநிலை தொடரக் காரணமாகவே அமைகின்றது.
சிக்கனம் சேமிப்பு எமது பெண்களால் கண்களாகப் போற்றப்பட வேண்டும். கடன் நிபந்தனைகளை ஆராய்ந்து கடன் பெற வேண்டும். கடன் நிபந்தனைகளைப் பின்பற்றி ஒளிமயமான எதிர்காலத்தைத் தோற்றுவிக்க வேண்டும்.
கிராமிய மக்களின் முதுசமான கூட்டுறவுத்துறை எமது மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்குக் கவசமாக உள்ளது.
சிக்கனம் சேமிப்பை ஊக்குவித்து நியாயமான கடன் திட்டங்களைப் பெற்று கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்த கூட்டுறவுக் கடன் திட்டங்களில் இணைந்து கொள்ள வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.
(4)

## இளமாணி கற்கைக்கு விண்ணப்ப திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம் .பெப்.22
இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ இளமாணி பட்டக் கற்கை நெறிக்கான விண்ணப்ப முடிவுத்திகதி 25 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.
இந்தக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் www.ou.ac.lk என்ற இணையத்தள முகவரி ஊடாக விண்ணப்பிக்க முடியும் என்று யாழ்ப்பாண பிராந்திய உதவிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.
மேலதிக விபரங்களை யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தில் தொடர்பு கொள்ளவும் என்று அவர் தெரிவித்துள்ளார். (4)

## 5 ஆயிரம் கிலோ பனம் வெல்லம் இந்தமுறை உற்பத்தி எதிர்பார்ப்பு

யாழ்ப்பாணம், பெப்.22
பனை அபிவிருத்திச் சபை இந்த முறை 35 ஆயிரம் கிலோ வரையான பனம் வெல்லத்தை உற்பத்தி செய்யவுள்ளது. உற்பத்தியை விரைவில் ஆரம்பித்து வைக்கவும் சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.
யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை போன்ற பிரதேசங்களில் உள்ள சபைஉற்பத்திநிலையங்கள் ஊடாக உற்பத்தி ஆரம்பிக்கப்படவுள்ளன என்று யாழ்ப்பாணத்திலுள்ள பனை அபிவிருத்திச்சபை தெரிவித்தது. சபையால் உற்பத்தி செய்யப்படும் பனம் வெல்லத்துக்கு நல்ல கிராக்கியும் வரவேற்பும் கிடைத்துள்ளது.
ஆகவே கடந்த ஆண்டை விட இந்த ஆண்டில் கூடுதலான பனம் வெல்லம் உற்பத்தி செய்யப்படவுள்ளது.
பனம் வெல்லம் உள்ளூரில் கூடுதலாக சந்தைப்படுத்தப்பட்டு வருகின்றது.
இந்த்முறை வெளிநாடுகளுக்கும் அதிகளவு பனம் வெல்லத்தை ஏற்றுமதி செய்ய சபை உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.
(எ-17)

## இடமாற்ற மேன்முறையீடுகளின் முடிவுகள் அனுப்பப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், பெப். 22
வடக்கு மாகாணத்தில் நடப்பு வருடத்தின் இடமாற்றம் தொடர்பான மேன்முறையீடுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் நிராகரிக்கப்பட்ட முறையீடுகள் தொடர்பான விவரங்கள் அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்களுக்குத் தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று மாகாண பிரதித் தலைமைச் செயலகத்தின் நிர்வாகப்பிரிவு தெரிவித்துள்ளது.
இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது.
வடக்கு மாகாணத்தின் நடப்பு வருடத்துக்கான வருடாந்த இடமாற்றம் ஜனவரி முதலாம் திகதியுடன் நடைமுறைப்படுத்தும் வகையில் நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் உள்ளூராட்சித் தேர்தல் காரணமாக இடமாற்றங்கள் இடம்பெறவில்லை. தேர்தல் நிறைவுற்றுள்ளதால் இடமாற்றங்கள் பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி நடைமுறைப்படுத்தும் வகையில் அமைய வேண்டும் என்று திணைக்களங்களுக்கு தெரிவிக்கப்பட்டது. அத்துடன் இடமாற்றங்கள் தொடர்பில் கிடைப்பெற்ற மேன்முறையீடுகள் மேன் முறையீட்டுச் சபையால் பரிசீலிக்கப்பட்டு முடிவுகள் தொடர்பில் தற்பொழுது அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
முகாமைத்துவ உதவியாளர்கள் 75, அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 78, அலுவலகப் பணியாளர் 8, சாரதிகள் 8, பட வரைஞர் 10, தொழில்நுட்ப உத்தியோகத்தர் 26, கணினி பதியுனர் 4 உள்ளிட்ட 209 பேர்களின் மேன்முறையீடுகள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டது. இதில் 95 மேன் முறையீடுகள் எந்த மாற்றமும் செய்யப்படாமல் இடம்மாற்றம் வழங்கப்பட்ட அதே இடத்துக்கு பணியாளர்கள் செல்ல வேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளது. 19 இடம் மாற்றங்கள் இரத்து செய்யப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.
(4-ரி)




5 MBA
4 BABM (Hons)
3 BTEC HND in Business Management
2 Foundation Course BMAc
1 After O/L
After A/L

Pearson BTEC

BTEC HND in **BUSINESS MANAGEMENT**
- Management
- Human Resource Management
- Marketing

UGC Recognized TVEC Approved

- அனுபவம் வாய்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் குழாம்.
- இலகு தவணைக் கட்டணம்.
- வசதியான நவீன கற்றல் முறை மற்றும் சூழல்.
- பிரசித்தி மற்றும் பெறுமதி வாய்ந்தது.

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

Tenny 0766 693 681
Sanchu 0777 102 131
INTAKE NOW ON

BCAS Jaffna Campus,
#. 16, Point Pedro Road, Jaffna

20 YEARS

Best Employer Brand Award 2017 | No.1 BTEC Centre in Sri Lanka 2016 | Best Academic & Industry Interface 2016 | Academic Impact Winner 2016 | No.1 Higher Education Provider 2014 | BTEC Gold Partner 2013 | Performance Excellence Award 2011 | Fastest Growing BTEC Centre 2010

021 221 9910 | 011 259 7217 | info@bcas.lk | www.bcas.lk

# IN LOVING MEMORY OF
# Dr.Chandraranee Ambalavanar



Born 02 . 12 . 1929

Death 22 . 02 . 2017

' Yea, When this flesh and heart shall fail,
And mortal life shall cease,
I shall possess, within the veil,
A life of joy and peace'

**Death leaves a heartache no one can heal.**
**Love leaves a memory no one can steal**

Remembered one year on with much love by her sons, Thayalan and Darshan, her doughters in Law Mathy and Marilyn and her grandson Athithan.

(CS/14033)(11.17)

## காணி விற்பனைக்கு

மல்லாகம் நீதிமன்ற றோட்டு நீதிமன்றம் அருகில் றோட்டும் ஒழுங்கையும் எல்லையாகக் கொண்ட நரியிட்டான் பெயர் கொண்ட காணி விற்பனைக்குண்டு.


தொடர்பு: 077 241 6223
0044 7976 71 2245 (cs...4102 (13.17)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1979 ரேவதி சூரி. செவ் 3இல் குற்றமில்லை. அரச பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. சகல விவரங் களையும் குறிப்பு படத்துடன் Vibar இக்கு அனுப்பிவைக்கவும்

Vibar : 076 702 1622
T.P. : 076 707 4576

# Obituary



Born 11 . 06 . 1934

Death 19 . 02 . 2018

## Father Bennett Constantine

Rev Dr. Benette Constantine Retired Parish priest of St Peter church, Eaton Rapids, Michigan USA called to rest on 19th February. Son of Late Joseph & Jeyapackyam. Dearly beloved brother of Late Theresa, Late Julia, Late Basil, Late Bell, Late Charlotte, Late Monica, Late Anne, Lennie and Late Xavier. Celebration of life Mass will be at 11 am on Saturday 24th February 2018 at St Peter Church 515 E Knight St, Eaton Rapids, Michigan.

Information
Joe Constantine - nephew

(cs.14104(13.17)

### வடக்கு மாகாண பொதுச்சேவையில் வெற்றிடமாகவுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) ஆளணியின் கீழ் ஒப்பந்த அடிப்படையிலான தொழில்நுட்ப உத்தியோகத்தர் பயிலுனர் நியமனங்களை மேற்கொள்வதற்கான

## விண்ணப்பம் கோரல் - 2018

1. வடக்கு மாகாண பொதுச்சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) ஆளணியின் கீழ் வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பயிலுனர் நியமனங்களை மேற்கொள்வதற்கு தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்துடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.
2. இது தொடர்பில் மேலதிக விபரங்களையும், மாதிரி விண்ணப்பப் படிவத்தினையும் வடக்கு மாகாண சபையின் வலைத்தளமான www.np.gov.lk என்ற முகவரியில் பார்வையிட்டு தர விறக்கம் செய்யலாம்.
3. விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி 22.03.2018 ஆகும்.
4. மாதாந்த கொடுப்பனவாக சகல படிகளும் உள்ளடங்கலான திரட்டிய படியாக ரூபா.30,000.00 வழங்கப்படும். இந்நியமனம் ஊழியர் சேமலாபநிதி (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய (ETF) கடப்பாட்டினை கொண்டது.
5. இந்நியமனமானது தற்காலிகமானதொன்றாகும் என்பதுடன் நியமனம் பெறும் ஒருவர் எந்நியமத்தின் கீழும் நிரந்தர நியமனம் கோருவதற்கு உரித்தற்றவர் ஆவார்.
6. இந்நியமனம் பெறுவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பகுதியிலும் கடமையாற்ற தயாராகவிருத்தல் வேண்டும்.
7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 22.03.2018 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னதாகவோ பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாகம், பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் - நிர்வாகம், வடமாகாணம், மாகாணசபை வளாகம், A9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வடக்கு மாகாண பொதுச் சேவையில் வெற்றிடமாகவுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) ஆளணியின் கீழ் ஒப்பந்த அடிப்படை தொழில்நுட்ப உத்தியோகத்தர் பயிலுனர் நியமனங்களை மேற்கொள்வதற்கான விண்ணப்பம்" என குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

08. இந்நியமனம் தொடர்பான சேவை நிபந்தனைகள், பொது தகைமைகள், கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள், ஆட்சேர்ப்புமுறை மற்றும் சம்பள அளவுத்திட்டம் போன்றவை தொடர்பான பூரண விபரங்களை பந்தி 2 இல் குறிப்பிட்டுள்ளவாறாக வடக்கு மாகாண சபையின் வலைத்தளத்தில் பார்வையிட்டு அறிந்து கொள்ளலாம்.

**அ. பத்திநாதன்,**
**பிரதம செயலாளர்,**
**வடக்கு மாகாணம்,**

In.5941) (13.17)

# தெளிவூட்டல் செயலமர்வு

யாழ்ப்பாணம்,பெப்.22

தேசிய உற்பத்தித் திறன் விருதுகள் போட்டித் தொடர் 2018க்கான தெளிவூட்டல் செயலமர்வு யாழ்ப்பாண மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட் கிழமை காலை 9 மணி முதல் மாலை 4.30 மணிவரை மூன்று பிரிவுகளாக நடைபெறவுள்ளது.

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தால் 2018ஆம் ஆண்டுக்கான தேசிய உற்பத்தித் திறன் விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்தப் போட்டித் தொடருக்காக யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பாடசாலைத் துறை, அரசதுறை, உற்பத்தி மற்றும் சேவைகள் துறை நிறுவனங்கள் விண்ணப்பிப்பதற்கான தெளிவூட்டும் செயலமர்வு பின்வரும் நேர அட்டவணையின் கீழ் நடைபெறவுள்ளது.

முதலாவது அமர்வு காலை 9 மணி முதல் காலை 11 மணி வரை இடம்பெறும். இந்த அமர்வு பாடசாலைத் துறைக்கானதாகும். இரண்டாவது அமர்வு காலை 11.30 மணி முதல் மதியம் 1.30 மணி வரை இடம்பெறும். இது அரச துறைக்கானதாகும். மூன்றாவது அமர்வு மாலை 2 மணி முதல் மாலை 4.30 மணி வரை இடம்பெறும். இது உற்பத்தி மற்றும் சேவைகள் துறைக்கான அமர்வாகும்.

உற்பத்தித்திறன் விருதுகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் பாடசாலைகள், நிறுவனங்கள் என்பன தாம் சார்பான பிரதிநிதி ஒருவரை செயலமர்வில் கலந்துகொள்ள அனுப்பிவைக்குமாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் என். வேதநாயகன் தனது ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் போட்டித் தொடருக்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் மார்ச் மாதம் 28ஆம் திகதி ஆகும். (எ)

# யாழ்ப்பாண மாவட்டத்தில் புதிதாக 640 வீடுகள் அமைக்கப்படவுள்ளன

## தலா 5 லட்சம் வழங்குகிறது அதிகாரசபை

யாழ்ப்பாணம், பெப். 22

தேசிய வீடமைப்பு அதிகார சபையால் யாழ்ப்பாண மாவட்டத்தில் 640 வீடுகள் நடப்பு ஆண்டில் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன என்று சபையின் திட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவை ஒவ்வொன்றுக்கும் 5லட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது.



அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது. யாழ்ப்பாண மாவட்டத்தில் வீடுகள் அற்றவர்களுக்கான வீட்டுத் திட்டத்தை தேசிய வீடமைப்பு அதிகார சபை வழங்கி வருகின்றது. கடந்த ஆண்டில் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளின் ஊடாக 509 வீடுகள் அமைக்கப்பட்டன. அவை தற்போது முழுமை அடைந்து விட்டன. நடப்பு ஆண்டுக்கு 640 வீடுகள் அமைத்து கொடுக்கப்படவுள்ளன.

மூளாய் 50, துணைவி 53, அராலி தெற்கு 114, அராலி கிழக்கு 105, அராலி மேற்கு 70, ஈவினை 32, வரணி 10, மந்துவில் 20, மெலிஞ்சிமுனை 30, நாரந்தனை 10, சின்னமடு 25, தோப்பு 10, பொக்கணை 36, அச்சுவேலி 25, சண்டிலிப்பாய் 10, கட்டுடை 10, காக்கை தீவு 30 உட்பட தலா ஐந்து லட்சம் பெறுமதியான 640 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

வீடு அமைக்கும் போது கொள்வனவு செய்யப்படும் பொருள்களின் தரம், நிர்மாணம் என்பன சரியான வகையில் அமைய வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு பகுதிக்கும் தொழிநுட்ப உதவியாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர். சில கட்டடப் பொருள்கள் சபையின் கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனத்தின் ஊடாக பெற்றுக் கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-ரி)

## தவணைக் கட்டண அடிப்படையில் கொள்வனவு செய்த அலுமாரிக்கான

# பணம் பெறச்சென்றோர் கம்பியால் தாக்குண்டனர்

சாவகச்சேரி, பெப். 22

தவணைக் கட்டண அடிப்படையில் வழங்கப்பட்ட அலுமாரியின் மாதாந்தக் கட்டணத்தைப் பெறச் சென்றவர்கள் இரும்புக் கம்பியால் தாக்கிக் காயப்படுத்தப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை மீசாலை வடக்கு வேம்பிராயில் இடம்பெற்றது.

இதே பகுதியைச் சேர்ந்த ஒருவர் தவணைக் கட்டண அடிப்படையில் பொருள்கள் வழங்கும் வாகனத்தில் அலுமாரி ஒன்றைக் கொள்வனவு செய்துள்ளார். அதற்கான மாதாந்தக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்வதற்காகச் சென்றவர்களே கம்பியால் தாக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலுக்கு இலக்கான வறக்காப்பொலவைச் சேர்ந்த ஜெனிபர் அஸ்வர் (வயது 40) புத்தளத்தைச் சேர்ந்த எம்.எவ். ஜமாலின் றிஸ்வான் (வயது 22) ஆகிய இருவரும் தலையிலும் மற்றும் வயிற்றுப் பகுதியிலும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

# கூட்டுறவு பணியாளர்களின் கொடுப்பனவுகள் யாவும் விரைவாக வழங்கப்பட வேண்டும்

## வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் ,பெப்.22

கூட்டுறவுப் பணியாளர்களுக்கான கொடுப்பனவுகள் யாவும் விரைவாக வழங்கப்பட வேண்டும். கடந்த காலங்களில் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய கொடுப்பனவுகளின் நிலுவைகளும் உடனடியாக வழங்கி சீர் செய்யப்பட்ட வேண்டும் என்று வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன் கேட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: கூட்டுறவுப் பணியாளர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு சுற்றறிக்கைக்கு அமைவாக வழங்கப்பட வேண்டும். அதாவது சங்கம் அந்த மாதத்தில் இலாபம் அடையும் பட்சத்தில் கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும்.

களச் சுற்றறிக்கைகள் சீராக மேற்கொள்ளப்பட்டு கொடுப்பனவுகளை விரைவாக பணியாளர்களுக்கு வழங்க உரிய சங்க நிர்வாகங்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

குறிப்பாக கடந்த ஆண்டு மே மாதத்தில் வெளியிடப்பட்ட புதிய சுற்றறிக்கைக்கு அமைவாக பணியார்களுக்கான சேவைக் கால கொடுப்பனவுகள்கூட அனைவருக்கும் வழங்கப்படவில்லை என்று முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்த கொடுப்பனவுகள் யாவும் பணியாளர்களின் சேவைக்காலம் கணக்கிடப்பட்டு அவை உடனடியாக அமுல்படுத்த வேண்டும். அதற்காக நிலுவைகளையும் சங்கங்கள் நிதி வசதிக்கு ஏற்ற வகையில் விநியொகிக்க வேண்டும்.

பணியாளர்களுக்கான கொடுப்பனவு விடயங்களிலும் சரி ஏனைய விடயங்களிலும் வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களமும் முனைப்புடன் செயற்படும். கொடுப்பனவு விடயங்களில் சங்கத்தால் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படும் சகல விண்ணப்பங்களும் உடன் ஆராயப்பட்டு காலதாமதம் இன்றி சீர் செய்யப்பட வேண்டும்என்றார். (எ-17)

# சாரணர் துருப்பின் நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், பெப்.22

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சாரணர் துருப்பின் நூற்றாண்டு விழா கல்லூரி மண்டபத்தில் இன்று மதியம் 1.30 மணிக்கு துருப்புத் தலைவர் பா.கயேந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் கலந்துகொள்ளவுள்ளார்.

நிகழ்வில் சாரணர் நூற்றாண்டு நூல் வெளியீடும், பெற்றோர் மதிப்பளிப்பும், கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (எ)

# உள்ளூர் கத்தரிச் செய்கையில் ஆர்வம் காட்டியுள்ள விவசாயிகள்

யாழ்ப்பாணம் ,பெப்.22

யாழ்ப்பாணக் குடாநாட்டில் விவசாயிகள் பரவலாக உள்ளூர் கத்தரிச் செய்கையில் அதிக அக்கறை காட்டியுள்ளனர். தற்போது அவற்றை அறுவடை செய்யும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

சில இடங்களில் திருநெல்வேலி ஊதா இனக்கத்தரி பயிரிடப்பட்டுள்ளன. அவை சந்தைக்கு தாராளமாக வந்தும் சேர்கின்றன.

மட்டுவில் பிரதேசத்தில் வெள்ளை கத்தரிச் செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். இதற்கான அறுவடை பணிகள் அடுத்த மாதம் அளவில் ஆரம்பிக்கப்பட உள்ளன.

கத்தரி செய்கையில் அதிகமான செய்கையாளர்கள் ஈடுபட்டுள்ளதால் அவற்றின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுக் காணப்படுகின்றது. (எ-17)ய

# வெற்றிலை மென்றவாறு மீன் விற்ற பெண்ணுக்கு 3,000 ரூபா தண்டம்

ஊர்காவற்துறை மீன்சந்தையில் வெற்றிலைமென்றவாறு மீன் விற்பனை செய்த பெண்ணுக்கு 3ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்து ஊர்காவற்துறை நீதிவான் மன்று.

ஊர்காவற்துறை நீதிவான் மன்றில் நீதிவான் ஏ.எம்.எம்.றியாழ் முன்னிலையில் நேற்றைய தினம் பொது சுகாதர பரிசோதகர் குறித்த வழக்கைத் தாக்கல் செய்தார். விசாரணையின் போது குறித்த பெண் குற்றத்தை ஒப்புக் கொண்டார். அதனையடுத்து பெண்ணுக்கு நீதிவான் 3ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்துத் தீர்ப்பளித்தார். (எ-37)

# இந்தியாவில் தடுப்பிலிருந்த இலங்கை மீனவர்கள் விடுவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.22

கடந்த 12ஆம் திகதி விடுவிக்கப்பட்ட 109 இந்திய மீனவர்களும் இலங்கைக் கடற்படையின் வடபிராந்திய தலைமைப் பீடத்தால் இந்திய கடலோர காவற்படையினரிடம் நேற்றுமுன்தினம் ஒப்படைக்கப்பட்டனர். இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 6 இலங்கை மீனவர்களும் இலங்கைக் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

காங்கேசன்துறைக்கு வடக்கே பன்னாட்டு கடல் எல்லைப் பகுதியில் வைத்து 109 இந்திய மீனவர்கள, இலங்கைக் கடற்படையின் வட பிராந்திய தலைமைப் பீடத்தால் நேற்றுமுன்தினம் இந்தியக் கடலோர காவற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட அதேசமயம், இந்தியக் கடலோர காவற்படையினரால் ஒப்படைக்கப்பட்ட 6 இலங்கை மீனவர்களும் கையேற்கப்பட்டுள்ளனர்.



குறித்த 6 இலங்கை மீனவர்களும் இந்தியக் கடல் எல்லைக்குள் பிரவேசித்த குற்றச்சாட்டில் இந்தியக் கடலோர காவற்படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களாவர். அதேபோன்று இலங்கைக் கடல் பகுதிக்குள் பிரவேசித்த குற்றச்சாட்டில் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்களே இவ்விதம் ஒப்படைக்கப்பட்டவர்களாவர்.

குறித்த மீனவர்கள் அனைவரும் இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசித்து தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளைப் பயன்படுத்தி மீன் பிடித்த குற்றச்சாட்டில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டவர்களாவர். (எ-8)



# சிறையில் அடைக்கப்பட்ட மாணவரை விடுவியுங்கள்

## கிழக்குப் பல்கலை: மாணவர் போராட்டம்

மட்டக்களப்பு, பெப்.22

**இலவசக் கல்விக்கான போராட்டத்தின்போது கைது செய்யப்பட்டு சிறைவைக்கப்பட்ட பல்கலைக் கழக மாணவ செயற்பாட்டாளர்களை உடனடியாக விடுதலை செய்யக்கோரி கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். வந்தாறுமூலை வளாகத்திற்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.**

பல்கலைக்கழக விடுதிப் பகுதியிலிருந்து சுலோகங்கள் மற்றும் பதாதைகளுடன் பிரதான வீதிக்கு வந்த மாணவர்கள் தமது கோரிக்கையை வலியுறுத்தி கோசமிட்டனர்.

"எமது மாணவர் சங்கப்பிரதிநிதிகள் சுயநலத்திற்காக அன்றி மாணவர்களது உரிமைகள் மற்றும் நலன்களுக்காகவே போராடினார்கள். மாணவர்களது உரிமைகளுக்காக போராடிய எமது தலைவர்களை தொடர்ந்தும் சிறையில் வைத்திருப்பது எந்தவகையில் நியாய மானது" எனவும் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டோர் கேள்வி யெழுப்பினர். (ற-ரி5)

## ஹெரோயினுடன் இளைஞன் கைது

திருகோணமலை,பெப்.22

திருகோணமலை, உப்புவெளியில் ஹெரோயின் போதைப் பொருளை தம் வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

பாலையூற்று பகுதியை சேர்ந்த 24 வயதுடைய இளைஞரே கைதுசெய்யப் பட்டார்.

சந்தேகநபரிடமிருந்து, பத்து மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹெரோயின் போதைப்பொருள் விற்பனை செய்யப்படுகிறது என உப்புவெளி போதைப்பொருள் குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்தே இவர் கைது செய்யப் பட்டார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ற.ரி2.40)

## தனித்து எடுக்கும் முடிவே பிரச்சினைக்குக் காரணம்

### மட்டு.செஞ்சிலுவைத் தலைவர் தெரிவிப்பு





மட்டக்களப்பு, பெப்.22

தனித்தனியாக முடிவெடுப்பதாலேயே பெரிய பிரச்சினைகள் உருவாகின்றன என்று மட்டு.செஞ்சிலுவைத் தலைவர் த.வசந்தராஜா தெரிவித்தார்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளையின் தொண்டர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி அந்தச்சங்கத்தின் காரியாலய கேட்போர்கூடத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது,

"அடிமட்டம் தொடக்கம் மேல்மட்டம் வரையில் தலைமைத்துவப் பண்புகள் வளர்க்கப்படல் வேண்டும். தலைமைத்துவப் பண்புகளிலே தீர்மானம் எடுத்தல் மிகவும் முக்கியமாக கருதப்படுகின்றது.

வீட்டிலும்சரி நாட்டிலும்சரி பெரும் பிரச்சினைகள் உருவாவதற்கு முக்கியகாரணம் தம்மோடு இருப்போரை மறந்து தனியாக முடிவெடுப்பதே ஆகும். தாங்களே அறிவாளிகள் தாங்களே பெரிய அனுபவசாலிகள் என்று பலர் தங்களை தவறாக மதிப்பிட்டுக் கொள்கின்றார்கள். அதனால் தாங்கள் எடுக்கின்ற முடிவுகளேசரி எனவும் அதனையே மற்றோர் ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் எதிர்பார்க்கின்றனர்.

அதனால்தங்களது முடிவுகளைபிறர் மீதுதிணிக்கின்றனர். இதனால் பெரியபிரச்சினைகள் உருவாகின்றன. இதன் விளைவு குடும்பங்கள் கலைகின்றன, சங்கங்கள் பிரிகின்றன, அமைப்புக்கள் அழிகின்றன. மொத்தத்தில் சமூகமே இதனால் பாதிக்கப்படுகின்றது" என்றார். (ற-ரி5)

## விபத்தில் பெண்ணும் குழந்தையும் சாவு

கொழும்பு,பெப்.22

கொழும்பு கண்டி வீதியின் தெலியகொன்ன பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இரண்டரை வயது குழந்தை ஒன்றும் பெண்ணொருவரும் உயிரிழந்தனர்.

மாவத்தகம பரகஹதெனிய பகுதியை சேர்ந்தவர்களே சாவடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

உந்துருளியும் டிப்பர் வாகனமும் மோதியதிலேயே விபத்து ஏற்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த இருவரும் குருணாகல் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போதும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

சம்பவம் தொடர்பில் டிப்பர் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டதுடன், மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ற.ரி2)

## கொக்கெயினுடன் ஒருவர் கைது

கொழும்பு,பெப்.22

யாழ்ப்பாணத்திலிருந்து கொக்கெய்ன் போதைப் பொருளைக் கொண்டு சென்றவர் கைதுசெய்யப்பட்டார்.

23 வயதான சந்தேகநபர் யாழ்ப்பாணம், இளவாலைப் பகுதியைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் ஜிந்துப்பிட்டியில் வைத்து கைதுசெய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவரிடமிருந்து 20 இலட்ச ரூபா பெறுமதியான 100 கிராம் கொக்கெய்ன் கைப்பற்றப்பட்டது என்று புறக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ற.ரி2)

## குடியிருப்பில் தீ விபத்து

கொழும்பு, பெப்.22

நோர்வூட் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பொகவந்தலாவ எல்பட மேற்பிரிவுத் தோட்டத்தில் உள்ள லயன் குடியிருப்பு ஒன்றில் நேற்றுத் தீ விபத்து ஏற்பட்டது.

இந்தத் தீவிபத்தால் குடியிருப்பில் இருந்த உபகரணங்கள் தீயில் எரிந்து சேதமாகின எனத் தெரிவிக்கப்பட்டது.

குடியிருப்பில் வைக்கப்பட்டிருந்த விளக்கின் திரி பற்றி எரிந்ததாலேயே இந்த விபத்து ஏற்பட்டது என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தோட்ட மக்களும் பொலிஸாரும் இணந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை நோர்வூட் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)



## ஆரம்ப பாடசாலையின் காணியில் திடீரெனத் தீ

### ஹற்றனில் சம்பவம்

ஹற்றன்,பெப்.22

ஹற்றன் கல்வி வலயத்துக்குட்பட்ட ஹைலண்ஸ் ஆரம்பப்பிரிவு பாடசாலைக்குட்பட்ட தேயிலை மலையும், காணியும் நேற்று மதியம் திடீரெனத் தீப்பற்றி எரிந்தன. ஹற்றன் டிக்கோயா நகரசபையின் தீயணைப்பு பிரிவினர் கடும் முயற்சிக்கு மத்தியில் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்தப் பாடசாலைக்கு இ.தொ.காவின் தலைவரும், பொது செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமானால் பெற்று கொடுக்கப்பட்ட சுமார் 200 ஏக்கர் காணியே தீப்பற்றியது எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி5)



## வேலைதேடும் பட்டதாரிகள் மட்டக்களப்பில் கவனவீர்ப்பு

### இழைத்த அநீதிக்கு நீதி வேண்டும் என வலியுறுத்து

மட்டக்களப்பு, பெப்.22

எமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி வேண்டும் என வலியுறுத்தி, மட்டக்களப்பு நகரிலுள்ள காந்தி பூங்காவுக்கு முன் வேலைதேடும் பட்டதாரிகள், கவனவீர்ப்புப் போராட்டமொன்றை நேற்று முன்னெடுத்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட வேலைதேடும் பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தின் போது, "பட்டதாரிகளுக்கு நீதி வேண்டும்", "உடனடியாக அரச தொழில் வழங்க வேண்டும்" எனவும் கிழக்கு மாகாண சபையால் நடத்தப்பட்ட ஆசிரியர் போட்டிப் பரீட்சையில் 40 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த அனைத்துப் பட்டதாரிகளுக்கும் நியமனம் வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

"ஒரே மாகாணத்தில், வேறுபட்ட வெட்டுப் புள்ளி எதற்கு?, வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எங்கே?, சமூகத் தலைமைகள் எங்கே? போன்ற கோஷங்களை, அவர்கள் எழுப்பினர். (ற-ரி5)



## மருத்துவரின் இடமாற்றத்தை நிறுத்தக்கோரி ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு,பெப்.22

ஏறாவூர் ஆதார மருத்துவமனையிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்ட பொது மருத்துவ நிபுணரை மீண்டும் பெற்றுத் தரக்கோரி மருத்துவமனைக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

பொது மக்கள் பொது அமைப்புக்களால் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பல்வேறு பௌதீக வள குறைபாடுகளுக்கு மத்தியில் மருத்துவர்கள் பற்றாக்குறையுடன் இயங்கி வரும் ஏறாவூர் ஆதார மருத்துவமனையில் கடமையாற்றிய பொது மருத்துவர் கடந்த திங்கட்கிழமை முதல் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டார்.

இதனால் மருத்துவர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதோடு மருத்துவ சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது என்றுஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர்.

உடனடியாக பதிலீடு செய்யப்பட்டு மீண்டும் அதே மருத்துவரை நியமிக்க வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ந.ரி2,46)

## அனுமதியின்றி மணல் ஏற்றிய இருவர் கைது

திருகோணமலை,பெப்.22

திருகோணமலை, கந்தளாய், பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி டிப்பர் வாகனமொன்றில் மணல் ஏற்றிச் சென்ற இருவர் நேற்றிரவு கைது செய்யப்பட்டனர்.

கந்தளாய், ரஜஎல பகுதியைச் சேர்ந்த 22,34 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர்கள் அனுமதிப்பத்திரமின்றி கந்தளாயிலிருந்து வான்எல பகுதிக்கு மணல் ஏற்றிச் சென்ற போது கந்தளாய் போக்குவரத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ந-ரி2,40)

# உ.கிழங்கு இறக்குமதி வரியை அதிகரியுங்கள்

## நுவரெலியா மாவட்ட விவசாயிகளும் கோரிக்கை

**நுவரெலியா,பெப்.22**

**உருளைக் கிழங்கு இறக்குமதி காரணமாக நுவரெலியா விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளும் நிலை உருவாகியுள்ளது. இது தொடர்பில் அரசு விரைந்து செயற்படாவிட்டால் பெரும் போராட்டம் ஒன்றை முன்னெடுப்போம். இவ்வாறு நுவரெலியா விவசாய உற்பத்திகள் சங்கத்தின் தலைவரும், நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தின் வர்த்தக சங்கத் தலைவருமான சுசில் சாந்த தெரிவித்தார்.**

நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது,

விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளும் நிலையை அரசு உருவாக்கியிருக்கின்றது. எமது பிரச்சினைக்கு அரசு தீர்வு காணாவிட்டால் வீதியில் இறங்கி போராட்டம் செய்வதற்கும், கடையடைப்பு போக்குவரத்து தடை போன்றவற்றை மேற்கொள்வதற்கும் எங்கள் சங்கம் முடிவெடுத்துள்ளது.

இன்று (நேற்று) இடம்பெற்ற வர்த்தக சங்க கூட்டத்திலேயே நாம் ஏகமனதாக இந்த தீர்மானத்தை மேற்கொண்டிருக்கின்றோம். நுவரெலியா விவசாயிகள் மிகவும் இக்கட்டான ஒரு நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

ஒரு கிலோ உருளைக் கிழங்கின் விலை 70ரூபாவுக்கு விற்கப்படுகின்றது. இது எவ்விதத்திலும் போதாது. இதற்கு முக்கிய காரணம் நுவரெலியா, பண்டாரவளை, பதுளை போன்ற உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற பகுதிகளில் விளைச்சல் காலங்களில் அரசு உருளைக்கிழங்கை இறக்குமதி செய்வதே. இதற்கான இறக்குமதி வரியும் மிகவும் குறைவாகவே இருக்கின்றது.

ஒரு கிலோ உருளைக்கிழங்கை உற்பத்தி செய்வதற்கு 70 முதல் 75 ரூபாய் செலவாகின்றது.

50 கிலோ இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக்கிழங்கின் விலை 14 ஆயிரத்து 500 ரூபாவாக இருக்கின்றது. ஒரு கிலோ 290 ரூபாவாக இருக்கின்றது. ஒரு கிலோ இரசாயன உரம் 70 முதல் 75 ரூபாவாக இருக்கின்றது. தொழிலாளர்களின் நாள் சம்பளம் ஆயிரத்து 700 முதல் 2 ஆயிரம் ரூபா வரை வழங்க வேண்டும். இப்படிப் பல போராட்டங்களின் மத்தியில் உற்பத்தி செய்கின்ற பொழுது விளைச்சலுக்கான விலை கிடைப்பதில்லை.

அநேகமான விவசாயிகள் தங்களுடைய வீடுகளை தனியார் நிறுவனங்களில் அடகு வைத்து கடன் பெற்றிருக்கின்றார்கள். கடன்கள் செலுத்த முடியாமல் சில விவசாயிகள் நஞ்சருந்தி தங்களுடைய உயிரை மாய்த்துக் கொள்ளவும் யோசிக்கின்றார்கள். இறுதி சடங்குகளை செய்வதற்கு கூட அவர்களிடம் பணம் இல்லை. பிள்ளைகளின் பாடசாலை கட்டணம் உரிய நேரத்துக்கு செலுத்த முடிவதில்லை இப்படி பல போராட்டங்களுடன் விவசாயிகள் தங்களுடைய விவசாயத்தை மேற்கொண்டு வருகின்றார்கள்.

உள்ளூர் விவசாயிகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசிடம் இருக்க வேண்டும். ஆனால் அதனை அரசு மறந்து செயல்படுகின்றது.

நாம் அரசிடம் கேட்பது மிக விரைவில் உரிய தீர்வு காணப்படாவிட்டால் நிலைமை மிகவும் மோசமாகும். நுவரெலியாவிலிருந்து அனுப்பப்படும் உற்பத்திகள் நிறுத்தப்படும். போக்கு வரத்து முற்றாக முடக்கப்படும். உடனடி தீர்வை நாங்கள் எதிர்பார்க்கின்றோம். என்றார்.

இதே வேளை வடக்கில் உற்பத்தி செய்யப்படும் உருளைக்கிழங்கை மிகக் குறைந்த விலைக்கு விற்பனை செய்ய வேண்டியுள்ளது. இறக்குமதியாகும் உருளைக் கிழங்குக்கான வரியை அதிகரிக்க வேண்டும் என்று வடக்கு விவசாயிகள் அரச தலைவரிடம் கோரிக்கை விடுத்திருந்திப்பதும் குறிப்பிடத்தக்கது. (ந.ரி2)



## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு ஆதரவாக ஜேர்மனியில் நேற்றுப் பேரணி

யாழ்ப்பாணம்,பெப்.22

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வடக்கு, கிழக்கில் நடத்தும் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்து ஜேர்மன் தலைநகர் பேர்லினில் நேற்று கவனவீர்ப்புப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

தாயகத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் அறவழி போராட்டம் ஒரு ஆண்டு நிறைவடைவதை முன்னிட்டே இக் கவனவீர்ப்பு பேரணி நடத்தப்பட்டது. கடும் குளிரையும் பொருட்படுத்தாது தமிழ் உறவுகள் கலந்துகொண்டு தாயக மக்களுக்கு பன்னாட்டு சமூகத்திடம் நீதி கோரினர். தொடரும் இன அழிப்பின் கூறுகளில் தமிழினம் தொடர்ந்தும் அடக்குமுறைகளில் சிதையும் உண்மைகளை உலக சமூகத்தக்கு எடுத்துரைக்கும் வகையில் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டது. ஈடுபட்டனர். ஜேர்மன் வெளிவிவகார அமைச்சுக்கும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் அறவழிப் போராட்டத்துக்கு உடனடியான நீதி கிடைக்க வேண்டும் எனும் கோரிக்கையோடு மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது. (ந.ரி2)

## மின்சாரம் தாக்கி யானை உயிரிழப்பு

பொலன்னறுவை,பெப்.22

பொலன்னறுவை, அளுத்வெவ பகுதியில் மின்சாரத் தாக்குதலுக்கு இலக்காகி யானை ஒன்று உயிரிழந்தது என்று பொலன்னறுவைப் பொலிஸார் தெரிவித்தனர்.

பயிர்ச் செய்கைகளை பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த சட்டவிரோத மின்வேலியல் அகப்பட்டே யானை உயிரிழந்தது. வஸ்கமுவ தேசிய வனத்தைச் சேர்ந்த 25 வயதான இந்த யானை, ஒன்பது அடி உயரம் கொண்டது என வனஜீவராசிகள் அதிகாரிகள் தெரிவித்தனர். (ந.ரி2)

## உற்பத்திப் பொருள் கண்காட்சி

மட்டக்களப்பு,பெப்.22

வவுணதீவு கிழக்கு மாகாண மாதர் அபிவிருத்திப் பயிற்சி நிலையத்தால் நடத்தப்பட்ட தொழிற் பயிற்சியை நிறைவுசெய்த யுவதிகளின் உற்பத்திப் பொருள் கண்காட்சியும் விற்பனையும், வவுணதீவு மாதர் அபிவிருத்திப் பயிற்சி நிலையத்தில், நேற்று நடைபெற்றன.

கடந்த ஆண்டில் தையல், ஐசிங்கேக், கைப்பணிப் பொருள்கள், ஆடை அலங்காரம் போன்றவை தொடர்பான ஒரு வருட டிப்ளோமா பயிற்சி நெறியை நிறைவு செய்த யுவதிகளே, இக் கண்காட்சியிலும் விற்பனை நிகழ்விலும் ஈடுபட்டனர்.

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். அரசகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், பிரதேச செயலாளர் எஸ். சுதாகர், திட்டமிடல் பணிப்பாளர் ரி. நிர்மலராஜ், மூத்த தையல் போதனாசிரியை உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ந.ரி2)



## சிறப்புத் தேவையுடையோர் கிழக்கு ஆளுநருடன் சந்திப்பு

மட்டக்களப்பு,பெப்.22

வவுணதீவு மண்முனை சிறப்புத் தேவையுடையோருக்கான அமைப்பினருக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகமவுக்குமிடையிலான கலந்துரையாடல், ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

கலந்துரையாடலின்போது, தமது அமைப்பில் 567 அங்கத்தவர்கள் உள்ளனர் என்றும் சிறப்பு தேவையுடையோருக்கான பாடசாலையொன்றும் தற்காலிக கட்டடமொன்றில் இயங்கி வருகின்றது என்று ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். ஆளுநருக்கு மனுவொன்றையும் கையளித்தனர்.

அதில், 2007ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டு தற்போது 567 அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது அவர்களது மாதாந்த சந்தாப் பணத்தில் எமது சங்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். எமது அமைப்பானது ஒரு நிரந்தர கட்டடம் இல்லாமல் சிரமங்களுக்கிடையில், தற்காலிக கட்டடத்தில், மாற்றுத்திறனாளி சிறுவர்களுக்காக ஒரு பாடசாலையையும் நடத்தி வருகின்றோம்.

வாழ்வக அமைப்பில் இருக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கு நிரந்த வருமானம் ஈட்டக்கூடிய வகையில், சுயதொழில் வகைகளை வழங்கி, அவர்களது வாழ்க்கை முன்னேற்றமடையச்செய்ய நடவடிக்கை எடுக்கவும் என்று ள்ளது. (ந.ரி2)



## குழந்தைகள் இறப்பு விகிதத்தில் பாதுகாப்பானது ஜப்பான்

டோக்கியோ, பெப். 22

பன்னாட்டு அளவில் குழந்தைகள் இறப்பு விகிதத்தின்படி பாகிஸ்தான் அதிக அளவு குழந்தைகள் இறப்புகளுடன் அபாயகரமானதாகவும், ஜப்பான் குறைந்த அளவு குழந்தைகள் இறப்புகளுடன் பாதுகாப்பானதாகவும் உள்ளதாக யுனிசெப் அமைப்பு தெரிவித்துள்ளது. பிறந்து 30 நாள்களுக்குள்ளான குழந்தைகள் இறப்பு விகிதம் அதிகமாகக் கொண்டு பாகிஸ்தான் அபாயகரமானதாகவும், ஜப்பான் குறைந்த அளவிலான குழந்தை இறப்பு விகிதத்துடன் பாதுகாப்பானதாகவும் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜப்பான், ஐஸ்லாந்து, சிங்கப்பூர் நாடுகளில் பிறக்கும் குழந்தைகள் உயிர்பிழைத்து வாழ்வதற்கு அதிக சாத்தியம் இருக்கிறது. பாகிஸ்தான், மத்திய ஆப்பிரிக்க நாடுகள், ஆப்கானிஸ்தானில் பிறந்த குழந்தைகள் உயிர்பிழைக்கும் வாய்ப்பு மிகவும் மோசமாக உள்ளது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## கற்பனைக்கு எட்டாத உறைபனி

உலகின் மிகக் குளிர்ந்த பகுதியாக இருக்கிறது சைபீரியாவில் உள்ள ஒமியா கோன் கிராமம். சாதாரணமாகவே இந்தக் கிராமம் குளிர் பிரதேசமாகத்தான் இருக்கும். தற்போது 'மைனஸ் 62 டிகிரி செல்சியஸ்' என்று பதிவாகியிருக்கிறது. வெப்பநிலையை அளவிடும் தெர்மாமீட்டரே கடுங் குளிரால் உறைந்து விட்டதாம். இந்தக் கிராமத்தில் 500 பேர் வசித்து வருகிறார்கள். இவர்கள் பனிமான்களை மேய்த்துக்கொண்டு நாடோடிகளாக ஒரு காலத்தில் வாழ்ந்தவர்கள்.



பேனாவில் உள்ள மை, வாகனங்களில் உள்ள பெட்ரோல் உட்பட அனைத்தும் உறைந்துவிட்டன. வீட்டை விட்டு வெளியே வந்தால் இமைகளில் கூடப் பனி படர்ந்துவிடுகிறது. 1933ஆம் ஆண்டுக்கு பிறகு இப்போதுதான் இப்படி ஓர் உறைபனிச் சூழலை மக்கள் சந்திக்கிறார்கள் என்று அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



# சோதிக்க வேண்டாம்

## ஈரானுக்கு இஸ்ரேல் எச்சரிக்கை

டெல் அவிவ், பெப். 22

"இஸ்ரேலையும் அதன் பாதுகாப்புப்பொறி முறைகளையும் சோதிக்க வேண்டாம்" என்று ஈரானுக்கு கடும் எச்சரிக்கை விடுத்தது இஸ்ரேல். இஸ்ரேலின் தலைமை அமைச்சர் நெத்தன்யாகு இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

ஈரானின் ஆளில்லா வானூர்திகள் இஸ்ரேலை வேவு பார்க்கின்றன என்று இந்த மாதத் தொடக்கத்தில் இருந்து குற்றம்சாட்டி வருகிறது இஸ்ரேல்.

இஸ்ரேலின் எல்லைக்கு மேலாகப் பறந்த ஒரு வானூர்தி அவ்வாறு சுட்டுவீழ்த்தப்பட்டது. இந்தப் பின்னணியில் இரண்டு நாடுகளுக்கும் இடையில் முறுகல் முற்றியுள்ள நிலையில் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார் நெத்தன்யாகு. "இஸ்ரேல் தனது எல்லையில் பயங்கரவாதத்தை நுழைய அனுமதிக்காது. ஒருவேளை தேவை ஏற்பட்டால்




ஈரானின் பிரதிநிதிகளுக்கு எதிராக மட்டும் அல்ல ஈரானுக்கு எதிராகவும் நாங்கள் செயல்படுவோம். இஸ்ரேலை சோதிக்க வேண்டாம்" என நெத்தன்யாகு மேலும் தெரிவித்தார். (ம)

## கொதிநிலையில் சினபங் எரிமலை


இந்தோனேசியாவின் சுமாத்ராதீவில் உள்ள சினபங் எரிமலை, நேற்றுமுன்தினம் தனது உறக்க நிலையைக் கலைத்துள்ளது. சுமார் 5 ஆயிரம் மீற்றர் உயரத்துக்கு எரிமலை சாம்பரைக்கக்கியுள்ளது என்று அறியமுடிகிறது.

பசிபிக் மற்றும் இந்தியப் பெருங்கடலுக்கு நடுவே அமைந்துள்ள இந்தோனேசிய நிலப்பகுதி நெருப்புவளையம் என அழைக்கப்படுகிறது.

இங்கு ஏராளமான எரிமலைகள் உயிர்ப்புடன் உள்ளன. சுமத்ராதீவில் உள்ள சினபங் மலை என்ற எரிமலை தற்போது கடும் சீற்றத்துடன் காண[...]டுகிறது.

எரிமலை படிப்படியாக உக்கி[...] அடைந்துவரும் நிலையில், எரிம[...]யைச் சுற்றி சுமார் 10 கிலோமீற்[...] தூரத்துக்குள் வசிந்துவந்த மக்[...] வெளியேற்றப்பட்டுள்ளனர்.

பலகிலோமீற்றர் தூரத்துக்கு எரிம[...] சாம்பரைக்கக்கியுள்ளது. வீதிகள், [...] சாலைகள், வீடுகள், அரச அலுவல[...]கள், வாகனங்கள் ஆகியன சாம்பர[...] ஆக்கிரமிக்கப்பட்டுள்ள ஒளிப்ப[...]களை பன்னாட்டு ஊடகமான ரொய[...]டர்ஸ் வெளியிட்டது.





தாய்லாந்தில் சேவல் சண்டைகள் மிகவும் பிரபலம். தலைநகர் பாங்கொக்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சேவல் சண்டைப் பந்தயத்தின் ஒளிப்படமே இது. பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் இந்தப் படத்தை வெளியிட்டுள்ளது. சுமார் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்கள் அளவுக்கு பந்தயம் மேற்கொள்ளப்பட்டது என்றும் அது செய்தி வெளியிட்டது. (ம)

## மோசமான அதிபர் ட்ரம்ப்



அமெரிக்காவின் மிகச் சிறந்த அதிபராக ஆபிரகாம் லிங்கனையும், செயற்பாட்டில் மிகமோசமாக கடைசி இடத்தில் தற்போதைய அதிபரான ட்ரம்பையும் அந்த நாட்டு அரசியல் தலைவர்கள் தெரிவு செய்துள்ளனர்.

அமெரிக்காவின் ஹூஸ்டன் பல்கலைக்கழ பேராசிரியர் பிரண்டன் ரோட்டிங்காஸ், போய்ஸ் ஸ்டேட் பல்கலையின் பேராசிரியர் ஜஸ்டின் வாகன், ஆகியோர் இணைந்து தற்போது பதவியில் இருக்கும் அரசியல் தலைவர்களிடம் இந்தக் கருத்துக்கணிப்பை நடத்தினர். இதன் அடிப்படையில் சிறந்த அதிபராக ஆபிரகாம் லிங்கனும் மோசமான அதிபராக ட்ரம்பும் தெரிவாகினர். (ம)



# சிரியாவில் அரச தரப்பு கோரத் தாண்டவம்

# 48 மணிநேரம் தொடர் தாக்குதல்

# 300 பொதுமக்கள் பரிதாபச்சாவு

# குழந்தைகள் அதிகம் உயிரிழப்பு

டமஸ்கஸ், பெப். 22

சிரியாவில் கிளர்ச்சியாளர்களின் பகுதிக்குள் அரச படைகள் நடத்திய ஆவேச தாக்குதல்களில் கடந்த 48 மணிநேரத்தில் சுமார் 300 பேர் உயிரிழந்தனர். இந்த எண்ணிக்கைமேலும் அதிகரிக்கலாம் என்று லண்டனை தலைமையகமாகக்கொண்டு சிரியாவில் செயற்படும் கண்காணிப்புக்குழு தெரிவித்தது.



சிரிய அதிபர் அசாத் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி தோற்றம்பெற்ற அழுத்தக் குழுக்கள் அரசுக்கு எதிராக ஆயுதக் குழுக்களாக மாற்றம் பெற்று போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றன. அரசதரப்புக்கு ஆதரவாக ரஷ்யா செயற்படுகிறது. கிளர்ச்சிக் குழுவின் பின்னணியில் அமெரிக்கா உள்ளது. கிளர்ச்சியாளர்களின் பகுதிக்குள் கூட்டுப் படையால் தற்போது கடும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிளர்ச்சியாளர்களின் முழுக் கட்டுப்பாட்டில் உள்ள கூத்தா பகுதியில் நேற்றும் நேற்றுமுன்தினமும் கடும் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. சுமார் 300 பொதுமக்கள் இந்தத்தாக்குதல்களில் கொல்லப்பட்டுள்ளனர். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. கடந்த 2013ஆம் ஆண்டுக்குப் பின்னர் இவ்வாறான உக்கிரமான தாக்குதல்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. உயிரிழந்தவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர், அதாவது சுமார் 200 பேர் வரையிலானோர் 10 வயதை அடையாதவர்களாகவே உள்ளனர்.

“சிரியாவில் நடைபெற்றுவரும் கோரத்தாக்குதல்கள் மனித குலத்துக்கு எதிரானது. ஐ.நா. சபை இதை இனியும் பொறுத்துக்கொண்டிருக்காது” என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் குர்தேரஸ் அண்மையில் எச்சரித்திருந்தார்.

“சிரிய அரசு மனித குலத்துக்கு எதிரான ஆயுதங்களைப் பயன்படுத்தி போர்க்குற்றத்தில் ஈடுபட்டுவருகிறது. அந்த நாட்டின் இந்த நடவடிக்கைகள் தொடர்ந்தால் சிரியாவுக்கு எதிராக போர் தொடுக்கப்படும்” என்று வெள்ளை மாளிகை அண்மையில் எச்சரித்திருந்தது. இவ்வாறானதொரு கருத்தையே பிரான்ஸ் அதிபர் மக்ரோனும் அண்மையில் வெளிப்படுத்தியிருந்தார். (ம)

## மலை

டன்காணப்ப

ாக உக்கிரம்
யில். எரிமலை
கிலோமீற்றர்
வந்த மக்கள்
னர்.
துக்குள் எரிமலை
து. வீதிகள், பாட
ரசஅலுவலகங்
யனசாம்பரால்
ள ஒளிப்படங்
கமானரொயிட்
(ம)













தற்போது உங்களது வழக்கமான வட்டிக்கு
மேலாக 60%
மேலதிக வட்டியையும்,
இலவச ஆயுட் காப்புறுதித் திட்டத்தையும்
பெற்று அனுபவியுங்கள்!

மேலதிக விபரங்களுக்கு 0114 711 411 www.nationstrust.com
அல்லது அருகிலுள்ள கிளைக்கு விஜயம் செய்யுங்கள்

நிபந்தனைகளுக்கு உட்பட்டது
நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பி.எல்.சி-PQ118 | பிச் ரேடின் A(lka) | நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வைசெய்யப்படும் ஒரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியாகும்.

Nations Trust Bank
Nations
MaxBonus

ண்டன்
ஸ்டின்
ரசியல்
அடிப்ப
திபராக
(ம)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கவனிக்கிறார்கள், கவனம்

தமிழ்க்கட்சிகள்தமக்குள்பிளவுபட்டதால், சிங்களக் கட்சிகள் தமிழர் தாயகத்தில் ஊடுருவியுள்ளன. சிங்களப்பேரினவாதத்துக்குஎதிராகவும், தமிழ் மக்களின் அரசியல் இருப்புக்காகவும், தமிழ்க் கட்சிகள்பொதுக்கொள்கையின்கீழ்ஒன்றுபட வேண்டும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோவின்செயலருமானந.சிறிகாந்தாஎச்சரிக்கை ஒலியுடன் அழைப்பையும் விடுத்துள்ளார். தமிழர் தாயகத்தின்நிகழ்காலஅரசியல்போக்கைப்பொறுத்த வரையில் அவரின் அழைப்பு சரியானது ; காலத்தின் தேவையானது ; கட்டாயமானதும்கூட.

உள்ளூராட்சித் தேர்தல் கடந்த 10ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது. தேர்தல் முடிவடைந்து சுமார் இரண்டு வாரங்கள்ஓடி மறைகின்றன. ஆனால் ஆட்சியமைப்பது தொடர்பில் இன்றும் நிலையான, உறுதிப்பாடுடைய, கனதியான முடிவுகள் எவையும் எட்டப்படவில்லை. தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பொதுக் கொள்கையின் கீழ் ஒன்றிணைந்து ஆட்சியமைப்பதற்கு அழைப்பு விடுத்துள்ள போதிலும் ஏனைய கட்சிகள் சாதகமான நகர்வுகள் எதனையும் வெளிப்படுத்தவில்லை. 'அற்பனுக்குப் பவுசு வந்தால், அர்த்தராத்திரியில் குடை பிடிப்பான்' என்றொருபழமொழிதமிழில்வழக்கில்உள்ளது. இந்தப் பழமொழி தற்போது இங்குள்ள அரசியல் களநிலவரங்களுக்கு மெத்தவும் பொருந்தவே செய்கிறது. தேர்தல்காலங்களின்போதிருந்தபருவகாலமோதல்களும் பரஸ்பரக் குற்றச்சாட்டுக்களும் தேர்தல் கடந்தும்தற்போதும்அவ்வப்போது தொடரவேசெய்கின்றன. பொதுக் கொள்கைகள் என்ற கோட்பாட்டில் தத்தமதுகட்சிக்கொள்கைகளைப்புகுத்தி இடியப்பச் சிக்கல்நிலைக்குதமிழர்தாயகஅரசியல்நிலவரத்தை கொண்டுசென்று விட்டுள்ளன இந்தக் கட்சிகள். வாக்களித்த மக்களின் தேவைகளை, அபிலாசைகளை, கோரிக்கைகளை விடவும் அதிகாரக் கதிரைகள் அரசியல் பிரதிநிதிகளை தற்போது ஆட்டிப் படைத்துக்கொண்டிருக்கின்றன, கொண்டிருக்கும்.

அதேவேளை, கொழும்பு அரசியல் உச்சக்கட்டக் குழப்பத்தில் உள்ளது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன,தலைமை அமைச்சர்ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான கூட்டு அரசு தொடருமா என்ற சந்தேகம் தற்போது வலுவாகவே எழுந்துள்ளது. அப்படித் தொடர்ந்தாலும் இதுவரைகாலமும் அரசுக்குள் இருந்த இணக்கம் இனிமேலும் இருக்காது, இருக்க வாய்ப்பில்லை. சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக்கட்சி இரண்டும் இணக்கத்துடன் இணைந்து ஆட்சியமைத்தபோதேதமிழர்களின்அபிலாசைகள் தீர்க்கப்படவில்லை. இவ்வாறிருக்க, கொழும்பு அரசியலில் ஏற்பட்டுள்ள இந்த முறுகல் நிலைக்கு மத்தியில் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்ற எண்ணவோட்டத்தை தமிழர் தாயக மக்கள் பலர் கைவிட்டுள்ளனர். சிலர் படிப்படியாக கைவிட ஆரம்பித்துள்ளனர். புதிய அரசமைப்பு உருவாக்கமும் தொங்குநிலையே. இவ்வாறான பின்னணியில் தமிழ்க் கட்சிகள் பொதுக் கொள்கையின் கீழ் இணைந்தாலேயே, எதையும் சாதிக்க முடியாவிட்டாலும், குறைந்த பட்சம் எதிர்ப்பையாவது ஓங்கி, உரத்துப் பதிவுசெய்யலாம்.

வடமாகாண சபையின் ஆயுட்காலம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துடன் முடிவுக்கு வருகிறது. மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் எதிர்வரும் செப்ரெம்பர்மாதமளவில் நடத்தப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின்தலைவர்மகிந்த தேசப்பிரிய அண்மையில் தெரிவித்திருந்தார். எப்படிப்பார்த்தாலும் இந்தவருடத்துக்குள்வடக்கு மாகாணசபைக்குரிய தேர்தலுக்கு அதிக வாய்ப்புக்கள் இருக்கவே செய்கின்றன. உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பின்னர் நடக்கும்அரசியல்நகர்வுகளைமக்கள்உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆக, விரைவில் மற்றொரு தேர்தல். கவனம் ; மிகக்கவனம்.



# தன்னலமற்ற பொதுத் தொண்டை வலியுறுத்தும் உலக சாரணிய இயக்கம்



உலக சாரணிய இயக்கத்தை நிறுவிய சாரணிய தந்தை கில்வெல் பேடன் பவல் பிரபுவின் 161ஆவது பிறந்ததினம் இன்றாகும். அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.

இ.தில்லைவாசன்

கல்வி சார் பாடத்திட்டத்தையும், சாரணிய பயிற்சிகளையும், வாழ்க்கைக்குவேண்டியசகல துறைகளையும்.உள்ளடக்கிய சாரணியத்தை தரணிக்கு உகந்தளித்தசாரணியதந்தையின் 161ஆவது பிறந்த தினத்தை உலகெங்கும்வியாபித்திருக்கும் சாரணர்கள் பெருவிழாவாக கொண்டாடி மகிழ்ந்திருக்கும் இந்த வேளையில் சாரணிய தந்தையின் வாழ்க்கை வரலாற்றைஉலகறியநினைவுகூர்வதுசாரணர்களின் கடமையாகும்.

"என்னால்முடிந்தவரையில், எனதுசமயத்துக்கும், எனது தேசத்துக்கும் எனது கடமைகளைச் செய்வேன் என்றும், எப்போதும் பிறருக்கு உதவி புரிவேன் என்றும், சாரண விதிகளுக்கு அமைந்து பணிந்து நடப்பேன் என்றும் என் மதிப்பின் மீது வாக்குறுதி அளிக்கின்றேன்" என்பது சாரணர்களாகப் பதவி ஏற்கும்போது மேற்கொள்ளும் வாக்குறுதியாகும். சாரணர்கள்தங்கள் தங்கள் மதிப்பின் மீதே வாக்குறுதி அளிக்கின்ற சாரணியத்திற்கே உரித்தான வாக்குறுதியையும், சாரணர்களுக்கான பத்து விதிகளையும் தரணிக்கு உகந்தளித்த சாரணிய தந்தை கில்வெல் இங்கிலாந்திலே லண்டன் மாநகரில் 1857ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி ஆக்ஸ்போட் பேராசிரியர் றொபேட் கிறேஸ் பேடன் பவல் தம்பதியருக்கு ஏழாவது பிள்ளையாகப் பிறந்தார்.

### பேடன் பவலினது இளமைக்கால வாழ்க்கை சுவாரஸ்யம் மிக்கது

இவரது பெற்றோர் இவருக்குச் சூட்டிய பெயர் றொபேட்ஶ்ரீவின்சன்சிமித்பவல்என்பதாகும். இவரது மூன்று வயதில் தந்தையார் காலமாகிவிட, தாயின் பாதுகாப்பில் ஏழு பிள்ளைகளும் வாழ்க்கைச் சிரமங்களுடன் ஆரம்பத்தில் வாழ்ந்தனர். பேடன்பவல் தமது 11ஆவது வயதில் உபகாரச்சம்பளம் பெற்று இங்கிலாந்தின் சாட்டர் ஹவுஸ் கல்லூரியில்மேற்படிப்புக்குச்சேர்ந்தார். கல்லூரிக்குஅருகாமையில்உள்ளகுறுங்காட்டில்மிருகங்களைப்பின் தொடர்ந்து சென்று அவற்றின் வாழ்க்கை முறைகளை அவதானித்து வந்தார். சித்திரங்கள் தீட்டுவதிலும், சங்கீதம்போன்றதுறைகளிலும்மிக்க ஆர்வம் உடையவராக விளங்கினார். இங்கிலாந்தின்பல்வேறுபகுதிகளுக்கும்தனதுநான்குசகோதரர்களுடன் படகுகளில் பிரயாணம் செய்து பாசறை வாசங்கள் வாழ்ந்து தமது வெட்டவெளி வாழ்க்கையை வெகு இன்பமாக கழித்து வந்தார்.

1876ஆம் ஆண்டில், தமது19ஆவதுவயதில்கல்லூரியில் பட்டம் பெற்று வெளியேறிய கையோடு, இராணுவத்தில் சேர்ந்தார். குதிரைப்படை உபதளபதியாக தென்னாபிரிக்கா, இந்தியா, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளுக்கு இராணுவ வீரராகச் சென்று கடமைபுரிந்தார். இந்தியாவில்நடைபெற்ற'கிரிமின்' போரில்சிறந்தசேவையாற்றிபெரும்புகழ்பெற்றார். தமது 26ஆவது வயதில் இராணுவத்தில் தளபதியாகப் பதவி உயர்வு பெற்றார். 1887ஆம் ஆண்டு ஆபிரிக்காவில் சுதேசிகளுக்கு எதிராக இடம்பெற்ற போரில்தமதுநாட்டுக்காகப்பங்கேற்றுசேவையாற்றினார். இவரது சாரணியத் திறமையையும், சுவடு தொடரும் திறமையையும் கண்டு சுதேசிகள் இவருக்கு 'இம்பிசா' என்று பெயரிட்டு அழைத்தனர். இதன் பொருள் 'ஒருபோதும் தூங்காத ஓநாய்' என்பதாகும்.

1899ஆம் ஆண்டில், தமது 42ஆவது வயதில், உபதளகர்த்தர் பதவிக்கு உயர்த்தப்பட்டார். தென்னாபிரிக்காவில்குழப்பங்கள்ஆரம்பித்தன. ஒருகுதிரைப் படையுடன்'மேப்கிங்'நகருக்குச்சென்றார். 1899ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 13ஆம் திகதி முதல் 1900ஆம் ஆண்டுமே18ஆம் திகதிவரை 217 நாள்களாக எதிரிகளால் முற்றுகையி டப்பட்டிருந்த 'மேப்கிங்' நகரைப் பாதுகாத்துக் கொண்டிருந்தார். இவருக்கு உதவிபுரிந்து வந்த படைகளால் மேப்கிங் நகரம் காப்பாற்றப்பட்டதும், தேசமே பெரும் வெற்றிக் கொண்டாட்டத்தை நடத்தியது. மேயர் ஜெனரல் பதவிக்கு சாரணிய தந்தை பதவி உயர்வு பெற்றார்.

### சாரணிய பாசறை வாசத்தை அறிமுகப்படுத்திப் புகழ்பெற்றார்

1901ஆம் ஆண்டில் தமது 44ஆவது வயதில் தென்னாபிரிக்காவில் இருந்து பெரும் வீரனாக தாய்நாடு திரும்பினார். 'சாரணியத்துக்கான துணை" என்னும்நூலைவெளியிட்டார். தான்பெற்றஅனுபவங்களைக் கொண்டு செயற்படத் தொடங்கினார். பல சிறுவர் நூல்களை எல்லாம் படித்தார். சாரணியக் கொள்கையைசிறிதுசிறிதாகஅபிவிருத்திசெய்தார். அவை பயன் அளிக்குமா என்பதை பரிசோதிக்க 1907ஆம் ஆண்டில், தமது 50ஆவது வயதில் இங்கிலாந்துக் கால்வாயில் அமைந்துள்ள பிரவுன்ஸி

தீவிலே இருபது சாரணச் சிறார்களுடன் பாசறை வாசம் நடத்தி முதல் முதலாக உலகுக்கு சாரணிய ஒளியைப் பர்ப்பினார். இந்தப்பாசறைவாசம்சாரணியதந்தைக்கு பெரும் புகழை ஈட்டிக் கொடுத்தது.

தமது 51ஆவதுவயதில்இருவாரங்களுக்கு ஒரு முறை பிரசுரமாகும் விதத்தில் ஆறு பிரசுரங்களாக "இளைஞர் சாரணியம்" என்னும் நூலை வெளியிட்டார். அவற்றுக்கான சித்திரங்களைத் தானே தீட்டினார். தமது 52ஆவது வயதில் இராணுவத்தில் வகித்த பெரும் பதவியை விட்டு விலகி, சாரணியத்துக்கான தமது புது வாழ்க்கையை ஆரம்பித்தார். எதிர்காலச்சந்ததியினரைசாரணியத்தின் மூலம், போர் அற்ற உலகமொன்றைஉருவாக்கஇயலுமெனநம்பிய பேடன் பவல், சாரணியத்தின் ஊடாக உலகம்முழுவதும்தொண்டுபுரியமுன்வந்தார்.

**1912ஆம் ஆண்டில் இலங்கையிலும் சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது**

1910ஆம் ஆண்டில் பெண்கள் சாரணிய பிரிவை ஆரம்பித்தார். சாரணிய தந்தையின்சகோதரிசெல்விஅக்னஸ், முதலாவது பெண்சாரணராகஇணைந்துகொண்டார். அதே ஆண்டில் கடற் சாரணர் பிரிவையும் ஆரம்பித்தார். 1912ஆம் ஆண்டில் தமது 55ஆவது வயதில் ஓவெல் சென்கிளயர் கோம்ஸ் என்ற பெண்மணியைத் திருமணம் செய்துகொண்டார். அதன் பயனாக பிள்ளைகள்பீற்றர், கீதர், பெற்றிபிறந்தனர். பேடன்பவல்சாரணியத்தைஉலகசகோதரத்துவஇயக்கமாகஆக்குவதற்கானஆரம்ப முயற்சியாக உலகச் சுற்றுப் பணத்தை மேற்கொண்டவேளை முதலாவது உலக போர் ஆரம்பித்ததால் அவரது பயணம் தடைப்பட்டது. இந்த ஆண்டில் இலங்கையில் முதல் முதலாக சாரணிய இயக்கம், எவ்.ஜி.ஸ்ரீபனால் மாத்தளை புனித கிறிஸ்துவக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டது. 1912ஆம் ஆண்டில் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட சாரணர் இயக்கம் 1914ஆம் ஆண்டில்பிரித்தானியசாரணர்சங்கத்தின் கிளைச்சங்கமாகஏற்றுக்கொள்ளப்பட்டது.

**யாழ்ப்பாணத்தின் பிரபல கல்லூரிகளில் 1916ஆம் ஆண்டில் சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது**

1916ஆம் ஆண்டு தமது 59 ஆவது வயதில் ஆறரை வயது தொடக்கம் 11 வயதினருக்கான குருளைச் சாரணர் பிரிவை பேடன்பவல்ஆரம்பித்தார். அந்த ஆண்டிலேயே யாழ்ப்பாணத்தில்சாரணிய இயக்கம் 5 கல்லூரிகளில் ஆரம்பிக்கப்பட்டது. அந்த வகையில் இன்று யாழ்ப்பாணம்இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி என்பவை சாரணிய சேவையில் நூற்றாண்டையும் கடந்து ஒளிவீசிக் கொண்டிருகின்றன. இலங்கையில் குருளைச் சாரணர் குழு, காலி றிச்மண்ட் கல்லூரியில் 1916ஆம் ஆண்டிலேதான் ஆரம்பிக்கப்பட்டது.

தமது 61ஆவதுவயதில் 17-24 வயதினருக்கான திரிசாரணர் பிரிவை ஆரம்பித்தார். இலங்கையில்கடற்சாரணியப்பிரிவும்1918ஆம்ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது..

1919ஆம்ஆண்டில் பேடன்பவலின் பெயரில் 'கில்வெல்பாக்' அமைக்கப்பட்டது. முதலாவது உலகப் போர் முடிவுக்குவந்ததும்1920ஆம்ஆண்டில் பேடன் பவலின் 63ஆவது வயதில் உலக சாரணர்கள் எல்லோரும் 'பன்னாட்டுச் சாரணர் சம்மேளனத்துக்காக'லண்டனில் முதல் முதலாக ஒன்று கூடினர். இறுதி நாள் 'ஓகஸ்ட் 6ஆம் திகதி சாரணியத்தின் தந்தை பேடன்பவல்உலகப்பிரதமசாரணன் எனபிரகடனம்செய்யப்பட்டார். அதேஆண்டில் தான் இலங்கையில் கொழும்பில் முதலாவது திரிசாரணர் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

தமது 64ஆவது வயதில் சாரணியத்தின் தந்தையும்துணைவியாரும்அரசமுறைப் பயணமாக இலங்கைக்கு முதல் முதலாக பயணம் மேற்கொண்டனர். அப்பொழுது யாழ்ப்பாணத்து மண்ணிலே சாரணியம் மிக உன்னதமாக வளர்ச்சியடைந்துள்ளமையைக்கேள்வியுற்றுயாழ். மண்ணிலே கால்பதித்து, சாரண ஆணையாளரையும், பயிற்றுநர்களையும், சாரணர்களையும், மக்களையும்சந்தித்துசாரணியம்மென்மேலும் வளர்ச்சியுற பல ஆலோசனைகள் வழங்கியமை உலகசாரணியவரலாற்றில் யாழ்ப்பாணசாரணர்களுக்குக்கிட்டியபெருமையாகக் கொள்ளப்பட்டது. சாரணிய தந்தை பேடன்பவல், கால் பதித்த யாழ்ப்பாணத்து மண்ணிலே 2015ஆம் ஆண்டில் 09ஆவதுதேசியசாரணர்ஜம்போறிஒன்றுகூடலின்போதுபன்னாட்டுச்சாரணர்களின் கால்களும்பதிந்தமையும்யாழ். சாரணர்களின் உலக சாரணிய வரலாற்றுப் பதிவாகும்.


**பிரபு பட்டம் வழங்கி மதிப்புறுத்தப்பட்டார்**

பேடன் பவல்1925ஆம் ஆண்டில் வலது குறைந்தோருக்கானசாரணியபிரிவைஆரம்பித்தார். 1907ஆம்ஆண்டு20சாரணர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட சாரணியம் 1928ஆம் ஆண்டு 20 லட்சம் சாரணர்களை உலகெங்கும் கொண்டு வியாபித்திருப்பதைக் கண்ட 'ஐந்தாம் ஜோர்ஜ் மன்னர்' கில்வெல்பேடன் பவல் பிரபு' என்ற பட்டத்தைச் பேடன் பவலுக்குச் சூட்டிக் கௌரவித்தார். சாரணத் தந்தைக்கு அப்பொழுது வயது 71ஆகும்.

1934ஆம் ஆண்டில் தமது 77 ஆவது வயதில் இரண்டாம் முறையாக தமது துணைவியாருடன் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டார்.


சாரணத்தந்தைபேடன்பவல்தமது80ஆவது வயதில் தமது துணைவியாருடன் தமக்கு மிகவும் பிடித்தமான ஆபிரிக்காவில் மிகவும் இயற்கை அழகு வாய்ந்த கென்னியா மலை அடிவாரத்தில் வாழ்ந்து வந்தார். 84வயதைஆரம்பிக்க45நாள்கள்மீதமிருக்கையில் பேடன் பவல் பிரபு இயற்கையெய்தினார். சாரணத் தந்தை பேடன்பவல் பிரபு மரணமுற்ற போதிலும் அவரால் ஆரம்பிக்கப்பட்ட சாரணியம் இன்றுவரை உலகெங்கும் வியாபித்துப் பல லட்சம் சாரணர்களுடன் வளர்ந்து வருவதற்கு காரணம் பேடன் பவலால்உருவாக்கப்பட்டசாரணியவாக்குறுதிக்குள்ளேயேயும் பத்து விதிகளுக்குள்ளேயும் பொதிந்திருக்கும் பொருள் அடக்கம்தான். உலகுள்ளவரை சாரணியம் நிலைத்திருந்து மக்களை உன்னதவாழ்வு வாழ வைக்கும் என்பதில் ஐயம் இல்லை.

*கட்டுரையாளர்:*
*அரச தலைவர் சாரணன் மற்றும் மாவட்ட உதவிச் சாரண ஆணையாளர்.*





"என்னால் முடிந்த வரையில், எனது சமயத்துக்கும், எனது தேசத்துக்கும் எனது கடமைகளைச் செய்வேன் என்றும், எப்போதும் பிறருக்கு உதவி புரிவேன் என்றும், சாரண விதிகளுக்கு அமைந்து பணிந்து நடப்பேன் என்றும் என் மதிப்பின் மீது வாக்குறுதி அளிக்கின்றேன்" என்பது சாரணர்களாகப் பதவி ஏற்கும்போது மேற் கொள்ளும் வாக்குறுதியாகும்.





## ஆசிரியருக்கான கடிதம்

# ஆபத்து வேளையில் பதற்றமின்றிச் செயற்பட்டால் நற்பயன் கிட்டும்

மனிதர்களின் மனத்துணிவு அல்லது தன்னம்பிக்கை குறித்து எத்தனையோ முன்னுதாரணங்களை நாங்கள் கண்டு கேட்டு அறிந்திருப்போம். அந்த வகையில் கடந்த மாதம் நடைபெற்ற ஒரு சம்பவத்தை, பலரால் வியந்து பாராட்டப்பட்ட ஒரு செயலை- மற்றவர்களும் தற்துணிவு பெற வேண்டும் என்பதற்காக இங்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

சரசாலையைச் சேர்ந்த எனது நண்பர் ஒருவர் அந்தப் பகுதியில் வயல் வேலையில் ஈடுபட்டிருந்த வேளையில் "இரத்தப் புடையன்" வகையைச் சேர்ந்த பாம்பொன்று அவரது காலில் தீண்டியுள்ளது. அவரது காலில் நான்குக்கு மேற்பட்ட பாம்பின் பற்கள் பதிந்துள்ளன. இந்தச்சம்பவம் குறிப்பிட்ட தினத்தன்று முற்பகல் 11மணியளவில் நடைபெற்றிருந்த போதிலும், அப்போது அயலில், வேறு எவரது நடமாட்டமும் இருந்திருக்கவில்லை.


பயம், பதற்றம் சற்று இருந்தபோதிலும், தனது செல்லிடப் பேசி மூலம் எனது நண்பர் விடயத்தைத் தமது மகனுக்கு அறிவித்துள்ளார்.

அவரது மகனும் வேலைக்குச் செல்லும் நிலையில் தெய்வாதீனமாக அன்று அருகாமையில் வேலை செய்த நிலையில் உடனடியாக சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு வந்துள்ளார். அவர்வருவதற்குள்தந்தையார்தனக்குத்தெரிந்தமுதல்உதவியைதனக்குத்தானே செய்து மகன் வந்ததும் மயக்கமடைந்துவிட . உடனடியாக சாவகச்சேரி வைத்தியசாலைக்குஇட்டுச்செல்லப்பட்டுள்ளார். அங்குசிகிச்சைவழங்கப்பட்டுமேலதிகசிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குக்கொண்டுசெல்லப்பட்டார். மூன்றுநாள்கள்மயக்க நிலையில் இருந்துள்ளார். பன்னிரு நாள்கள் சிகிச்சை பெற்றுத் தற்போது நலமுடன் வீடு திரும்பியுள்ளார்.

தான் மீண்டுவந்தது தெய்வத்தின் செயலே என்றும், பாம்பு கடித்ததை உணர்ந்ததன் பிற்பாடு தனக்குத் தானே மேற்கொண்ட அவசர முதலுதவிச் சிகிச்சை குறித்து கூறியபோது பலரும் வியந்து பாராட்டினர். மகன் வரும்வரை சிறிது தூரம் சைக்கிளை உருட்டியபடி நடந்தும்காயத்தை முதலுதவி மூலம் பாதுகாத்தபடிமயக்கமடையும்வரை அரைமணித்தியாலயம் இருந்துள்ளார். சிகிச்சையளித்த வைத்தியர்களும் அவரது துணிச்சலையும் பதற்றமடையாது தமக்குத்தாமே மேற்கொண்ட முதலுதவிச் சிகிச்சைக்காகவும் அவரைப்பாராட்டியுள்ளனர். பொதுவாக "பாம்பென்றாலே படையும் நடுங்கும்" என்பர். பாம்பு தீண்டியதும் பயந்துவிடாது செயற்பட்ட அவரது சாதுரியம் மற்றவர்களுக்கு ஒரு நல்ல முன்னுதாரணம். எந்த ஒரு விடயத்திலும், ஆபத்தான வேளையில், பதற்றமடையாது நம்பிக்கையுடனும், புத்திசாதுரியத்துடனும்செயற்படுவது சிறப்பான பெறுபேற்றைத்தரும்.

நா.துஷாந். வரணி.

# இரு முதன்மை கட்சிகளின் கண்களும் திறந்திடட்டும்



ஆங்கில மூலம் :- ரனெல்.சி.விஜேசிங்க (பட்டயக் கணக்காளர்) (டெய்லி மிரர்)
தமிழில் :- ஆனந்த்

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல், இரண்டு பெரிய கட்சிகளின் அகக் கண்களையும் திறந்து விட்டிருக்கிறது. கொழும்பிலாகட்டும், பிற நகரப் பகுதிகளிலாகட்டும் இந்த இரண்டு பெரிய கட்சிகளுக்கும், தங்களுடைய தொகுதிகளிலும், அங்குள்ள கிராம சபைகளாக இருந்தாலும் சரி, அல்லது நகர சபைகளாக இருந்தாலும் சரி அவைகளில் ஏற்பட்டுள்ள தாக்கங்களை மீள் பரிசீலனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இலங்கையின் நன்மைக்காகவும், நாட்டு மக்களின் குடியுரிமை நிலைக்கவும் இந்த இரண்டு கட்சிகளும் உருக்கப்பட்டு தலைமுதல் கால்வரை புதிய அச்சில் வார்க்கப்பட்டு ஆட்சியைத் தொடர வேண்டும்.

மிகக் குறைந்த அளவிலான அபிவிருத்தி வேலைகளே நடந்திருப்பதுடன், இலங்கை வானூர்தி சேவை போன்ற பெரு வளங்களைப் பொறுத்த வரை இந்த அரசு அவற்றின் நிர்வாகச் சீர்கேடுகளை கவனிக்காமல் விட்டமையைக் குறிப்பிட வேண்டும். பங்குச் சந்தை விவகாரத்தில் கணிசமான அளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளமை பாராட்டப்பட வேண்டியதேயாயினும், இந்த அரசு உள்நாட்டிலே அரசின் ஆட்சிக்காலம் முடியும் முன்னர், செய்யக் கூடிய பல ஆக்க வேலைகளை செய்ய வேண்டியுள்ளது. இந்த இரண்டு பெரிய கட்சிகளும், தங்கள் சொல்லால், சிந்தனையால், செய்கைகளாலும் முழுமூச்சுடன் செயற்பட்டு ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். 2015ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றிபெற இந்த இரண்டு பெரிய கட்சிகளது தலைவர்களும் கடுமையாகப் போராடியமை பாராட்டப்பட வேண்டிய விடயம்.

ஆனால் புதிதாகக் களத்திற்கு தாமரை மொட்டு, மலர்ந்து விடுமோ என்ற நிலை கசப்பான உண்மைதான். சில அற்ப விடயங்களினால், இவர்கள் வேறுபட்டு இந்தப் பிரச்சினையின் உண்மையான நிலையை இந்த இரு தரப்பினரும் விளங்கிக் கொண்டு, அரசை முறைப்படி சிறப்பாக நிர்வகித்துச் செல்வார்கள் என்பதுடன் எல்லாம் நன்றாகவே நடக்கும். நல்லிணக்கத்தை விரும்புகின்ற மக்களின் விருப்பமும் அதுவாகத்தான் உள்ளது.



# இயேசுவே சுமைதாங்கி



*சுமை சுமப்பவர்கள் சுகம் பெறுவார்கள். சுமத்துபவர்கள் சோகத்தைத் தருகிறார்கள். நாம் சுமக்கின்றோமா? சுமத்துகிறோமா? இயேசு ஒரு சுமைதாங்கி "சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லோரும் என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்."*

*(மத்தேயு 11:28)*

கலிலேயாக் கடற்கரைகளிலே, யூதேயா, சமாரியா சமவெளிப்பகுதிகளிலே, ஜெருசலேம் நகர வீதிகளிலே கால் நடையாக நடந்து சென்று ஏழை, எளியோர், பாவிகள், நோயாளிகளின் சுமைகளைத் தாங்கியவர், சுகம் கொடுத்தவர் இயேசு. ஆயனற்ற மந்தைகள் போல் அலைந்து திரிந்த மக்கள், சமூக அச்சுறுத்தல்களுக்குப் பயந்து வீதியில் முகத்தைக் காட்டாதவர்கள் என அனைவரையும் சமூகத்தின் மையத்திற்கு அழைத்து வந்து முகவரி கொடுத்தார். இன்றும் உடல் நோயா? மனவேதனையா? கவலை, கண்ணீர் அச்சமா? அவமானமா? யாரிடம் செல்கின்றோம். மறைநூல் அறிஞரும், பரிசேயரும் சுமத்தற்கரிய பளுவான சுமைகளை மக்களின் தோளில் சுமத்தியது போன்று ஆன்மீகத்தை வணிகமாக்கி, பணம் சம்பபாதிக்கும் போலிச் சபைகளை நாடிச் செல்கின்றோமா? துன்பங்களுக்குத் தீர்வு பில்லி, சூனியம், மந்திரவாதம், குறிகேட்டல் என ஏமாற்றிப் பணம் வசூலிக்கும் மாயைகளிடம் செல்கின்றோமா? எச்சரிக்கையோடு இருப்போம். எல்லா நிலைகளிலும் இவற்றை வெற்றி கொள்ளும் வல்லமை பொருந்திய சுமைதாங்கியான இயேசுவிடம் நம்பிக்கையோடு சரணடைவோம். நலம் பெறுவோம்.




எஸ். யேசுதாஸ், கொழும்புத்துறை



# கடன் சுமை, பாவங்களை போக்கும் நரசிம்மர் விரத வழிபாடு

அறிந்தோ, அறியாமலோ செய்த பாவங்களால் கிடைத்து வரும் தண்டனையில் இருந்து விடுபட லட்சுமி நரசிம்மரை விரதமிருந்து வழிபட வேண்டும். நரசிம்மரை முழுமையாக சரணடைந்து 'ஓம் நமோ நாராயணாய' என்று கூறி வழிபட்டால் தாயுள்ளம் படைத்த அவர் தண்டனையில் இருந்து விடுதலை கிடைக்க செய்வார். அவரது படத்தை பூஜை அறையில் கிழக்குநோக்கி வைக்க வேண்டும். தினமும் குளித்துவிட்டு விரதமிருந்து நரசிம்மபிரபத்தி ஸ்லோகத்தை 3, 12, 28 என பாராயணம் செய்ய வேண்டும்.

'நரசிம்மரே தாய்; நரசிம்மரே தந்தை, சகோதரனும் நரசிம்மரே, தோழனும் நரசிம்மரே, அறிவும் நரசிம்மரே, செல்வமும் நரசிம்மரே, எஜமானனும் நரசிம்மரே. இவ்வுலகத்தில் நரசிம்மரே, அவ்வுலகத்திலும் நரசிம்மரே, எங்கெங்கு செல்கிறாயோ, அங்கெல்லாம் நரசிம்மரே'. நரசிம்மரை காட்டிலும் உயர்ந்தவர் எவரும் இல்லை. அதனால் நரசிம்மரே உம்மை சரணடைகிறேன்.

இந்த சுலோகத்தை சொல்லி லட்சுமி நரசிம்மரின் முன்விளக்கேற்ற வேண்டும். காய்ச்சி ஆறவைத்த பசும்பால் அல்லது பானகத்தை நைவேத்தியம் செய்ய வேண்டும். இந்த பிரசாதத்தை குடும்பத்தினர் அனைவரும் சாப்பிட்டு வர வேண்டும். கைமேல் பலனளிக்கும் சக்தி வாய்ந்த சுலோகம் இது.

இதை முறையாக விரதமிருந்த கடைப்பிடித்தால் 48 நாள்களுக்குள் எண்ணிய செயல் கைகூடும். பின்னர் நரசிம்மர் கோவிலுக்கு சென்று, சுவாமிக்கு நெய் தீபம் ஏற்றி, துளசி மாலை சாத்தி வழிபட வேண்டும். இதனால் கடன் சுமை குறையும். நோய் குணமாகும். திருமணத்தடை அகலும். குழந்தைப் பாக்கியம், வேலை வாய்ப்புக் கிடைக்கும். வேலையில் இடைஞ்சல் அகலும்.

## வரலாற்றில் இன்றைய தினம் 22.02.2018

1942 - பிலிப்பைன்ஸில் ஜப்பானின் வெற்றி தவிர்க்கப்பட முடியாததை அடுத்து அங்கிருந்து பின்வாங்கு மாறு அமெரிக்கப் படைகளுக்கு உத்தரவிட்டார் ரூஸ்வெல்ட்.

1945 - செக்கஸ்லோவாக்கியாவில் கம்யூனிஸ்ட் புரட்சி இடம்பெற்றது.

1986 - பிலிப்பைன்ஸில் 'மக்கள் சக்தி' புரட்சி தொடங்கப்பட்டது.

1993 - யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு முன்னால் மக்கள் திரண்டு பட்டினி நிலையை நீக்கக்கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

2014 - மன்னார் புதைகுழி விசாரணை யில் ஐ.நா. தலையிட வேண்டும் என்று ஆசிய மனித உரிமைகள் ஆணையம் வலியுறுத்தல்.

2015 - பத்மாவதி நதியில் இடம்பெற்ற படகு விபத்தில் 70 பேர் உயிரிழந்தனர்.

2016 - சிரிய அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு நடத்திய தாக்குதலில் சமார் 150 பேர் உயிரிழந்தனர்.

## நாளை

**23.02.2018**

வெள்ளிக்கிழமை

**மாசி 11**

திதி: அட்டமி மு.இ. 10.13
நட்சத்திரம்: கார்த்திகை மு.ப. 10.32 வரை
சுபநேரம்: 06.30–08.00 வரை
ராகுகாலம்: 11.00–12.30 வரை

## வலிகாமம் கிழக்கு பிரதேசசபை கோப்பாய் உப அலுவலகம்

## ஆதனப் பெயர்மாற்ற அறிவித்தல்

வலிகாமம் கிழக்கு பிரதேசசபை கோப்பாய் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 14, டச்சு வீதி, ஆதன இலக்கம் 129 என்ற இலக்கத்தைக் கொண்டதும் கோப்பாய் தெற்கு இறை நிலப்பரப்பு 03 குழி 09.76 ம் கொண்ட கிராம சேவையாளர் பிரிவு : J /259, கல்வியங்காடு, கோப்பாயில் அமைந்துள்ள ஆதனத்தில் உரிமையாளர் பெயர் ஆசைப்பிள்ளை வீரசிங்கம் என எமது ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் காலஞ்சென்ற ஆசைப்பிள்ளை வீரசிங்கம் பெயரில் நிறைவேறிய உறுதி யாழ் குடாநாட்டில் ஏற்பட்ட வன்செயல்களின் போது தொலைந்து விட்டது என்றும் குறித்த விபரங்கள் ஒன்றும் தெரியாத காரணத்தினால் அதன் இணைப்பிரதி ஒன்றை யாழ்ப்பாணம் காணிப் பதிவகத்தில் பெற்றுக்கொள்ள முடியாதென்றும் தங்கள் பிதா வழி முதுசமாக தங்களுக்கு வந்தடைந்தது என்று ஆசைப்பிள்ளை வீரசிங்கத்தின் பிள்ளைகளான வீரசிங்கம் தேவராசா, வீரசிங்கம் இராசசிங்கம், வீரசிங்கம் சிவசிங்கம் ஆகிய 3 பேரும் வீரசிங்கம் குணசிங்கம் எனும் சகோதரனுக்கு நன்கொடை வழங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணம் 3ஆம் கட்டை ஆறுமுகம் லேன் வீரசிங்கம் தேவராசாவும், யாழ்ப்பாணம் கோப்பாய் தெற்கு டச்சு றோட்டு, தற்போது சுவிற்சிலாந்தில் வசிக்கும் வீரசிங்கம் இராஜசிங்கமும்(தத்துவக்காரர் வீரசிங்கம் தேவராசா மூலம்) வீரசிங்கம் சிவசிங்கம் ஆகியோர் தங்கள் சகோதரன் கோப்பாய் தெற்கு டச்சு றோட்டு 129ஆம் இலக்கத்தில் வசிக்கும் வீரசிங்கம் குணசிங்கத்திற்கு பிரசித்த நொத்தாரிசு கனகரத்தினம் கேசவன் அவர்களால் எழுதப்பட்ட 15410 இலக்க 2016.09.12ஆந் திகதிய நன்கொடை உறுதி மூலம் இவ் ஆதனத்தை இல 01, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வீரசிங்கம் குணசிங்கம் என்பவர் கோப்பாய் தெற்கு இறை "ஆட்டுப் பட்டி" நிலப்பரப்பு 03 குழி 09.76 ம் உரிமை கோருகின்றார்.

மேற்படி "ஆட்டுப்பட்டி" நிலப்பரப்பு 03 குழி 09.76க் எல்லைகள்

கிழக்கு :-இராஜசேகரம் மகள் லைலாராணியின் ஆதனம்,

வடக்கு :-பொன்னையா கந்தசாமிக்கும், நாகேந்திரம் உமாபதிக்குமுரிய ஆதனங்கள்,

மேற்கு :-றோட்டு (ஜி.பி.எஸ்.றோட்டு),


தெற்கு :-நாகலிங்கம் கணேசலிங்கத்திற்கும், தணிகைநாதன் பெண் சாரதாமணிக்கும், வீரசிங்கம் தேவராசாவுக்கும் உரிய ஆதனங்கள். அவ் ஆதனத்தில் இருக்கும் கிணற்றிலும், துலாதுார்வையிலும் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்பு உரித்தும் வீடும் பயிர் வகைகளும் உள்ளதென்று 29.08.2016ஆந் திகதி உத்தரவுபெற்ற உலாந்தா திரு.ரி.பாலசுப்பிரமணியம் அவர்களால் அளந்து வரையப்பட்ட 302 ஆம் இலக்க படத்தில் துண்டு 1இல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேற்குறித்த ஆதனத்தை வீரசிங்கம் குணசிங்கம் என்ற பெயருக்கு ஆதனப் பதிவேட்டில் பதிவது தொடர்பாக ஆட்சேபனைகள் தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 2018.03.22 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது வீரசிங்கம் குணசிங்கம் என்றபெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எவ்விதமான பிரச்சனைகளையும் வலிகாமம் கிழக்கு பிரதேசசபை பொறுப்பேற்காது என்பதை அறியத்தருகின்றேன்.

யு.ஜெலீபன்
செயலாளர்.
வலிகிழக்கு பிரதேசசபை, புத்தூர்.
2018.02.22.

(IN/5957)(10)

## மரண அறிவித்தல்



பிறப்பு 27 . 03 . 1954

இறப்பு 19 . 02 . 2018

## ஆறுமுகம் கனகலிங்கம்

**(உரிமையாளர் - ஆதிவிநாயகர் ஸ்ரோர்ஸ், வவுனியா)**

குண்டங்கரை, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும், 24/2 கதிரேசு வீதி, வைரவப்புளியங்குளம், வவுனியாவை நிரந்தர வதிவிடமாகவும், 8A(2/2) 57 ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட வவுனியா பிரபல தொழிலதிபர் ஆறுமுகம் கனகலிங்கம் (உரிமையாளர் - ஆதிவிநாயகர் ஸ்ரோர்ஸ், வவுனியா) 19.02.2018 திங்கட் கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கம்பளை நடராசா - அன்னம்மா தம்பதிகளின் (நடராசா & சன்ஸ்) அன்பு மருமகனும், சிவதேவியின் பாசமிகு கணவரும், தர்சனா (ஆசிரியர் - பூவரசங்குளம் மகாவித்தியாலயம் - வவுனியா), சிவசங்கர் (பொறியியலாளர் - Project Manager - Intec), உமாசங்கர் (பொறியியலாளர் - Link Engineering) ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr. ஜங்கரன் (தேசிய வைத்தியசாலை - கொழும்பு), பிரசன்யா (Simcentric - Technologies - Project Manager) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிஷன், அக் ஷரா ஆகியோரின் அன்புப் பேரனும், சிவபாதசுந்தரலிங்கம், சிவபூதிமலர் ஆகியோரின் அன்பு சகோதரரும், சந்திராவதி, காலஞ்சென்ற இளந்தளைசிங்கம் சரோஜினிதேவி, சாரதாதேவி, விவேகானந்தன், சாந்தினிதேவி, லோகேஸ்வரி, காலஞ்சென்ற தர்மதேவன், இந்திராதேவி, இந்திரேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற வேலாயுதம், ஞானேஸ்வரி மற்றும் கருணானந்தராஜா நாகரஞ்சனி ஆகியோரின் அன்பு சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.02.2018) வியாழக்கிழமை காலை 7 மணியளவில் அவரது வவுனியா இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தட்சணாங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(ACO/..)(11.17)

**தகவல்: குடும்பத்தினர்.**

**சங்கர் - 077 828 0934, உமா - 077 879 7943**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



பிறப்பு 17.05.1944 இறப்பு 23.01.2018

**அமரர் செல்லையா தனபாலசிங்கம்**

கடந்த (23.01.2018) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியையில் கலந்து அனுதாபம் தெரிவித்தோருக்கும் தொலைபேசியினூடாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் கண்ணீர்அஞ்சலிப் பதாகைகள் மூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் அன்னாரின் அந்தியேட்டி வீட்டுக்கிரியைகள் இன்று (22.02.2018) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

அரசடிமுனிகோயில் வீதி,
இருபாலை கிழக்கு, கோப்பாய்.

குடும்பத்தினர்.
077 615 4209, 077 982 1000

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 23.01.2018 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்ப குலவிளக்கு
அமரர் திருமதி

## இராஜேஸ்வரி கோபாலன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 20.02.2018 செவ்வாய் கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் நடைபெற்றன. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (22.02.2018) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும். தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இல. 119, கனகசபை வீதி,**
**மானிப்பாய்.** (cs 14103)(13.17)

**குடும்பத்தினர்.**
**077 361 7500**

## மரண அறிவித்தல்

## தம்பிராசா தவராசா

(இளைப்பாறிய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர், தீவகவலயம்)



புங்குடுதீவு 5 ஆம் வட்டாரத்தை பிறப்பிட மாகவும் புங்குடு தீவு 6 ஆம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கலாசாலை வீதி, திருநெல்வேலியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா தவராசா நேற்று (21.02.2018) புதன் கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா காமாட்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் மீனலோசினியின் அன்புக் கணவரும் சகிலா, கார்த்திகா, ஜெயகாந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரதீபன், கஜேந்திரன், காயத்திரி ஆகியோரின் அருமை மாமனாரும் யோகேஸ்வரி, சங்கரராசா, நகுலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சர்வலோசனி காலஞ்சென்ற தேவதாசன் மற்றும் குகதாசன், கோகிலதாசன், குமாரதாசன், தியாகராசா காலஞ்சென்ற சவுந்தராதேவி மற்றும் துரைசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**கலாசாலை வீதி, 4 ஆம் ஒழுங்கை.**
**திருநெல்வலி , யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
(CS 14117.16.17)

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
021 493 1111
advt@uthayan.com,


ES Printers
பனர் பிரிண்ட் (Banner), 35/=
மக் பிரிண்ட் (MUG) 450/=
சகல நிறுவனங்களுக்குமான பட்டியல் புத்தகங்கள் (Bill Book) காபன் பிரதி மற்றும் காபன் பிரதி அற்ற, வர்ண மற்றும் கறுப்பு வெள்ளை நிறத்தில், விரும்பிய அளவுகளில் குறித்த நேரத்தில் குறைந்த விலையில் தரமாக செய்துதரப்படும்.
அனைத்தும் தனித்துவமான கணினி வடிவமைப்புடன்
Flyers
DESIGNE
Scanning
Posters
Business cards
Booklet
Binding
மணியம் கபே
Maniyam Cafe
Special Promotions
Premier
Bill Book
Premier express
பனர் பிரிண்ட் (Banner), வியாபார மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கான பெயர் பலகைகள் (Name Board), மக் பிரிண்ட், ரீ-சேட், புத்தகங்கள், கையேடு (Handbills), நோட்டிஸ் (Notice) மற்றும் அனைத்து ஓவ்செற், டிஜிற்றல் அச்சக வேலைகள்
# 357, Kasthuriyar Road, Jaffna.
கிளை அலுவலகம்:-
New Market, 1st Floor, Chavakachcheri
021 492 7471 / 021 492 7472
esprintersjaffna@gmail.com
021 492 7432

# 2.0 திரைக்கு வருவதில் தாமதம்




முன்னணி நடிகர் ரஜினிகாந் நடிப்பில் உருவாகியுள்ள 2.0 படம் திரைக்கு வருவது மேலும் தாமதமாகலாம் என்றுதெரியவருகிறது. படப்பிடிப்புப்பணிகள்ஏற்கனவே முடிவடைந்துவிட்டன. டப்பிங்பணிகளும்தற்போதுநிறைவுக்குவந்துள்ளன. கடந்தவருடம்தீபாவளிக்கேபடத்தை திரையிடத் திட்டமிட்டனர். தொழில்நுட்பப் பணிகள் தாமதமானதால் ஜனவரி மாதத்துக்குப் பிற்போட்டனர். பின்னர் ஏப்ரல் 27ஆம் திகதி படம் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டது. காலா படமும் குறித்த காலப்பகுதியில் வெளியாவதால் 2.0 படத்தை ஒகஸ்ட் மாதம் 15ஆம் திகதி அல்லது தீபாவளிக்கு திரையிட திட்டமிட்டுள்ளதாக தற்போது படக்குழு அறிவித்துள்ளது.

சிலரோடு ஒப்பிடும் போது
தோல்வியடைந்திருக்கிறாய்
சிலரோடு ஒப்பிடும் போது
வெற்றிய்டைந்திருக்கிறாய்
எவரோடும் ஒப்பிடாத போது
மகிழ்ச்சியடைந்திருக்கிறாய்

இதுவே நிதர்சனமான
உண்மை.

இந்த ஒப்பிடுதல் என்பது
தீராத ஒரு புற்று நோய்.
அது எமது உள்ளத்தில்
உள்ளிருந்து வளர்ந்து
உயிர் கெடுக்கும்



**மாசத்துக்கு ஒரு தரம் தான்**
**சம்பளம் வருது....**



**ஆனா ஆசைகள் மட்டும் முப்பது**
**நாளைக்கு 300 விதமா வருது...**

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** பேச்சு, செயலில் விவேகம் நிறைந்திருக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். சேமிக்க வாய்ப்புண்டு.

**இடபம்:** குடும்ப சிரமம் பிறரிடம் சொல்ல வேண்டாம். கஷ்டமான சூழல் மெல்ல மெல்ல சரியாகும். தொழில் வியாபாரத்தில் அனுகூலம் பாதுகாக்க வேண்டும்.

**மிதுனம்:** உங்களிடம் உதவி பெற்றவர் நன்றி பாராட்டுவார். தொழில், வியாபாரம் செழிக்க விடாமுயற்சியுடன் பணி புரிவீர்கள். உபரி வருமானம் கிடைக்கும்.

**கடகம்:** நல்லோரின் நட்பு எளிதாக கிடைக்கும். புதிய வளர்ச்சி திட்டம் குறித்து பேசுவீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி குறையும். ஆதாயம் அதிகரிக்கும்.

**சிங்கம்:** உங்களை சிலர் குறை சொல்ல காத்திருப்பர். செயல்களில் சுறுசுறுப்பு பின்பற்றுவது அவசியம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும்.

**கன்னி:** உங்கள் செயல்களில் கவனச் சிதறல் ஏற்படலாம். மனைவியின் ஆலோசனை நன்மைக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாரான அளவில் இருக்கும்.

**துலாம்:** மனதில் தைரியம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். இலாபம் படிப்படியாக உயரும். கடனில் ஒருபகுதி செலுத்துவீர்கள்.

**விருச்சிகம்:** எந்த செயலையும் சவாலாக அணுகுவீர்கள். கடந்த காலத்தில் திகைப்பு தந்த பணி, எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை திருப்திகரமாகும்.

**தனுசு:** சிலர் பொறாமை குணத்தால் பரிகாசம் செய்வர். அளவுடன் பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பணி நிறைவேற தாமதமாகலாம்.

**மகரம்:** இடையூறு செய்பவரை அறிந்து விலகுவீர்கள். சொந்தப் பணியில் மட்டும் ஈடுபடுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் மறைமுகப் போட்டி இருக்கும். சராசரி பணவரவு கிடைக்கும்.

**கும்பம்:** பேச்சில் அன்பும், பண்பும் மிகுந்திருக்கும். நண்பர், உறவினர் உங்களை மதிப்புடன் நடத்துவர். தொழில், வியாபாரம் செழிக்க முழு முயற்சியுடன் பணிபுரிவீர்கள்.

**மீனம்:** பணிகளில் திடீர் சிரமம் உருவாகலாம் கவனம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். இலாபம் சுமாராக இருக்கும். சீரான ஓய்வு ஆரோக்கியம் தரும்.

## twitter

### கோழியின் கிறுக்கல்!!

எல்லா
பிரச்சினைகளுக்கும்
இரண்டு தீர்வு தான்!!

ஒன்று பிரச்சினை
தீர்ந்திடும், அல்லது
பழகிடும்.

### நவீனா @latha_

எழுத்தின் ஆளுமை
உபயோகிக்கப்படுவதில்
இல்லை....
உணரப்படுவதில்....

## உணவை வீணாக்காதீர்கள்

சாப்பிட்டுக்கொண்டு இருக்கும்போது அழுகுரல் ஒன்று கேட்டது... உற்று கவனித்தேன். தட்டுக்கு வெளியே இரண்டு சோற்றுப் பருக்கைகள் வீழ்ந்து கிடந்தன. அவைதாம் அழுது கொண்டிருந் தன.

"எதுக்கு இப்படி அழுறீங்க" என்று கேட்டேன்.

அதில் ஒன்று கண்ணீரோடு தன் கதையைச் சொன்னது.

"ஒரு ஏழை விவசாயி... கடனை வாங்கி விதை நெல் போட்டு, வயலை உழுது, நாற்று நட்டு, களை பறித்து, பயிர் செய்து, நீர் பாய்ச்சி மிகவும் கஷ்டப்பட்டு எங்களை வளர வைத்தார். நாங்களும் நன்றாக வளர்ந்தோம்.

என்னுடைய சகோதர மணிகளில் சிலரை எலிகள் நாசம் செய்தன. பறவைகள் கொத்தித் தின்றன. தப்பிப் பிழைத்த நாங்கள் அறுவடைக்குத் தயாரானோம். அறுத்து, களத்துக்கு கொண்டுவந்து, தூற்றி அதிலும் வீணாகிப்போன சகோதரமணிகள் தவிர்த்து பெரிய பெரிய பைகளில் எங்களை அடைத்து வைத்தார்கள். பின்பு நெல் மணிகளிலிருந்து உமி நீக்கி எங்களை அரிசியாக்கும்போ து காணாமல் போன சகோதரமணிகள் நிறைய பேர்.

விற்பனைக்குகடையில்வைத்திருக்கும்போதுமூட்டைகளில்விழுந்தஓட்டைகளில்சிலரும்.... எடைபோட்ட போது கொஞ்சம் பேரும் வீட்டுக்கு நீங்கள் வாங்கிவந்தபோது, அரிசி களைந்து சமைக்கும்போதுஎன்றுஎல்லாவற்றிலும்தப்பிப்பிழைத்துஉங்களுக்குஉணவாகிஉங்கள் தட்டிற்கு வந்து சேர்ந்தேன்.

இத்தனைபேர் உழைப்பில் விளைந்த என்னை.... பல இடர்ப்பாடுகளை கடந்துவந்த என்னை.... இப்படி வீணாக்கினால் அழாமல் என்ன செய்ய?"என்றது. இனிமேலாவது உழவையும் உழவரின் பெருமையும் போற்றி மதிப்போம்.



## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | 9 | 5 | | | 7 | |
| | | | 8 | | | | | |
| | 3 | | 6 | | | 8 | 4 | 5 |
| | | 5 | | | | 2 | 6 | 8 |
| | | | | | | | | |
| 8 | 2 | 1 | | | | 4 | | |
| 4 | 9 | 7 | | | 6 | | 5 | |
| | | | | | 7 | | | |
| | 5 | | | 1 | 9 | | | 6 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 6 | 3 | 7 | 1 | 4 | 9 | 2 | 5 |
| 4 | 1 | 5 | 6 | 9 | 2 | 8 | 3 | 7 |
| 9 | 2 | 7 | 8 | 3 | 5 | 6 | 4 | 1 |
| 5 | 8 | 9 | 1 | 4 | 6 | 3 | 7 | 2 |
| 2 | 4 | 6 | 3 | 5 | 7 | 1 | 8 | 9 |
| 7 | 3 | 1 | 9 | 2 | 8 | 5 | 6 | 4 |
| 1 | 9 | 8 | 2 | 7 | 3 | 4 | 5 | 6 |
| 6 | 5 | 2 | 4 | 8 | 1 | 7 | 9 | 3 |
| 3 | 7 | 4 | 5 | 6 | 9 | 2 | 1 | 8 |

நேற்றைய விடை

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளை யும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கி றார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை.



# ஏமாறிய முதலை

நரிக்கும் முதலைக்கும் பகை ஏற்பட்டிருந்தது. அதனால் நரியைப் பழி வாங்க சமயம் பார்த்துக் காத்திருந்தது முதலை. "நரி எப்படியும் தண்ணீர் குடிக்க ஆற்றுக்கு வரத்தானே வேண்டும். அப்போது நரியைப் பிடித்துக்கொள்ளலாம் என தினமும் கரையோர நீருக்குள் பதுங்கியிருக்கும். நரி மிகக் கவனமாக வந்து சுற்றும் முற்றும் பார்த்து விட்டு தண்ணீர் குடித்து விட்டுப்போகும். நாள்கள் பல கடந்தும் முதலையால் நரியைப் பிடிக்கவே முடியவில்லை.

ஒருநாள் மரத்தின் ஓரமாக பதுங்கிக்கிடந்தது முதலை. நரியோ முதலையைக் கவனிக்கவில்லை. அந்த மரத்தில் அருகில் வந்து நின்று தண்ணீர் குடித்தது. குபீரெனப் பாய்ந்த முதலை நரியின் காலைக் கல்விக் கொண்டது. நரிக்கு ஆபத்து புரிந்தது. இருப்பினும் சமாளித்துக்கொண்டு பெரிதாகச் சிரித்தது. "முதலையே! உன்னை நினைத்தால் எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. என் கால் என்று நினைத்து மரத்தின் வேரைக் கவ்விக்கொண்டிருக்கிறாயே"என்றது. முதலைக்குச் சந்தேகம் வந்தது. நரியின் காலை விட்டுவிட நரி அங்கிருந்து ஓடியது.

முதலைக்கு பெரிய ஏமாற்றமாகப் போய்விட்டது. முகம் வாடியபடி அமர்ந்திருந்தது. அப்போது நீருக்குள் இருந்த நண்டு ஒன்று அதனருகில் வந்தது. "முதலையே! ஏன் கவலையுடன் இருக்கிறாய்?"என்று கேட்டது. முதலைதன் கவலை பற்றிக் கூறியது. "நண்டே! நான் எப்படியும் அந்த நரியைப் பழி வாங்க வேண்டும்?" என்றது. நண்டு கூறியது "முதலையே! நீ செத்தது போலப்படுத்துக் கொள். நான் நரியை ஏமாற்றி அழைத்து வருகிறேன்"என்று சொல்லி விட்டுச் சென்றது. நண்டு நரியைச் சந்தித்தது. "நரியே! உனக்கு விஷயம் தெரியுமா? உன் விரோதியான முதலை இறந்துவிட்டது"என்றது. நரியும் நண்டும் ஆற்றங்கரைக்கு வந்தன. முதலைசெத்தது போலக் கிடந்தது. நரிக்குச் சந்தேகம் வந்தது. "நண்டே முதலை சாகவில்லை செத்தது போல நடிக்கிறது என்று நினைக்கிறேன்" என்றது. நண்டு மறுத்தது.

"நரியே! முதலை இறந்து இரண்டு நாள்களாகி விட்டன. எனக்கு நன்றாகத் தெரியும் என்றது. நரி கூறியது "நண்டே! உனக்குத் தெரியாது! முதலை இறந்து போயிருந்தால் வால் ஆடுமே! இப்போது வால் ஆடவில்லையே"என்றது.

முதலை நரி கூறியதைக்கேட்டு குழம்பிப்போனது. "ஒருவேளை இறந்து போனால் வாலை ஆட்ட வேண்டுமோ?"என நினைத்தது.

தன்வாலை விரைந்து ஆட்டவும் செய்தது. "அம்மாடி தப்பித்தேன்!"என்றபடி அங்கிருந்து ஓட்டம்பிடித்தது.

முதலை மீண்டும் ஏமாந்துபோனது.



புள்ளிகளை இணைத்து படத்தை முழுமை செய்வோம்



# சாதனை

இரண்டு கைகளையும் இழந்த போதும் தன்னம்பிக்கையோடு கால்கள்ால் வானூர்தியைச் செலுத்தி கின்னஸ் சாதனை படைத்துள்ளார். அமெரிக்காவைச் சேர்ந்த பெண் ஒருவர். தன்னம்பிக்கை இருக்கும்போது கை இல்லாதது பெரிய குறையில்லை என அவர் சாதித்து வாழ்ந்து வருகிறார். அமெரிக்காவின் அரிசோனா மாகாணத்தைச் சேர்ந்த ஜெசிகா காக்ஸ் தனது 32 வயதிலே இந்த சாதனையைப் படைத்துள்ளார். பிறவியிலேயே இரு கைகளும் இல்லாமல் பிறந்த இவர் வளர வளர தன்குறையை நிறைவாக்கிக்கொண்டார் ஊனம் என்பது சாதனைக்குத் தடையல்ல; மாறாக அது உந்துசக்தி.

# எழுத்தாற்றலும் மாணவர்களும்



ஒருவர் தனது அனுபவங்களைப் பற்றி எழுதுவதானது அவரது உடல் உள ஆரோக்கியத்தை மேம்படுத்தக் கூடியதாக இருப்பதரக ஆராய்ச்சிகள் கூறுகின்றன. நாங்கள் ஒவ்வொருவரும் எங்களது வாழ்க்கையை எழுத்துக்களால் விமர்சிக்க முற்படும்போது இந்த உலகம் பற்றிய எங்களது பார்வை மாற்றம் அடைகிறது. ஏனெனில் எங்களது சொந்த அபிப்பிராயங்கள் முழுமையாக சரி யானவை அல்ல. மனம் பற்றிய கதையை நாம் எழுதும்போது என்னிடமுள்ள பலவீனங்களை நாம் இனம் கண்டு கொள்ள முடியும். எனவே அவற்றைத் திருத்தி எடுக்க நாம் எடுக்கும் முயற்சி எம்மை ஆரோக்கியமான வாழ்க்கைக்கு இட்டுச் செல்லும்.

பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் பாடங்களில் பின்தங்கிய நிலையில் இருக்கலாம். அல்லது பாடசாலை எவரையும் பிடிக்காதிருக்கலாம். அந்த நிலையில் ஓர் அமைதியான இடத்தில் இருந்து உங்கள் கடந்தகால வாழ்க்கையை ஒரு கதையாக எழுதுங்கள். உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட சந்தோஷமான, துக்ககரமான, மறக்க முடியாத நிகழ்வுகள் மனதைப் பாதித்தவை, சந்தித்த வித்தியாசமான மனிதர்கள் அவர்களிடமிருந்து நீங்கள் கற்றுக்கொண்டவை போன்றவற்றை ஞாபகப்படுத்தி ஒரு கதையாக எழுதுங்கள். அப்போது நீங்கள் உங்களது உண்மை நிலையைப் புரிந்து கொள்வீர்கள். உங்கள் வாழ்க்கையை எப்படி மாற்றியமைக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க நாமே சிறந்தவர்கள் என்பதைப் புரிந்துகொள்வீர்கள்.

நாள்குறிப்பு எழுதுவதைப் பழக்கப்படுத்திக்கொள்ளுங்கள். ஒவ்வொருநாளும் எழுதுவதானது உங்களைச் சிறந்த எழுத்தாளன் ஆக்காது. ஒருசிறந்த மனிதனாக்கும். மனதில் என்னவெல்லாம் ஓடிக்கொண்டிருக்கிறதோ அவை எல்லாவற்றையும் கொட்டி எழுதவேண்டும். இது உங்கள் மனதைச் சுத்தப்படுத்தி உங்களைப் புதிய ஆளாக மாற்றி உங்கள் அன்றாட அலுவல்களை நிறைவாகச் செய்ய உதவிசெய்யும். மாணவர்கள் படிக்கிறோமென்று சொல்லிக் கொண்டு நாள் முழுவதும் ரியூசன் என்று திரிவதால் எழுதுவதற்கு நேரம் இல்லை என்று கூறு வர்கள். நேரம் இல்லை என்பதானது விருப்பம் இல்லை என்று சொல்வது போன்றதுதான். ஒருவர் தன்னைப் பற்றி எழுத விளைகின்றபோது, தனக்கு உண்மையாக நடக்க முற்படுகின்றார். இது நாளடைவில் அவரது நடத்தையை மாற்ற முயற்சிக்கும். எனவே மாணவர்களாகிய நீங்கள் மாணவப் பருவத்திலேயே நாள் குறிப்பேடு எழுதுவதை பழக்கமாக்கிக்கொள்ளுங்கள். எழுத்தாற்றல் என்கிற சக்தி உங்கள் நடத்தையைச் சரிப்படுத்தி வெற்றிகரமான வாழ்க்கையை நோக்கி உங்களை வழிநடத்திச் செல்லும்.



# பச்சை நிறக் கிளியே

பச்சை நிறக்கிளியே வாவாவா
பாலும் சோறும் நான் தருவேன் வாவாவா
அச்சமின்றி என்னுடனே வாவாவா
அனுதினமும் பழம் தருவேன் வாவாவா

கொவ்வைப் பழம் போன்ற அழகுச் சொண்டால்
கொத்தித் தின்னவே நிறைந்த தானியம் தருவேன்
அவ்வைப் பாட்டி பாடல்களும் சொல்லித் தருவேன்
அழகான நம் தமிழில் பாட்டுப் பாடலாம்

சோலை எங்கும் நீ பறந்து அலைந்திட வேண்டாம்
சோர்ந்து பசியாற்ற கவலை கொண்டிட வேண்டாம்
காலை மாலை கடவுள் நாமம் என்றும் சொல்லுவாய்
காத்திடுவாய் எம்மை என்று நம்பித்துதிப்பாய்

## பயணியின்...

கொழும்பு, பெப். 22

பண்டாரவளை கஹகொல்ல பகுதியில் பேருந்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு தொடர்பாக இராணுவத் தளபதியுடன் நான் பேச்சு நடத்தினேன். பேருந்தில் பயணித்த பயணி ஒருவரின் பயணப் பொதியில் இருந்த கிரனைட் குண்டே வெடித்துள்ளது. இது தொடர்பான விசாரணைகளை இராணுவம் முன்னெடுத்து வருகின்றது. இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை சிறப்புக் கூற்றொன்றை முன்வைத்து பண்டாரவளை குண்டு வெடிப்பு தொடர்பாக மகிந்த அணி நாடாளுமன்றக் குழுத் தலைவர் தினேஸ் குணவர்தன எழுப்பிய கேள்விக்கு பதிலளித்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"பண்டாரவளையில் இருந்துதியத்தலாவைக்கு சென்ற பேருந்தில் குண்டு வெடித்துள்ளது. தமிழ், முஸ்லிம், சிங்களவர்களும் இருந்துள்ளனர். இராணுவ மற்றும் வான் படையினரும் இதில் இருந்துள்ளனர். இது பாரதூரமான விடயமாகும். இந்தச் சம்பவம் தொடர்பில் பல்வேறு தகவல்கள் மக்கள் மத்தியில் சென்ற வண்ணம் உள்ளன. மக்கள் அச்சமடைந்துள்ளனர். இது தொடர்பில் சிறப்புக் கூற்றொன்றை சபை முதல்வர் அரசுக்கு வெளியிட வெளியிட வேண்டும்" என்று தினேஸ் குணவர்தன கூறினார்.

அவரின் கேள்வியை செவிமடுத்து வெளியே இருந்து ஓடி வந்து தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பதிலளித்தார்.

"பண்டாரவளையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில்நான் உடனே சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்கவிடம் வினவினேன். இதன்படி தற்போது குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை இராணுவம் முன்னெடுத்து வருகின்றது.

இராணுவத் தளபதியுடன நான் பேசினேன். யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த பயணி ஒருவரின் பயணப் பொதியில் இருந்த கிரனைட் (கைக்குண்டு) வெடித்ததாகவே இராணுவ தளபதி சேனாநாயக்க என்னிடம் கூறினார். விசாரண்கள் நிறைவடைந்த பின்னரே காரணத்தைக் கூற முடியும்" என்று ரணில் தெரிவித்தார்.

"இந்தச் சம்பவம் தொடர்பாக அரசு என்ற வகையில் கவலையடைகின்றோம். இது தொடர்பில் முழுமையான விசாரணையொன்று நடத்தப்பட்டு வருகின்றது. விசாரணை நடவடிக்கை நிறைவடைந்த பின்னரே நடந்தது என்ன என்பது தொடர்பில்கூறமுடியும்"என்று சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல குறிப்பிட்டார். (ற-5,31)

## பயங்கரவாத....

கொழும்பு, பெப். 22

கஹாகொட பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவம் பயங்கரவாத நடவடிக்கை அல்ல. இது தொடர்பில் பொலிஸாரும் இராணுவத்தினரும் விசாரணை நடத்தி வருகின்றனர் என்று இராணுவப் பேச்சளார் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

பொலிஸாரும் இராணுவத்தினரும் விசாரணை நடத்துகின்றனர். ஆனால் இது பயங்கரவாத நடவடிக்கை அல்ல என்பதை உறுதிப்படுத்துகின்றோம்.

பயங்கரவாத நடவடிக்கை என்பதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை. மக்கள் அச்சப்படக்கூடாது என்பதற்காக பயங்கரவாத நடவடிக்கை அல்ல என்பதை உறுதிப்படுத்துகின்றோம் -என்றார். (ற-5,61)



DLB
CAR PLUS
சீட்டிழுப்பு வாரம் 46
சீட்டிழுப்பு திகதி 21.02.2018
வெற்றி இலக்கங்கள்
04 30 49 H வியாழன்
01 15
44, 51, 320/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்:2998 திகதி:21.02.2018
புதன்கிழமை
ஊதா
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 15 21 40 49 Z
போனஸ் இலக்கம்: 35
அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்: 30,403,280/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது நுரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 175
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2018.02.21
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 51,610,755/-
வெற்றி இலக்கங்கள்
13 61 66 73 Z
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது நுரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சந்திரவதனி விஜயகுமார்



பிறப்பு 26.06.1962 இறப்பு 19.02.2018

யாழ். அரியாலையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் ஐ வதிவிடமாகவும் கொண்ட திருமதி சந்திரவதனி விஜயகுமார் கடந்த (19.02.2018) திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை சிவானந்தம் தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு பூரணம் தம்பதிகளின் அன்பு மருமகளும் விஜயகுமார் அவர்களின் அன்பு மனைவியும் யுவித்தா (விஜி) அவர்களின் அருமைத் தாயாரும் கலைச்செல்வி (கனடா), பத்மாசனி (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சவுந்தர்ராஜா, ரவீந்திரன் காலஞ்சென்ற சிவசுந்தரலிங்கம், பாலகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.02.2018) வெள்ளிக்கிழமை பிரான்சில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

37. இலந்தப்பழம் வீதி,
அரியாலை.

தகவல்: குடும்பத்தினர்.
077 672 9422



### திருமதி இலட்சுமி சின்னராசா (சாமி)

கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இலட்சுமி சின்னராசா (சாமி), நேற்று (21.02.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி கிருஷ்ணன் குழந்தை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற மாதன் சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சின்னராசாவின் (சாமி) பாசமிகு மனைவியும் கிஷோராஜின் (லண்டன்) அன்புத் தாயாரும் டெசிந்தா (டெசி) இன் அன்பு மாமியும் கிருத்திக்கின் அன்புப் பேர்த்தியும் சாரதாதேவி (டென்மார்க்), அற்புதராஜா (ஜேர்மனி), ரதிதேவி (டென்மார்க்), தவராசா (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.02.2018) வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

## பணியாளர் தேவை

1. விற்பனை பிரதிநிதிகள் ( ஆண்கள் மட்டும்)
2. மில்வேலை செய்யக் கூடியவர்கள் தேவை. (ஆண், பெண்)

077 772 2215.
No - 15, 4 th Lane . Brown Road, Jaffna. 076 822 7546

## வீடு வாடகைக்கு தேவை

யாழ்ப்பாணம், நல்லூர்ப் பகுதியில் சிறிய வீடு வாடகைக்குத் தேவை.

077 236 7451

## ஒத்துமாறல்

பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் நிதி வடமாகாண திணைக்கள முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு யாழ்நகருக்கு அண்மித்த பகுதியிலுள்ள அலுவலகங்களிலிருந்து ஒத்துமாற விரும்புபவர் தொடர்பு கொள்ளவும். (14121)(16,17)

071 606 0590

## பெயர் மாற்ற அறிவித்தல்

கனகராயன்குளம் வடக்கு, வவுனியாவில் வசிக்கும் **வயித்தியநாதன் கணேசன்** ஆகிய நான் எனது பெயரை இன்றுமுதல் **வயித்தியநாதன் கணேசலிங்கம்** என பெயர் மாற்றம் செய்ய உள்ளதை இத்தால் இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசு மக்களுக்கு அறியத்தருவதுடன், இன்றிலிருந்து சகல ஆவணங்களிலும் **வயித்தியநாதன் கணேசலிங்கம்** என கையொப்பம் இடுவேன் என்பதை அறியத்தருகின்றேன். (cs 14101) (13.17)

## பெயர் மாற்றம்

5 வீடமைப்புத் திட்டம் நாவற்குழியில் வசிக்கும் **அருளானந்தம் பவுல்** ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை **அருளானந்தம் இலங்கநாதன்** எனப் பெயர் மாற்றம் செய்வதோடு ஆவணங்களிலும் இப் பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை ஜனநாயக குடியரசுக்கும் மக்களிற்கும் அறியத்தருகின்றேன்.

(cs 14108) (13.17) **அருளானந்தம் இலங்கநாதன்**

THE HALO TRUST

## அலுவலக உதவியாளருக்கான பதவிவெற்றிடம்

ஹலோ ரஸ்ட் ஆனது பிரித்தானியாவை தளமாகக் கொண்டு உலகளாவிய ரீதியில் 17 நாடுகளில் இயங்கிக்கொண்டிருக்கிறது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருள்களை அகற்றிக்கொண்டிருக்கின்றது.

ஹலோட்ரஸ்ரின் வேலைக்காக அலுவலக உதவியாளருக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவர்களின் அத்தியாவசிய சேவைகளாவன,

1. நாளாந்தம் அலுவலகம் மற்றும் அதைச்சூழவுள்ளபகுதிகளைத் துப்புரவுசெய்தல்.
2. நிழற்பிரதி எடுத்தல், கோவையிடல், புத்தகம் கட்டுதல், லெமி னேற்றிங் செய்தல் மற்றும் கோரப்படும் ஏனைய பணிகளைச் செய்தல்.
3. உணவு தயாரித்தல். ( வெளிநாட்டவர்களுக்கான உணவு தயாரிப்பு)

யாழ்.நல்லூர் பிரதேசங்களை நெருங்கி வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன

ஆர்வமுள்ளவர்கள் உங்களுடைய சுயவிவரக்கோவை மற்றும் தொடர்புகொள்ளவேண்டிய விவரங்களை கீழ் உள்ள முகவரிக்கு எதிர்வரும் 28ஆம் திகதி மாசிமாதம் 2018 புதன் கிழமைக்கு முன்னதாகச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**ஹலோட்ரஸ்ட்,**
**12,நல்லூர் குறுக்குத்தெரு,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.** (akn.381) (13.17)



## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 13.01.2018 அன்று சிவ பதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் தாமு பேரின்பநாதன்

(ஓய்வுநிலை பொறியியலாளர் - இலங்கை வங்கி)

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (22.02.2018) வியாழக்கிழமை பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவிருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

"ஈஸ்வரி இல்லம்"
சூராவத்தை, சுன்னாகம்.

குடும்பத்தினர்.
077 615 8800, 021 224 0507

## கண்ணீர் அஞ்சலி



எனது நண்பன் காலஞ்சென்ற **விக்னேஸ்வரனின்** அன்புத் தந்தை

### நாகமுத்து சண்முகநாதன்

(உரிமையாளர் - சுகபாணி ஸ்ரோர்ஸ் யாழ்ப்பாணம், முன்னாள் பொருளாளர் - ஸ்ரீநாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை நயினாதீவு)

அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

பொற்பதி வீதி,
கொக்குவில்.

துயருறும்
பொ.சந்திரமோகன்

(cs 14097) (13.17)

## நெஞ்சம் மறவாத 5ஆம் ஆண்டு நினைவுநாள்



### அமரர் இராஜகுமார் ரவிராஜ்

அன்னை மடியில்
12.05.1989

ஆண்டவன் அடியில்
22.02.2013

ஆண்டுகள் ஐந்து கடந்தாலும்
அவனியில் உன்னை மறப்பது உண்டோ?
ரவி என செல்லமாக அழைத்த எங்கள் தெய்வம்!
ஆறாது என்றும் உன் நினைவுகள்


சிறுவிளான்,
இளவாலை.

உன் திருமுகம் காணாமல் வாடும்
பாசமுள்ள அம்மா, அண்ணா, தம்பி

(CS.14023)

# கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்கள் அதிகரிப்பு

## நவம்பர் மாத உற்பத்தியில் 4.4 வீதமாக பதிவு




**கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்கள் (ஜனவரி 2016 - நவம்பர் 2017)**

2016 ஆம் ஆண்டின் நவம்பர் மாத உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாத உற்பத்தியில் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் அளவீடானது 4.4 வீதத்தால் அதிகரித்துள்ள தகவலை தொகைமதிப்பு மற்றும் புள்ளி விபரப் பணிப்பாளர் நாயகம் அமர சதரசிங்க வெளிப்படுத்தியுள்ளார்.

2016 ஆம் ஆண்டின் நவம்பர் மாதத்துடன் ஒப்பிட்டு நோக்குமிடத்து, கைத்தொழில் உற்பத்தியில் உள்ளடங்கும் 'பான வகைகள் உற்பத்தி', 'மரம் மற்றும் மரம் சார்ந்த உற்பத்திகள்' மற்றும் 'வீட்டுத் தளபாடங்கள்' ஆகியன முறையே 21.8 வீதம், 12.2 வீதம் மற்றும் 11.1 வீத வீழ்ச்சியைக் காட்டுகின்றன.

2017 ஆம் ஆண்டு நவம்பர் மாத உணவு உற்பத்தியானது 3.4 வீத அதிகரிப்பை வெளிக்காட்டியுள்ளது.

தவிர, உற்பத்திக் கைத்தொழில்களில், 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாத உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாத உற்பத்திகளில் 'கோக் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றொலிய உற்பத்திகள்' 26.5 வீதமாகவும், 'வடிவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள்' 23.6 வீதமாகவும் மற்றும் 'அடிப்படை உலோக உற்பத்தி பொருள்கள்' 17.0 வீதமாகவும் பதிவாகியுள்ளதுடன் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக் காட்டுகின்றன. 2016 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாத உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டின் ஒக்ரோபர் மாத உணவு உற்பத்தியானது 4.5 வீத அதிகரிப்பை காட்டுகிறது.

கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது முதன்மைப் பொருளாதாரக் குறிகாட்டியாக உள்ளதுடன் அவை குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் கைத்தொழில் உற்பத்தியின் அளவில் ஏற்படும் குறுகிய கால மாற்றங்களை வெளிப்படுத்துகின்றன. (ஓ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### 3ஆவது....

கொழும்பு, பெப். 22

பேருந்தில் சாரதி இருக்கையின் பக்கம் உள்ள மூன்றாவது வரிசை ஆசனத்திலேயே குண்டு வெடித்தது என்று பொலிஸார் முதல் கட்ட விசாரணைகளில் கண்டறிந்துள்ளனர்.

பேருந்து பண்டாரவளையில் இருந்து அதிகாலை 5.10 மணியளவில் பயணத்தை ஆரம்பித்துள்ள நிலையில் 5.20 மணியளவில் கஹகொல்லவை அடைந்துள்ளது. மூன்றாவது வரிசை ஆசனத்தில் அமர்ந்திருந்த ஒருவர் தான் கொண்டுவந்த கறுப்பு நிறப் பையை எடுக்கும் போது அந்தப் பையானது கீழே விழுந்துள்ளது. இதன் போது பெரிய சத்தம் கேட்டுள்ளது. பேருந்தில் தீயும் பரவ ஆரம்பித்துள்ளது. பேருந்தில் பயணம் செய்தோரிடம் பெறப்பட்ட வாக்குமூலங்களிலிருந்து இவை தெரிய வந்தன என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

"நான் அதிகாலை 5.10 மணியளவில் பேருந்தை பண்டாரவளையில் இருந்து இயக்க ஆரம்பித்தேன். யாழ்ப்பாணப் பேருந்தில் வந்த சிலர் எமது பேருந்தில் ஏறினர். அவர்களையும் சேர்த்துக் கொன்டு நாம் தியதலாவை நோக்கி செல்லும் போது கஹகொல்ல பகுதியில் பெரிய சத்தம் கேட்டது. பேருந்தும் தீ பிடிக்க ஆரம்பித்தது. நான் உடனடியாக பேருந்திலிருந்து இறங்கிவிட்டேன். உண்மையில் பேருந்தில் எந்தக் கோளாறும் இல்லை. ஏனெனில் பேருந்தின் நடுப்பகுதியில் இருந்தே தீ பரவ ஆரம்பித்தது. அங்கு தீ பிடிக்கும் அளவுக்கு எதுவும் இல்லை." என்று பேருந்தின் சாரதி தெரிவித்தார்.

"நாம் பண்டாரவளையில் இருந்து பயணத்தை ஆரம்பித்தோம். யாழில் இருந்து வந்தவர்கள் அந்தப் பேருந்திலிருந்து எமது பேருந்துக்கு மாற்றப்பட்டனர். பேருந்தில் ஏற்றப்பட்ட ஒருவரின் பையில் ஏதோ இருந்தது. அதுவே வெடித்தது." என்று பேருந்தில் பயணித்த ஒருவர் குறிப்பிட்டார்.

"எனது அருகில் இருந்த இராணுவச் சிப்பாயின் பையிலேயே ஏதோ இருந்தது. திடீரென வெடிப்புச் சத்தம் கேட்டதும் அந்தப் பை எரிய ஆரம்பித்தது. அது எனது காலையும் சேர்த்து எரித்துவிட்டது." என்று சம்பவத்தில் காயமடைந்த பெண் ஒருவர் கூறினார். (ற-5,71)

### விடாது...

பின்னரும் 2 கோடி ரூபா விவகாரம் முற்றுப் பெறவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நாடாளுமன்றத்தில் நேற்று சிறப்புரிமை பிரச்சினையை எழுப்பினார்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவு வழங்க அபிவிருத்தி என்ற பெயரில் 2 கோடி ரூபா இலஞ்சம் பெற்றுக் கொண்டதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் எம்மீது குற்றம் சுமத்தினார். இதனால் எமது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது. இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன், சபாநாயகர் கரு ஜெயசூரியாவிடம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனின் சிறப்புரிமை பிரச்சினைக்கு, நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் பதலளிக்க முனைந்தார். நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரனும், ஈ.சரவணபவனும் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தனது உரையை தொடர்ந்து நிகழ்த்தி வந்தார். அப்போது சபாநாயகர் கரு ஜெயசூரிய, நீங்கள் பேச்சை நிறுத்திக்கொண்டு அமருங்கள் என்று பலமுறை கூறிய போதும் அதனைப் பொருட்படுத்தாமல் சிவசக்தி ஆனந்தன் தனது உரையை நிகழ்த்தினார்.

இதனையடுத்து சபாநாயகர் கரு ஜெயசூரிய கடுமையாக கோபமடைந்து, "நீங்கள் அமரப் போகின்றீர்களா? இல்லையா?. அமருங்கள். மூன்றாவது தடவையாக கூறுகின்றேன் அமராவிட்டால், கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டி வரும்" என்றார். பின்னர் சிவசக்தி ஆனந்த தனது பதிலை இடைநடுவே நிறுத்தி விட்டு அமர்ந்தார்.

அப்போது எழுந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன், சிவசக்தி ஆனந்தனின் உரையை ஹன்சாட் அறிக்கையில் இருந்து நீக்க வேண்டும் என்று கோரினார். (ற-5,31)

### பாதுகாப்பு...

ராஜபக்சவின் ஆட்சியில், கடந்த 9 ஆண்டுகளுக்கு முன்னர் இல்லாதொழிக்கப்பட்ட பேருந்துக் குண்டு வெடிப்பு கலாசாரம் மீண்டும் தலைதூக்கியுள்ளதா என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. இது மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதிக்கக்கூடியது. குண்டு வெடிப்பு சம்பவத்தின் உண்மை நிலையை அரசு நாட்டுக்கு தெளிவுபடுத்த வேண்டும். இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா தெரிவித்தார்.

மகிந்த அணியின் செய்தியாளர் சந்திப்பு பொரளை என்.எம். பெரேரா நிலையத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

எமது நாட்டில் கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர் பேருந்துக் குண்டுவெடிப்புக் கலாசாரம் தாராளமாக இருந்தது. கெப்பெற்றிப்பொலாவ பேருந்துக் குண்டு வெடிப்பின் பின்னர் அந்தக் கலாசாரம் இல்லாது செய்யப்பட்டது. அதற்கான வேலைத்திட்டத்தை முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச மேற்கொண்டிருந்தார்.

மீண்டும் அந்தக் கலாசாரம் தலைதூக்கியுள்ளதா என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. ஏனெனில் இன்று காலை (நேற்று) பண்டாரவளை காகொள்ளவில் பேருந்தில் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து வந்த பிரயாணிகளை குறித்த பஸ் வண்டியில் மாற்றிய பின்னரே வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது மிகவும் பயங்கரமான விடயமாகும். இவ்விடயத்தில் அரசு உரிய கவனம் செலுத்துவதுடன் உண்மை நிலையை பாதுகாப்பு பிரதானிகள் நாட்டுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

நாட்டின் பாதுகாப்பு தற்போது பெரியளவில் சீர்குலைந்துள்ளது. இதனால் மக்களின் சாதாரண வாழ்க்கை சவாலுக்குட்பட்டுள்ளது. நாட்டில் தற்போது பாதுகாப்பு, பொருளாதாரம் உள்ளிட்ட சகல துறைகளும் சிக்கலுக்குட்பட்டுள்ளது. மக்களின் ஆணையை மதித்து பொதுத் தேர்தலை நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (ற-5,61)

2ஆம் பக்கத் தொடர்ச்சி

### மோசடி...

ஆணைக்குழு அறிக்கைகள் நேற்றைய தினம் (நேற்று முன்தினம்) விவாதத்திற்கு எடுத்துகொள்ளப்படவிருந்தன. இவை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவிருந்த நிலையில் கூட்டு எதிர்க்கட்சி சார்பில் நானே விவாதிக்க தயாரானேன். எனினும் ஆணைக்குழுவின் அறிக்கை தமிழ் மொழியில் இல்லாத காரணத்தினால் தம்மால் விவாதத்தில் ஈடுபட முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சபையில் முரண்பட்டார்.

அவரது கோரிக்கையின் நியாயத்தை கருத்தில் கொண்டு விவாதத்தை பிற்போட முடியும் என்பதை நானும் ஏற்றுக்கொண்டேன். எனினும் அதன் பின்னர் ஆராய்ந்து பார்த்ததில் கடந்த 6 ஆம் திகதி நடத்தவிருந்த விவாதத்தின் போது மொழி பெயர்ப்பு பிரச்சினையினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளிபடுத்தவில்லை. நாடாளுமன்ற செயற்பாடுகள் தொடர்பிலான கூட்டத்திலும் இந்தப் பிரச்சினையினை முன்வைக்கவில்லை. அப்போதெல்லாம் வாய்மூடி இருந்த சுமந்திரன் ஏன் இறுதி நேரத்தில் விவாதத்தை குழப்பினார்.

ஏனெனில் பிணைமுறி அறிக்கை குறித்து நாம் சபையில் முன்வைக்கவிருந்த காரணிகளை தடுக்க வேண்டும் என்ற தேவை அரசுக்கு இருந்தது. தலைமை அமைச்சரும் நெருக்கடியில் இருந்த நிலையில் இவர்கள் இரு தரப்பும் இணைந்து முன்னெடுத்த சதியென நான் சபையில் குற்றம் சுமத்துகின்றேன் எனக் குறிப்பிட்டார்.

இதன்போது சபையில் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன். வாசுதேவ நாணயகார கூறும் கருத்து தவறானது. நிலையியல் கட்டளைக்கு அமையவும் இது தவறானது. 1970 ஆண்டுகளில் இருந்து நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வாசுதேவ நாணயகார இந்தக் காரணி குறித்து தெரிந்திருக்க வேண்டும். கடந்த 6 ஆம் திகதி விவாதம் நடத்தப்படவிருந்த நிலையில் கூடிய கட்சி தலைவர்கள் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பில் தெரிவித்தேன். விவாதத்தை பிற்போட எமக்கு எந்தத் தேவையும் இல்லை. அறிக்கைகள் ஆங்கிலத்தில் இருக்கும் நிலையில் விவாதத்திற்கு முன்னர் அறிக்கை தமிழ் மொழியில் வழங்கபட வேண்டும் என கோரியிருந்தேன். சிங்கள அறிக்கையை வைத்து எம்மால் விவாதத்தை நடத்த முடியாது. அவ்வாறு இருக்கையில் வாசுதேவ நாணயகார போன்றவர் என்னுடைய இந்த கோரிக்கைக்கு முரண்படுவது ஆச்சரியமாக உள்ளது. நான் சட்ட ரீதியில் ஏற்றுகொள்ளக்கூடிய காரணியை நான் முன்வைத்தேன் எனக் குறிப்பிட்டார்.

சபாநாயகர் பதிலளிக்கையில் தெரிவித்ததாவது. சுமந்திரன் முன்வைத்த காரணிகளை நீதி சார்ந்ததாக நான் கருதுகின்றேன். பெரிய எண்ணிக்கையான ஆவணங்களைக் கொண்ட அறிக்கை குறித்து விவாதம் நடத்துவது அவர்களுக்கு ஏற்ற மொழியில் இருக்க வேண்டும். மொழி மாற்று நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள தாமதமே இதற்குக் காரணமாகும். இதில் ஒருவருக்கு ஒருவர் குற்றம் சுமத்துவதில் அர்த்தமில்லை. அரச தலைவர் செயலகத்தில் இந்த அறிக்கையின் மொழிமாற்று பிரதிகளை முன்வைக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டுள்ளேன். விரைவில் அறிக்கை தருவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். எவ்வாறு இருப்பினும் சபையின் பூரண இணக்கப்பாட்டுடன் விவாதத்தை ஒத்திவைக்க தீர்மானம் எடுக்கப்பட்டது. எனினும் விவாதத்தை ஒத்திவைக்க ஆளும் கட்சியின் சார்பில் எந்த அழுத்தமும் கொடுக்கவில்லை என்பது நான் பொறுப்புடன் தெரிவிக்கின்றேன் - என்றார். (5.31)

### அரசியல்...

'மக்கள் நீதி மய்யம்' என்று அவர் பெயரிட்டுள்ளார். நடிகர் கமல் தனது அரசியல் பயணத்தை முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் வீட்டில் இருந்து நேற்று ஆரம்பித்தார். ராமேஸ்வரத்தில் அப்துல் கலாம் வீட்டில் அவரது சகோதரர் முகம்மது முத்து மீரான் மரைக்காயரை சந்தித்து வாழ்த்துக்களை பெற்றுக்கொண்ட கமல், பின்னர் பேய்க்கரும்பில் உள்ள கலாம் நினைவிடத்துக்குச் சென்று மரியாதை செலுத்திவிட்டு தனது பயணத்தை தொடர்ந்தார்.

மதுரையில் இரவு 7 மணியளவில் மாபெரும் பொதுக்கூட்டம் ஆரம்பமானது. பல்லாயிரக் கணக்கான மக்கள் மத்தியில் தனது கட்சியின் பெயரை அறிவித்தார் கமல். வெள்ளை நிற பின்னணியில் சிவப்பு நிறத்தில் கைகள் இணைந்திருப்பது போன்றும், நடுவில் கறுப்பு நிற பின்னணியில் வெள்ளை நிற நட்சத்திரம் உள்ளது போன்றும் கட்சிக் கொடி வடிவமைக்கப்பட்டுள்ளது. (ம)

## சைட்டம்...

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழகத்தின் உபவேந்தர், கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பீடாதிபதி மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட குழுவினர் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர். சைட்டம் தனியார் மருத்துவ கல்லூரியில் தற்போது கல்வி கற்றுவரும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களின் அடிப்படைத் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் அவர்களை இவ்வாறு இணைத்துக்கொள்வதற்கும் இந்தக்கலந்துரையாடலின்போதுதீர்மானிக்கப்பட்டது. (5)

## கூட்டு அரசு...

பொதுச்செயலரும் அமைச்சருமான மகிந்த அமரவீரவும் நாடாளுமன்றத்தில் இதனை நேற்று அதிகாரபூர்வமாக அறிவித்தனர்.
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் பொதுச்செயலர் மகிந்த அமரவீர சிறப்புக் கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது.
சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தொடர்ந்தும் கூட்டு அரசை முன்னெடுத்து செல்லும். ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஆட்சியினை முன்னெடுத்து செல்ல தீர்மானித்துள்ளது. இந்த அரசிலிருந்து நாம் நீங்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சிறிலங்கா சுதந்திர கட்சிக்கும் இடையில் கூட்டு அரசு தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்தக் காரணிகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுநிறைவேற்றப்பட்டுள்ளன. அந்த உடன்படிக்கைக்கு அமைய நாம் தொடர்ந்தும் உடன்படுகின்றோம். தொடர்ந்து கூட்டு அரசாக நாம் செயற்படுவோம் - என்றார்.
இதன்போது ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக, ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப் படும் என்று கூறுகின்றனர். கூட்டு அரசு இரண்டு ஆண்டுகளுக்கு மாத்திரமே என்று கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதி நாடாளுமன்றத்தில் தெரிவித்தீர்கள். உடன்படிக்கையிலும் இது உள்ளது. அவ்வாறெனில் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதியுடன் கூட்டு அரசின் உடன்படிக்கை காலாவதியாகின்றது. அதன் பின்னர் புதிய உடன்படிக்கை முன்வைக்க வேண்டிய தேவையும் உள்ளது. எனினும் உடன்படிக்கை காலாவதியான திகதியில் இருந்து இப்பொழுது வரையில் நான்கு மாதங்கள் கடந்துள்ளது. இந்த நான்கு மாத காலம் நீங்கள் இரண்டு தரப்பும் ஒன்றாகச் செயற்பட்டுளீர்கள். அமைச்சரவையில் ஒன்றாகச் செயற்பட்டுள்ளீர்கள். இந்த நான்கு மாதங்களில் 48 அமைச்சர்களும் செயற்பட்டுள்ளமை அரசமைப்புக்கு முரணானது. இந்த நான்கு மாதங்கள் எந்தவித உடன்படிக்கையும் இல்லாது நீங்கள் கூட்டு முன்னெடுத்துள்ளீர்கள் என்று குறிப்பிட்டார்.
அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவிக்கையில், உடன்படிக்கையை சபையில் வெளிப்படுத்த வேண்டிய அவசியம் எமக்கு வரவில்லை. அவ்வாறு தேவை ஏற்படின் நாம் முன்வைக்கத் தயார். கூட்டு அரசு ஒன்றை முன்னெடுக்கும் அனுமதி எமக்குக் கிடைத்துள்ளது. இரண்டு ஆண்டுகளும் நான்கு மாதங்களும் கடந்துள்ள போதிலும் கூட்டு அரசாகத் தொடர்ந்தும் முன்னெடுக்க பிரதான இரண்டு கட்சிகளும் இணக்கம் தெரிவித்துள்ளன. உடன்படிக்கையை சபையில் சமர்ப்பிக்க வேண்டிய தேவை இல்லை. கட்சிகள் இரண்டும் இணக்கம் கண்டுள்ள நிலையில் இதனை நாம் பெரிதாகக் கொள்ளத் தேவையில்லை - என்றார். (5.31)

## தமிழில்...

யில் அறிக்கை தரப்படவில்லை எனக் கூறி கூட்டமைப்பின் பேச்சாளர் கூச்சலிட்டதாக அறியமுடிகின்றது. சுமந்திரன் தமிழ் மொழி மீது கொண்டபற்றினால் இதனைச் செய்யவில்லை. ஐக்கிய தேசியக் கட்சிக்கு எடுபிடியாக செயற்பட்டு வருவதால் அந்தக் கட்சியின் தலைமை அமைச்சரான ரணிலை நாடாளுமன்றில் யாரும் விமர்சித்து விடக் கூடாது என்பதாலேயே அவர் அங்கு குரல் எழுப்பியுள்ளார். மாறாக தமிழ் மொழிக்காக அங்கு குரல் கொடுக்கவில்லை.
நாடாளுமன்றில் 19ஆவது திருத்தச் சட்டம் வந்த போது அதன் பிரதி தமிழில் வழங்கப்படவில்லை என்று கொழும்பைச் சேர்ந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் கேள்வி எழுப்பிய போது அதனை நகைப்புக்கு உரிய விடயமாக்கி இருந்தனர். இவ்வாறான நிலையில் தற்போது தமிழில் அறிக்கை தரவில்லை என்று கோசம் எழுப்புவது நகைப்புக்கு உரிய விடயமாகும் என்றார். (5.8)

## புதிய...

வில்லை. மைத்திரிபால சிறிசேன கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே நாம் அந்த முடிவுக்கும் வந்தோம். மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய தேசியக் கட்சியை நீக்கிவிட்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அரசு அமைப்பதாக தேர்தலுக்கு முன்னர் வாக்குறுதியளித்திருந்தார். ஆனால் தற்போது என்ன நடைபெற்றுள்ளது?
தற்போதைய நிலையில் அரசில் நாம் அங்கம் வகிக்காத போதும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களை பாதுகாக்க வேண்டிய கடப்பாடு எமக்குள்ளது. நாம் அதிகாரத்திற்கு வரும் வரையில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடங்களைப் பாதுகாக்க வேண்டும் - என்றார். (5.31)

## கூட்டு...

பத்தரமுல்லவில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ள வராபொல விபஸ்ஸி தேரரின் பூதவுடலுக்கு மகிந்த அஞ்சலி செலுத்தினார். அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது.
நாட்டில் தற்போது அரசு செயற்படுவதாகக் குறிப்பிட முடியாது. கூட்டு அரசின் புரிந்துணர்வு ஒப்பந்த காலம் நிறைவடைந்துள்ளது. அதனால் நாட்டில் தற்போது உறுதியற்ற நிலை ஏற்பட்டுள்ளது. அரச தலைவர் ஒரு முடிவிலும் தலைமை அமைச்சர் மற்றுமொரு தீர்மானத்திலும் அமைச்சர்கள் இன்னுமொரு தீர்மானத்திலும் உள்ளனர். கூட்டு அரசின் காலக்கெடு நிறைவடைந்துள்ளதனால் அது தொடர்பில் சபாநாயகர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் எதிர்கட்சித் தலைமை தொடர்பிலும் அவர் தீர்மானம் எடுக்க வேண்டும். அதிலிருந்து சபாநாயகர் விடுபட முடியாது.
நல்லாட்சி அரசு மாணவர்களுக்கு ரப் வழங்குவதாகக் குறிப்பிட்டது. அதனை அவர்களால் செய்ய முடியாது என அப்போதே நாம் எண்ணினோம். மாணவர்களுக்கு வழங்குவதாக வாக்களித்த ஒன்றை வழங்காதிருப்பது ஆரோக்கியமான விடயமல்ல - என்றார். (5.61)

## கூட்டு அரசு தொடரும்...

வர்தன தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை தினேஸ் குணவர்தன சிறப்புக் கூற்று முன்வைத்து உரையாற்றினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது.
கூட்டு அரசு தொடர்பில் தலைமை அமைச்சர் சபையில் முன்வைத்த உரையில் சிக்கல்கள் உள்ளன. அவரது நிலைப்பாட்டில் இருந்து தான் நாடாளுமன்றம் செயற்பட்டு வருகின்றது. அரசமைப்பு என்பது நகைப்பிற்குரிய விடயம் அல்ல. அரசமைப்புடன் விளையாடும் நேரமும் இது அல்ல. இன்று நாட்டில் சிக்கல்கள் எழுந்துள்ள நிலையில் நகைப்புக்குள்ளாக்கக் கூடாது. சபாநாயகர், தேவைப்படும் நிலையில் மீண்டும் நாடாளுமன்றத்தில் அனுமதியைப் பெற்றுச் செயற்பட முடியும் என்று கூறியுள்ளார். ஆகவே சபையின் அனுமதி வேண்டும் என்பதை சபாநாயகரும் ஏற்றுக்கொண்டுள்ளார். மேலும் செப்ரெம்பர் மாதம் உடன்படிக்கை முடிவுக்கு வந்த போதிலும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையில் உடன்படிக்கை நீடிக்கப்படுவதாக அமைச்சர்கள் தெரிவித்தனர். அரசின் எந்தவொரு தரப்பும் இதனை நிராகரிக்கவில்லை. இது ஊடகங்களில் முக்கிய செய்தியாக வெளிவந்துள்ளது.
டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையில் நாம் வேடிக்கை பார்த்தோம். இந்த உடன்படிக்கை என்னவென்பது குறித்து எதுவும் வெளியிட முடியாது என்று கூற முடியாது. இது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய உடன்படிக்கையாகும். பிரதான இரண்டு கட்சிகளும் என்ன உடன்படிக்கை வேண்டுமானாலும் செய்துகொண்டு ஆட்சியை நீடிக்கவோ அல்லது துண்டிக்கவோ முடியும்.
தலைமை அமைச்சருக்குப் பெரும்பான்மை ஆதரவு இருந்தால் தனி அரசை அமைத்துக் கொள்ளுங்கள். அது உங்களின் பிரச்சினையாகும்.
ஆனால் அரசமைப்பின் பிரகாரம் இந்த உடன்படிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதை சபாநாயகர் தெரிவித்துள்ளார். ஆகவே இரு தரப்பு உடன்படிக்கை சபையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இல்லையேல் கூட்டு அரசு செயற்பட முடியாது - என்றார். (5.31)

## வாய்...

விக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது.
கூட்டு அரசு இரண்டு ஆண்டுகளுக்கு மாத்திரம் செயற்படும் என்று உடன்படிக்கையில் இல்லை என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இந்தப் பிரேரணையில் அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரிப்புத் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதனைச் சாதாரணமாக முன்வைக்க முடியாது. இதற்கு இணக்கப்பாடு ஒன்று எட்டப்பட வேண்டும். இந்தப் பிரேரணையை முன்வைக்க முன்னர் இணக்கப்பாடு ஒன்றினை எட்டவேண்டிய தேவை உள்ளது. கூட்டு அரசு ஒன்று உருவாக்கப்பட்ட பின்னரே இவ்வாறான பிரேரணையை முன்வைக்க முடியும். கூட்டு அரசு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதாக அன்று நாடாளுமன்றத்தில் நீங்கள் தெரிவித்தீர்கள். அதற்கு அமையவே அமைச்சரவை அதிகரிக்கப்பட்டுள்ளது என்ற பிரேரணையையும் நீங்கள் முன்வைத்துள்ளீர்கள். கூட்டு அரசின் கால எல்லை வரையில் இந்தப் பிரேரணை செயற்படவேண்டும். கூட்டு அரசின் கால எல்லை முடிவடையும் நிலையில் இந்தப் பிரேரணையும் நிராகரிக்கப்பட்டுவிடும். அப்படியாயின் கூட்டு அரசு குறித்து செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை என்ன ? அந்த உடன்படிக்கை என்னவென்பதையே நாம் கேட்கின்றோம்.
அதேபோல் உடன்படிக்கை என்னவென்பதை போன்று அப்போது சிறிலங்கா சுதந்திர கட்சியின் பொதுச்செயலர் காலஞ்சென்ற விஸ்வவர்ணபால சமர்ப்பித்த கடிதம் என்னவென்பது குறித்தும் தெரியப்படுத்துங்கள். இந்த பிரேரணைகளுடன் தொடர்புபட்ட விடயங்கள் அவற்றில் உள்ளன.
ஜனவரி மாதம் அரச தலைவர் நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய உரையும் என்னிடம் உள்ளது. நாட்டின் தேசிய பிரச்சினையினை கருத்தில் கொண்டு கூட்டு அரசு ஒன்று உருவாக்கப்படுகின்றது என்று அவர் கூறியுள்ளார். இதற்காக இரண்டு ஆண்டுகள் முன்னெடுக்கும் வகையில் கூட்டு அரசு செயற்படும் என்று கூறியுள்ளார். ஆகவே அமைச்சரவை உருவாக்க முன்னர் கூட்டு அரசு இரண்டு ஆண்டுகளுக்குச் செயற்படும் என்று அரச தலைவர் தெரிவித்துள்ளார். இந்த முறைமை சாதகமாக அமையுமா என்பதை பரிசீலனை செய்துபார்க்கும் வகையில் இரண்டு ஆண்டுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட கூட்டு அரசு முன்னெடுக்கப்படும் என்று கூறியுள்ளார். கூட்டு அரசின் கால எல்லை இரண்டு ஆண்டுகள் என்பதற்கான மூன்று உறுதிப்பாடுகள் உள்ளன.
இந்த மூன்று காரணிகளுக்கு அமையவே கூட்டு அரசு உருவாக்கப்படும் பிரேரணை முன்வைக்கப்படுகின்றது. ஆகவே அமைச்சரவை குறித்த பிரேரணை இரண்டு ஆண்டுகளுக்கு மட்டுபடுத்தப்பட்ட வகையிலே கொண்டுவரப்பட்டுள்ளது. இரண்டு ஆண்டுகளைத் தாண்டி அரசு பயணிக்குமாயின் மீண்டும் உடன்படிக்கை நீடிக்கப்பட வேண்டும். கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதி இந்த உடன்படிக்கை செய்திருக்க வேண்டும். இன்று நீங்கள் நாடாளுமன்றத்தில் தொடர்ந்து கூட்டு அரசு பயணிக்கும் என்று கூறிய போதிலும் கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் தொடக்கம் இன்று வரையிலான கால எல்லைக்கும் பெரிய இடைவெளி உள்ளது. இந்தக் காலத்தில் கூட்டு அரசு இல்லை. இந்த இடைவெளியை தொடர்ந்தும் முன்னெடுக்க முடியாது. இப்போது பிரச்சினைகளை சமாளிக்க இவ்வாறான கருத்துக்களை கூற முடியாது. ஆகவே அடுத்த கால கட்டத்திற்கான கூட்டு அரசு முன்னெடுத்து செல்லும் உடன்படிக்கைகளை சபாநாயகரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அதே போல் அமைச்சரவையினை அதிகரிப்பது குறித்து மீண்டும் நாடாளுமன்றத்தில் அனுமதியினை பெற வேண்டும். ஆகவே அரசமைப்புக்கு முரணான வகையில் இனியும் அமைச்சரவை செயற்பட முடியாது - என்றார். (5.31)

## இனி...

அவதானம் செலுத்துவேன் என்று சபாநாயகர் கரு ஜெயசூரிய சபையில் தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை கூட்டு அரசு தொடர்பில் ஏற்பட்ட வாக்குவாதத்தை அடுத்து தனது நிலைப்பாட்டை அறிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது.
கூட்டு அரசு தொடர்பில் எனது முடிவினை அறிவிப்பதாக கூறினேன். இதன்படி இன்றைய தினம் (நேற்று) இரு பிரதான கட்சிகளும் தமது நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும் என்று கோரினர். அவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கினேன். கூட்டு அரசில் அங்கம் வகிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்க சுதந்திரக் கட்சியும் தொடர்ந்து பயணிப்பதாக இணக்கம் தெரிவித்துள்ள நிலையில் இதற்கு அப்பால் என்னால் எதுவும் செய்ய முடியாது - என்றார். (5.31)

## கூட்டு அரசு 2...

நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை ஒழுங்குப்பிரச்சினையொன்றை எழுப்பி உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது.
கூட்டு அரசு ஆட்சி அமைப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி கூறி நாடாளுமன்றத்தில் சிறப்புப் பிரேரணையொன்றை முன்வைத்தது. இதற்கு நாடாளுமன்றம் அனுமதி வழங்கியது. இதன் போது அமைச்சரவை எண்ணிக்கை தொடர்பில் திட்டவட்டமாகக் குறிப்பிட்டோம்.
ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சுதந்திரக் கட்சிக்கும் இடையில் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்ததை நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை. இந்த விடயம் இரு பிரதான கட்சிகளுக்கு உள்ள விடயமாகும். இந்த விவகாரம் தொடர்பில் இனிமேலும் விவாதம் தேவையில்லை. கூட்டு அரசு அமைக்க போவதாக நாடாளுமன்றத்தில் முன்வைத்த பிரேரணையில் கூட்டு அரசு இரு ஆண்டுகளுக்கு மட்டுப்படுத்தப்படும் என்று எங்கும் கூறப்படவில்லை.
கூட்டு அரசு தொடர்ந்து பயணிக்கும். இதன்படி 2 ஆண்டுகள் என்று அரச தலைவரும், தலைமை அமைச்சரும் கூறினாலும் பிரேரணையில் அவ்வாறு கூறப்படவில்லை - என்றார். (5.31)

## அரசியல்...

கட்சிகள் ஒன்றாக இணைந்து ஆட்சி அமைத்துள்ளன. எனவே முரண்பாடுகள் ஏற்படுவது வழமையாகும். அவற்றைச் சமாளித்து பயணிக்கின்றோம்.
**கேள்வி:** தலைமை அமைச்சரை மாற்றவேண்டும் என்ற கோரிக்கைக்கு என்ன நடந்தது?
**பதில்:** அப்படி எதுவும் இல்லை.
**கேள்வி:** அமைச்சரவைத் திருத்தம் வரும் எனத் தெரிகிறது. அப்படியாயின் தலைமை அமைச்சர் திருத்தம் முடிந்துவிட்டதா? பதில்: அது முடிந்துவிட்டது. கேள்வி: ரணிலை மாற்றவேண்டும் என்று சுதந்திரக்கட்சி தொடர்ந்து சொல்கின்றதே?
**பதில்:** ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறுகிறார்கள். ஆனால் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் சுதந்திரக்கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் ரணிலுடன் நன்றாகப் பேசிக்கொண்டனர். உண்மையில் அமைச்சரவைக் கூட்டத்தில் இரண்டு தலைமை அமைச்சர்களும் நன்றாகப் பேசிக் கொண்டனர்.
**கேள்வி:** யார் இரண்டாவது தலைமை அமைச்சர்?
**பதில்:** உங்களுக்குத் தெரியும்தானே. ஊடகங்களில் ஒருவரை தலைமை அமைச்சராக்கினீர்கள். அவர்தான்.
**கேள்வி:** அமைச்சர்களான தயாசிறியும், சுசில் பிரேமஜயந்தவும் அமைச்சரவைக் கூட்டத்திற்கு வந்தார்களா?
**பதில்:** அவர்கள் வரவில்லை.
**கேள்வி:** ஏன் வரவில்லை ?
**பதில்:** அவர்களிடமே கேட்கவேண்டும்
**கேள்வி:** அமைச்சரவை முடிவை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்புக்கு அமைச்சரவை பேச்சாளர் தயாசிறி ஜயசேகர ஏன் வரவில்லை ?
**பதில்:** தெரியவில்லை. அதை அவரிடம்தான் கேட்கவேண்டும்.
**கேள்வி:** தற்போது நல்லாட்சி தொடர்கிறதா?
**பதில்:** ஆம் கூட்டு அரசு தொடர்ந்துகொண்டிருக்கின்றது. அதில் எந்தச் சிக்கலும் இல்லை.
**கேள்வி:** எனினும் சட்டரீதியான தன்மை இல்லை எனக்கூறப்படுகின்றதே?
**பதில்:** அப்படியெல்லாம் சட்டரீதியான தன்மை தேவையில்லை. இரண்டுகட்சிகள் இணைந்து ஆட்சி அமைத்துள்ளன அவ்வளவுதான்.
**கேள்வி:** மகிந்த, ரணில் விக்கிரமசிங்கவுடன் தொலைபேசியில் உரையாடியதாக நீங்கள் கூறியதை மகிந்த மறுத்துள்ளாரே?
**பதில்:** அதனைத் தலைமை அமைச்சர் உறுதிப்படுத்தினார் அல்லவா ? இதன் மூலம் மகிந்த ராஜபக்ச இரண்டு பக்கங்களுக்கு இரண்டு விதமாக கூறுகின்றார் என்பது தெளிவாகின்றது. இதனால் மக்களே ஏமாற்றப்படுகின்றனர். வடக்கில் ஒன்றையும், தெற்கிற்கு ஒன்றையும் இவர் கூறுகிறார்.
இதனை மக்கள் புரிந்துகொள்ளவேண்டும். ஒருபுறம் ரணிலை அகற்ற அழுத்தம் பிரயோகிக்குமாறு சுதந்திரக் கட்சிக்கு கூறுகிறார். மறுபுறம் ரணிலை பதவிவிலக வேண்டாம் எனக் கூறுகிறார் என்றார். (5.61)

## வடமராட்சி பாடசாலைகளின் வலைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், பெப். 22
வடமராட்சிப் பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று வியாழக்கிழமை காலை 8 மணிமுதல் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன. இதில் 16 வயது 18 வயது மற்றும் 20 வயதுப் பிரிவினருக்கான ஆட்டங்கள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-108)



## மகிழ்ச்சி!

'நடப்புவருட ஐ.பி.எல். தொடரில், டோனியின் தலைமையில் சென்னை சுப்பர் கிங்ஸில் விளையாட இருப்பது மகிழ்ச்சி" என்று தெரிவித்தார் நியூசிலாந்து அணியின் சுழல்பந்து வீச்சாளர் சான்ட்நெர்.

"நான் பன்னாட்டு அரங்கில் டோனிக்கு எதிராக பந்துவீசியதை விட, சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் வலைப்பயிற்சியின் போது அவருக்கு பந்து வீச இருப்பது சிறப்பாக இருக்கும். சென்னை அணியுடன் இணைய இருப்பதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். அனுபவ வீரர்களான டோனி, ரெய்னா, ஜடேயா போன்ற வீரர்களுடன் பேசுவது, விளையாடுவது சிறப்பானதாக இருக்கும். ஐ.பி.எல். தொடர் போன்ற மிகப்பெரிய தொடரில் விளையாடுவது எனது உயரிய குறிக்கோள்களில் ஒன்று. அதிகளவான ரசிகர்களுக்கு மத்தியில் விளையாடுவது என்றும் தனிச் சிறப்பானது" என சான்நெர் மேலும் தெரிவித்தார். (ம)

# இலங்கை - இந்தியா - பங்களாதேஷ் முத்தரப்பு ரி-20 தொடர் மார்ச் மாதம்



இலங்கை - இந்தியா - பங்களாதேஷ் அணிகளுக்கு இடை யிலான முத்தரப்பு ரி-20 தொடர் மார்ச் மாதம் நடைபெறவுள்ளது.

இலங்கையின் 70ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்தத் தொடர் நடத்தப்படவுள்ளது. மார்ச் மாதம் 6ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை தொடரின் ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன. ஒவ்வொரு அணிகளும் மற்றைய அணிகளுடன் தலா 2 தடவைகள் மோதவேண்டும். லீக் சுற்றின் முடிவில் அதிக புள்ளிகளைப்பெறும் அணிகள் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெறும். ஆட்டங்கள் அனைத்தும் கொழும்பு பிரேமதாஸ மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

மார்ச் 6ஆம் திகதி இலங்கை எதிர் இந்தியா, மார்ச் 8ஆம் திகதி பங்களாதேஷ் எதிர் இந்தியா, மார்ச் 10ஆம் திகதி இலங்கை எதிர் பங்களாதேஷ், மார்ச் 12ஆம் திகதி இந்தியா எதிர் இலங்கை, மார்ச் 14ஆம் திகதி இந்தியா எதிர் பங்களாதேஷ், மார்ச் 16ஆம் திகதி பங்களாதேஷ் எதிர் இலங்கை, மார்ச் 18ஆம் திகதி இறுதியாட்டம் என்றவாறாக அட்டவணை அமைந்துள்ளது. (ம)

# உடுத்துறை ம.வி. இறுதிக்குத் தகுதி



யாழ்ப்பாணம், பெப். 22
வடமராட்சி கல்விவலய பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் உடுத்துறை மகா வித்தியாலய அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இந்த அரையிறுதி ஆட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து உடுத்துறை மகா வித்தியாலய அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தன அல்ல என்பதை நிரூபிக்கும் முகமாக விளையாடிக் கொண்டிருந்தன. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி.

இரண்டாவது பாதியாட்டத்தின் 11ஆவது நிமிடத்தில் உடுத்துறை மகா வித்தியாலய அணியின் கசிதன் தட்டிக்கொடுத்த பந்தை கௌதமன் கோலாக மாற்றினார். அதுவே ஆட்டத்தின் ஒரே கோலுமாக அமைய முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது உடுத் துறை மகா வித்தியாலய அணி. (ம-422-108)

## ஆஸி. சம்பியன்

*முத்தரப்பு ரி-20 தொடரில் நியூசிலாந்தைத் தோற்கடித்து கிண்ணத்தைக் கைப்பற்றியது ஆஸ்திரேலிய அணி.*

*ஆஸ்திரேலியா - நியூசிலாந்து - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முத்தரப்பு ரி-20 தொடரின் இறுதியாட்டம் நேற்று நடைபெற்றது. ஆஸ்திரேலியா - நியூசிலாந்து அணிகள் இந்த ஆட்டத்தில் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ரெய்லர் 43 ஓட்டங்களையும், முன்றோ 29 ஓட்டங்களையும், கப்ரில் 21 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அகர் 3 இலக்குகளையும். ரிச்சாட்சன், டை இருவரும் தலா 2 இலக்குகளைய்யும், ஸ்ரான்லேக், ஸ்ரொய்னிஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.*

*பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி 14.4 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 121 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மழை குறுக்கிட்டது. டக்வோர்த் லூயிஸ் முறைப்படி ஆஸ்திரேலிய அணி குறித்த பந்துப்பரிமாற்றங்களில் 103 ஓட்டங்களைப் பெற்றிருந்தாலே போதுமானது. இதனால் அந்த அணி 19 ஓட்டங்களால் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. (ம)*

# இமையாணன் மத்தி. – டயமன்ஸ் இறுதியில் இன்று எதிர்த்து மோதல்

கரவெட்டி பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் அணி இன்று மோதவுள்ளது. இமையாணன் மத்திய வி.கழக மைதானத்தில் இன்று மாலை 4 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. (ம-108)





# ஸ்கந்தா - மகாஜனாவின் 'வீரர்களின் போர்' நாளை


ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி


மகாஜனாக் கல்லூரி அணி

யாழ்ப்பாணம், பெப். 22

வீரர்களின் போர் என வர்ணிக்கப்படும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் இடையிலான இரண்டு நாள்களைக் கொண்ட டெஸ்ட் ஆட்டம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நாளை ஆரம்பமாகிறது.

2001ஆம் ஆண்டு இந்தத் தொடர் ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை 17 ஆட்டங்கள் நடைபெற்றுள்ளன. 18ஆவது ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது. முடிவடைந்த 17 ஆட்டங்களில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி 4 ஆட்டங்களிலும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி 3 ஆட்டங்களிலும் வெற்றிபெற்றுள்ளன. 10 ஆட்டங்கள் சமநிலையில் முடிவடைந்தன.

நடப்பு வருடத்துக்கான ஆட்டத்தில் பதிலடி கொடுத்து 4:4 எனச் சமப்படுத்த ஸ்கந்தவரோதயக் கல்லூரி முனைப்புக் காட்டும். ஆனால் தனது சொந்த மைதானத்தில் ஸ்கந்தாவின் ஆதிக்கத்தை மகாஜனா அனுமதிக்காது. மொத்தத்தில் விறுவிறுப்புத் தன்மை ஆட்டத்தில் இருக்கவே செய்யும்.

மகாஜனக் கல்லூரி அணி - ரி.தயுஸ்ரன் (தலைவர்), எம்.சுஜீபன் (உபதலைவர்), வி.கிரிசாந், ஆர்.சுயன், எம்.ரஜிந்தன், எஸ்.டினேஸ், என்.ஜனுசன், கே.கிருசான், எம்.பகிரதன், ஆர்.தனிஸ்தன், எஸ்.சர்மிலன், கே.சுஜித், எஸ்.சதுர்ஜன், எஸ்.சாருஜன், எஸ்.கபில்தாஸ், எஸ்.ஜேம்சன்.

ஸ்கந்த்வரோதயக் கல்லூரி அணி - வி.அஜிந்தன் (தலைவர்), ஏ.தனுசன் (உபதலைவர்), எஸ்.டனுஸ்ராஜ், கே.நிதர்ஜன், ஏ.ராகுலன், ரி.ஜேசுரன், கே.ரெக்சன், ஜெ.கலிஸ்ரன், எஸ்.டிலக்சன், எல்.லக்சன், எஸ்.சோபிதன், எஸ்.பிரசான், எஸ்.டன்சன், பி.கஜதீபன். (ம-23)

## இன்றைய மோதல்கள்



யாழ்ப்பாணம், பெப். 22

நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மனோகரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நியூட்டன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அண்ணாசிலையடி அணி மோதவுள்ளது. (ம-23)

## மன்னார் கல்விவலய கரப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், பெப். 22

மன்னார் கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் 16, 18, 20 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டங்கள் பேசாலை பற்றிமா மத்திய மகா வித்தியலாய மைதானத்தில் எதிர்வரும் வெள்ளி, சனிக்கிழமைகளில் இடம்பெறவுள்ளன. (ம-23)

## அன்ரனிஸ் இறுதியில்

யாழ்ப்பாணம், பெப். 22

முல்லைத்தீவு கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டமொன்றில் சென். அன்ரனிஸ் அணி கடும் போராட்டத்தின் பின்னர் வெற்றி பெற்றது.

இரணைப்பாலை சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த அரையிறுதி ஆட்டத்தில் இரணைப்பாலை சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து சுப்பர்றாங் விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஓர் கோலைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் சென். அன்ரனிஸ் அணி வெற்றி பெற்றது. (ம-23)

## இந்துவின் மாணவன் சம்பியன்

யாழ்ப்பாணம், பெப். 22

யாழ்ப்பாண மாவட்ட பூப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் இரு பாலாருக்குமான பூப்பந்தாட்டத் தொடரில் 19 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் ஒற்றையர் ஆட்டத்தில், அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய உள்ளரங்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் கீர்த்தனனை எதிர்த்து உடுவில் மான்ஸ் பாடசாலையைச் சேர்ந்த லூஜித் மோதினார்.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 21:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய கீர்த்தனன், இரண்டாவது செற்றிலும் ஆதிக்கம் செலுத்தி அந்த செற்றை 21:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார். முடிவில் அவர் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றார். (ம-23)

## செம்மலை சக்தி அணி கிண்ணம் வென்றது




யாழ்ப்பாணம், பெப். 22

கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட எல்லே தொடரில் ஆண்கள் பிரிவில் செம்மலை கிழக்கு சக்தி விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.

வித்தியானந்தக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது. செம்மலை கிழக்கு சக்தி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கள்ளப்பாடு உதயம் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கள்ளப்பாடு உதயம் விளையாட்டுக் கழக அணி 30 பந்துகளில் ஒரு ஓட்டத்தைப் பெற்றது. அர்ஜுன் அந்த ஓட்டத்தைப் பெற்றுக் கொடுத்தார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய செம்மலை கிழக்கு சக்தி விளையாட்டுக் கழகம் 12 பந்துகளில் வெற்றிபெற்றது. நிதுசன், ராஜ் இருவரும் தலா ஓர் ஓட்டத்தைப் பெற்றனர். (ம)

## பாடும்மீன் அசத்தல்

யாழ்., பெப். 22

நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணி வெற்றிபெற்றது.

கலைவாணி விளையாட்டுக் கழக மைதானத்தில் இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது. பாடும்மீன் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதியது. 5:1 என்ற கோல் கணக்கில் பாடும்மீன் அணி வெற்றி பெற்றது. (ம-23)

# சிறீபதி அணி கிண்ணத்தைத் தனதாக்கியது



கிளிநொச்சி, பெப். 22
பச்சிலைப்பள்ளி பிரதேச எல்லே தொடரில் ஆண்கள் பிரிவில் சிறீபதி விளையாட்டுக் கழகம் கிண்ணம் வென்றது.
கடந்த வாரம் இறுதியாட்டங்கள் இடம்பெற்றன. ஆண்கள் பிரிவு இறுதியாட்டத்தில் சிறீபதி அணியை எதிர்த்து சென். பீற்றர் விளையாட்டுக் கழக அணி மோதியது. முதலில் விளையாடிய சிறீபதி அணி 2 ஓட்டங்களைப் பெற்றது. மூன்று ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சென். பீற்றர் அணி ஒரு ஓட்டத்தை மட்டும் பெற்றது. இதையடுத்து ஓர் ஓட்டத்தால் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது சிறீபதி விளையாட்டுக் கழக அணி.

(ம-6)



## கிவித்தோவா சம்பியனானார்

கட்டார் ரென்னிஸ் தொடரில் செக் குடியரசு வீராங்கனை கிவித்தோவா கிண்ணம் வென்றார்.
நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் பன்னாட்டுத் தரப்படுத்தலில் மூன்றாம் இடத்தில் உள்ளவரான முகுருசாவை எதிர்த்து கிவித்தோவா மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 3:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இழந்தார் கிவித்தோவா. எனினும் சரிவில் இருந்து மீண்ட அவர் அடுத்த இரண்டு செற்களையும் முறையே 6:3, 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் கிண்ணம் வென்றார். (ம)

## பெடரர் கிண்ணம் வென்றார்

றொட்டர்டம் ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் கிண்ணம் வென்றார் சுவிற்சர்லாந்து வீரர் றோயர் பெடரர்.
ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 6:2, 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றார் பெடரர்.



பெடரரை எதிர்த்து பல்கேரிய வீரர் டிமிட்ரோவ் மோதினார். மூன்று செற்களைக் கொண்டரர். இந்த ஆட்டம் வெறும் 52 நிமிடங்களில் முடிவுக்கு வந்தது.

இந்தத் தொடரில் அரையிறுதிக்குத் தகுதி பெற்றதன் மூலம் பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடம் பிடித்திருந்தார் பெடரர். கிண்ணம் வென்றதை அடுத்து அவர் தனது முதலிட அந்தஸ்தை அடுத்த சில வாரங்கள் தக்க வைக்கக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. (ம)

# ரியல் பெடிஸை வீழ்த்திய மட்ரிட்



ஸ்பானியக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ரியல் மட்ரிட் அணி அபார வெற்றிபெற்றது.
ரியல் மட்ரிட்டை எதிர்த்து ரியல் பெடிஸ் மோதியது. ஆட்டத்தின் 11ஆவது நிமிடத்தில் அசென்சியோ மட்ரிட்டின் முதல் கோலைப் பதிவுசெய்தார். மன்டி, நாச்சோ முறையே 33ஆவது, 37ஆவது நிமிடங்களில் ரியல் பெடிசின் சார்பாகக் கோல்களைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 1:2 என்ற அடிப்படையில் ஆட்டம் கண்டது மட்ரிட்.
ஆட்டத்தின் 50ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட் அணியின் தலைவர் ராமோஸ் ஒரு கோலைப் பதிவுசெய்தார். 59ஆவது நிமிடத்தில் அசென்சியோ மற்றொரு கோலைப் பதிவுசெய்தார். றொனால்டோ 65ஆவது நிமிடத்தில் கோலொன்றைப் பதிவுசெய்ய 4:2 என்ற கோல் கணக்கில் ஆதிக்கம் செலுத்தியது மட்ரிட். 85ஆவது நிமிடத்தில் சேர்ஜியோ ரியல் பெடிசின் கோலைப் பதிவுசெய்தார். பென்சிமா 90ஆவது நிமிடத்தில் மட்ரிட்டின் ஐந்தாவது கோலைப் பதிவுசெய்ய முடிவில் 5:3 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது ரியல் மட்ரிட்.

(ம)

## போதிய ஓய்வில்லை என்கிறார் வோர்ணர்

பன்னாட்டு கிரிக்கெட் சபையின்அட்டவணை மிகவும் இறுக்கமாக உள்ளது. வீரர்களுக்கு போதிய ஓய்வு கிடைப்பதில்லை என்று தனது அதிருப்தியைத் தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் வோர்ணர்.
"நாங்கள் சிறப்பாக விளையாடினாலும், விளையாடவிட்டாலும் ஓய்வு என்பது அவசியம். ஆஷஸ் தொடருக்கும் ஒருநாள் கிரிக்கெட் தொடருக்கும் இடையிலான இடைவெளி மிகவும் குறைவானதாகும். இங்கிலாந்து டெஸ்ட் அணியில் விளையாடிய நான்கு ஐந்து வீரர்கள் மட்டுமே ஒருநாள் தொடரில் இடம்பிடித்துள்ளனர். இங்கிலாந்து டெஸ்ட அணி ஆஷஸின் பின்னர் நடைபெற்ற ஒருநாள் தொடரைக்கைப்பற்றுவதற்கு இது முக்கிய காரணமாகஅமைந்தது. ஓய்வு என்பதைக் கவனத்தில்கொண்டு பன்னாட்டு கிரிக்கெட் அட்டவணையை அமைக்க வேண்டும்" என வோர்ணர் மேலும் தெரிவித்தார்.

(ம)

**வீடு விற்பனைக்கு**
பருத்தித்துறை பிரதான வீதி கோப்பாயில் 3 பரப்புக் காணி கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.
077 431 2593,077 895 1751

அறிமுகம் - Rs 250/=
**சிக்கன்பிரியாணி**
ப்றைட் சிக்கன் - றைஸ் & பைட்ஸ்
Fried Chicken - Rice & Bites
யாழ் பாடியில் 49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6868, 077 736 0353, 075 987 5800
(C-58237) (13,17)

**வேலையாள்கள் தேவை**
கிளிநொச்சியில்
புதிதாக இயங்கவுள்ள ரெஸ்ரோரண்டுக்கு
பின்வரும் வேலையாள்கள் தேவை
- காசாளர்
- கணக்காளர்
} பெண்கள் (கணினி அறிவு உடையவர்கள்).
- பராமரிப்பாளர் - ஆண்கள் - சமையற்காரர்கள் - உதவியாளர் - பெண்கள்
முன் அனுபவம் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.
தொடர்புகளுக்கு: 077 251 0134

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.02.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.